Registered as a News Paper in Sri Lanka

දිනමුරසු වාරමලර්

பக்கம் 20

மே 07 - 13, 2000

ரூபா 12/00

# வாரமலர் தினமுரசு

THINAMURASU SRI LANKA'S NATIONAL TAMIL WEEKLY

முரசு 355

ஈழத்தின் இணையற்ற எழுத்தாளன் எஸ்.டி.எஸ். -சிறப்புக் கட்டுரை-

## ஆனையிறவு வீழ்ச்சியும் கொந்தளிக்கும் உணர்ச்சிகளும்



## தலையணை ஜோசியம்

## கமலின் 'வால்' தனம்

# முரசம்

## இதுதான் தருணம்!

**அன்புள்ள உங்களுக்கு,**
**வணக்கம்.**

ஆத்திரப்படுபவர்கள்,
எதிர்ப்புத் தெரிவிப்பவர்கள்,
எதையுமே
நிராகரிப்பவர்கள்,
இனப்பிரச்சனையே
இல்லையென
இறுமாப்புக்
காட்டுபவர்கள் ஆகியோர்
சிந்திக்கவேண்டிய
தருணம் இது.

இந்த இறுமாப்பும்
பிடிவாதமும்
அகம்பாவமும்
என்னத்தைச்
சாதித்தன?

ஆனையிறவு முகாமும்
வீழ்ந்துவிட்டது!

இதற்கு மிஞ்சியும்
இறுமாப்பும்
பிடிவாதமும்
தேவைதானா?

இல்லையென
வில்லங்கமாய் நின்றால்,
அடுத்து
யாழ்ப்பாணமும்
வீழ்ந்துவிடாதா?

சமாதானத்துக்கான
எந்தவொரு
சிறு சந்தர்ப்பத்தையும்
சிதைத்துவிடக்
கங்கணம் கட்டியிருந்த
பேரினவாதக் கொழுப்பு
இன்று
சரணாகதிக்கு
இட்டுச் செல்லவே
வழிவகுத்து
வருகிறது என்பதை
இந்த இறுதித் தருணத்திலும்
உணர வேண்டாமா?

பண்டா–செல்வா
ஒப்பந்தத்தைக்
கிழித்தெறிந்தனர்;
டட்லி–செல்வா
ஒப்பந்தத்தைக்
கிழித்தெறிந்தனர்;
இந்திய–இலங்கை
ஒப்பந்தத்தையும்
குப்பையில் வீசினர்.
இறுதியாக
மத்தியஸ்தத்துக்கு
முன்வந்துள்ள
நோர்வே நாட்டுக்கும்
எதிர்ப்புத் தெரிவித்தனர்.

இவ்வாறு எல்லாவற்றையும்
தாக்கி வீசிய
இனவாத சக்திகளால்
அதன் விளைவாக
இன்று
ஆயிரக் கணக்கான
இராணுவ வீரர்கள்
பலியாகி மடிவதற்குப்
பதில் கூற முடியுமா?

இராணுவத் தீர்வுக்கு
முனைந்தவர்கள்
இராணுவத்தையே
இழந்துவருகின்ற
நிலமையைக் கண்டாவது
மனம்மாற வேண்டாமா?

நோர்வே வேண்டாம்,
பேச்சுவார்த்தை வேண்டாமென
ஊர்வலம் நடத்திய
புத்தபிக்குகளும்
இனவாதக் குழுக்களும்
ஆனையிறவு வீழ்ந்ததற்கு
என்ன சொல்லப்போகிறார்கள்?

அவர்களா போர்முனைக்குச் சென்று
போராடப் போகிறார்கள்?
ஏழ்மையில் வாடும்
கிராமத்து இளைஞர்களையல்லவா
ஏமாற்றி அழைத்துப்
பலிக்களம் அனுப்புகிறார்கள்!

இப்போதாவது இவர்கள்
சிந்திக்க வேண்டும்.

இப்போதும் சிந்திக்காவிட்டால்
சிந்திப்பதற்கு
இனியொரு காலம்
இல்லாமலே போய்விடும்.

யுத்தத்தின் கருவியான
ஆயுதப் படைகளே
இன்று
அரசியல் தீர்வுதான்
தீர்வுக்கு வழியென
ஒப்புக் கொண்டுவிட்டன.
ஆனையிறவுத் தோல்வியின்பின்
நடத்திய
பத்திரிகையாளர் மாநாட்டில்
படைத் தளபதிகள்
இதையே தெரிவித்தனர்.
இராணுவமே
அரசியல் தீர்வைக்
கோரும்போது,
இறுமாப்புக் கொண்ட
இவ்வினவாதக் கோஷ்டியினர்
இராணுவத்தீர்வை
இன்னும் வலியுறுத்தினால்
அது வேடிக்கையல்லவா?

இப்போதாவது சிந்திக்கட்டும்!
கொழுந்துவிட்டெரிந்த
83, ஜூலைக் கலவரச்
சாம்பலில் நின்றுகொண்டு
அன்றைய ஜனாதிபதி
ஜே. ஆர். அறைகூவினார்
"போரா சமாதானமா?" என்று.
இன்று
அதே கேள்வி
அவர்களை நோக்கியே
திரும்பியுள்ளது.

இப்போதாவது
நியாயமான தீர்வொன்றை
வழங்குவதற்கு
சிங்களத் தலைமைகள்
ஒருவருக்கு ஒருவர்
குழிபறிக்கும் அரசியலைக்
கைவிட்டு
ஒன்றாக முன்வந்தால்
அழிவைத் தடுக்கலாம்.
சிந்திப்பார்களா?

மீண்டும் மறுமடலில்
வந்து கலக்கும்வரை

என்றென்றும் அன்புடன்,
ஆசிரியர்.

# ஆன்மீகம்



## இன்பமும் துன்பமும்

உலக வாழ்க்கை நிலையானதல்ல. இந்த உண்மையை உணராதவர் எவருமில்லை. நிலையற்ற வாழ்க்கையை விட்டு விலகி எவரும் எங்கும் ஓடிவிடுவதில்லை. தேனில் விழுந்த ஈ போல அதே வாழ்க்கையில் கிடந்து உழலவே விரும்புகிறான் மனிதன்.

வாழ்க்கை இன்பமானதுதான். ஆனால் அந்த இன்பம் நிலைப்பதில்லை. ஒருவன் தன் வாழ்வில் இன்பத்தை எவ்வளவு தூரம் மகிழ்ச்சியுடன் அனுபவிக்கிறானோ, அதே அளவு துன்பத்தையும் தன் வாழ்நாளில் அனுபவித்தேயாகவேண்டும்.

இன்பத்தை அனுபவிக்கும் வேளையில் ஆண்டவனை சிலர் நினைப்பதில்லை. இறைவனே எனக்கு இந்த இன்பத்தை அருளினான் என்று கருத மாட்டார்கள். அதே போல் துன்பப்படும் போது இறைவனைத் திட்டித் தீர்ப்பவர்களைக் காண்கிறோம். 'கண் கெட்ட கடவுள் என்னை ஏன் இப்படி வருத்துகிறான்?' என்று வருந்துவார்கள்.

துன்பம் வாட்டும் போது, அத் துன்பதுயரங்களிலிருந்து தன்னை மீட்டருளுமாறு இறைவனை இறைஞ்ச வேண்டும், நோய் நொடிகளால் துயருறும் போதும் இறைவனை வேண்டி நிவர்த்தி பெற வேண்டும். அப்போது தான் புயல் போல் பொங்கி வரும் துயரம் பனிபோல் மறைந்துபோகும்.

நாம் செய்யும் நன்மையும் தீமையுமே நம் வாழ்வில் மகிழ்ச்சியையும் துன்பத்தையும் தேடித்தருகின்றன. ஆகவே கூடுமானவரை தீமையை விலக்கி நன்மை செய்யுங்கள் துன்பத்தை நீக்கி இன்பமாக வாழ அதுவே வழிவகுக்கும். -ஞானேந்திரன்-

## கோபம் ஷைத்தானின் செயல்

ஒரு முறை அமீர் முஆலியா (ரலி) அவர்களின் ஆட்சியின் போது பெரும் பொருளாதார நெருக்கடி ஏற்பட்டது. இதனால் வறியவர்களுக்கு வழங்கிவந்த உபகாரச் சம்பளத்தை நிறுத்தும்படி முஆலியா உத்தரவிட்டார்.

மு ஆலியாவின் அவையில் அமர்ந்திருந்த இமாம் அபூ முஸ்லிம் கவ்லானி இச் செயலுக்கு எதிர்ப்புத் தெரிவித்தார்.

இதனால் கோபமடைந்த முஆலியா (ரலி) நிலை குலைந்து தன் அவையை விட்டு வெளியில் சென்று சிறிது நேரத்தின் பின் மீண்டும் அங்கு வந்து அமர்ந்தார்.

இதனைப் பார்த்துக் கொண்டிருந்த கவ்லானி "எங்கு சென்று வருகின்றீர்கள்?" என மு ஆலியாவிடம் கேட்டார்.

அதற்கவர் "கவ்லானியே! உங்கள் மீது கொண்ட கோபக் கனலை அணைப்பதற்காக நான் இப்போது குளித்து விட்டு வந்திருக்கிறேன். 'கோபம் ஷைத்தானின் செயல்' ஷைத்தான் நெருப்பினால் படைக்கப்பட்டவன். நெருப்பை 'நீர்' தான் அணைக்கும் என்பதில் நபிகளார் பொன் மொழி!"

எம்.சி.கலீல். கல்முனை-05.

## நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்

திருடன் திருடவும், கொல்லவும், அழிக்கவும் வருகிறனேயன்றி வேறொன்றுக்கும் வரான். நானோ அவைகளுக்கு ஜீவன் உண்டாயிருக்கவும், அது பரிபூரணப்படவும் வந்தேன்.

தேவன் ஆதாமுக்குள் வைத்திருந்த தேவ சாயல், தேவ மகிமை, தேவ ஐக்கியம், தேவ சமாதானம், இவைகளை பாவத்தின் மூலம் பிசாசு திருடிக் கொண்டான்.

சாத்தானால் திருடப் பட்ட இந்த ஆசீர்வாதங்களை மறுபடியும் மனிதனுக்கு கொடுக்கும் படியாகவே தேவகுமாரனாகிய கிறிஸ்து வெளிப்பட்டார்.

ஆதாம் மூலம் இழந்து போன நித்திய ஜீவனை மறுபடியும் நமக்கு தருவதற்காக சிலுவையில் தன் ஜீவனை கொடுத்தார். (ரோமர் 6:22-23)

ஒரு மனிதன் இயேசு கிறிஸ்துவை தன் உள்ளத்தில் ஏற்றுக்கொள்ளும் போது அழியாத நித்திய ஜீவனை பெற்றுக் கொள்கிறான்.

சாத்தானால் திருடப்பட்ட எல்லா ஆசீர்வாதங்களையும் மீளப் பெற்று கொள்கிறான். ஆகவே கிறிஸ்துவை தம் உள்ளத்தில் ஏற்றுக் கொள்ளும் ஒவ்வொருவருக்கும் ஆசீர்வாதங்களைக் கொடுக்க ஆயத்தமாக இருக்கிறார்.

இந்த பரிபூரண ஜீவனை நீயும் ஏன் பெற்று கொள்ளக் கூடாது, பாவத்தை விட்டு மனந்திரும்பி இயேசுவை ஏற்றுக்கொள். நித்திய ஜீவனைப் பெற்றுக் கொள்.

அப்போது நீயும் கிறிஸ்துவுடையவன்(ள்). தொகுப்பு-திருமதி.மாகிறட் கனேசன், கொழும்பு-06

## கவிதைப் போட்டி இல.355



எண்ணத்தில் தோன்றும் கவிதைகளை வார்த்தைகளின் எண்ணிக்கை அதிக மில்லாமல், தபாலட்டையில் மட்டும் பதிவு செய்து அனுப்பிவையுங்கள். அனுப்பப்படவேண்டிய கடைசித் திகதி: 13.05.2000

கவிதைப் போட்டி இல.355
தினமுரசு வாரமலர், த.பெ. இல-1772, கொழும்பு.

## பரிசுக்குரிய கவிதை — கவிதைப் போட்டி இல. 352

### எம்முடனே வா!

செல்லக்கிளியே இங்கே பார்!
செட்டையடித்து துடிப்பதேன்?
பற்றார் உன்னைக் கொத்தியே
பலமைல் தூரம் விரட்டினரோ?
எம்முள் நீயும் சேர்ந்து கொள்
எமது துயரில் இணைந்து நில்!

பசறையூர் மல்லிகா பத்மநாதன்.

### இடம் உள்ளவரை இடம் பிடித்துள்ள வியக்க வைத்த கவிதைகள்

### சொந்தமென



பெற்ற சொந்தம்
விட்டுப் போனாலும்
பேசும் கிளியோ-எனை
சுற்றி நிக்குது.

தெ.லோஜனா-கொழும்பு 15.

### ஏமாற்றம்

இன்னல் நிறைந்த இலங்கையில்
இன்று வரும் நாளை வரும்
இதமான தீர்வென்று
எண்ணி எண்ணி எதிர்பார்த்து
இலவு காத்த கிளி போல
ஏமாறும் தமிழர்கள் நாம்!

சீ.தங்கவடிவேல்-மட்டக்களப்பு.

### யுத்த அவலம்!

கூடு கட்டி வசித்த கிளி
கிழவனின் கையில்!
வீடு கட்டி வாழ்ந்த கிழவன்
யுத்தத்தின் பிடியில்!

ந.ரதீஸ்வரன்-தம்பிலுவில் 02.

### பறி போனது

நிலத்தோடு
என் வீடும்
பறிபோனது!
மரத்தோடு
உனது கூடும்
பறிபோனதோ?

த.நகுலேஸ்வரன்-
மட்டக்களப்பு.

### இழப்பு

இனவாதம் அடித்த குண்டால்
இழந்தேன் என் வீட்டை
இயல்வானம் இடித்த இடியால்
இழந்தாயா உன் கூட்டை?

ப.அம்பிகாபதி-புளியங்குளம்.

### சமாதான இணக்கம்

வெண்புறாவைத் தூதுவிட்டனர்,
அண்மிக்கவுமில்லை-அமைதி;
பச்சை கிளியை விட்டுப் பார்க்கிறேன்
பச்சைக் கொடி காட்டுவாரா என்று?

ம.சுகிர்தா-மன்னார்.

### சிறை

கிளியே!
உன் நிலைதான் எம் தமிழினத்துக்கும்
அகப்பட்டால் ஆயுள் பரியந்தம்
சிறைவாசம்
அன்றேல் காணாமற்போனோர்
பட்டியலில்.

ம.கொ.தயாநிதி- மன்னார்.

### நமக்கு விடிவில்லை!

ஆழ்பவருக்கும்
எதிர்ப்பவருக்கும் பேச்சி
இடையிடையே.
மஞ்சள்களின் ஏச்சி
மிஞ்சிடுமா
நடுவினிலே
நாமிருவர் மூச்சு?

ஹப்புத்தளையூர்-எப்.லெனாட்குமார்.

### எதிர்பார்ப்பு

சொல்வதையே சொன்னது
போதுமம்மா!
புத்தாண்டிலாவது
புதிதாய் ஏதும் சொன்னால்...
புலம்பெயர்ந்தோர் நெஞ்சம் ஆறும்.

ஆ.ஜெகதீஸ்வரன்-புசல்லாவ.

### பிரிவுத் துயர்

நீயும் நானும்
ஒன்று என்கிறாயா....,
சொந்தங்களை
இழந்ததில் இருந்து...?

ரீ.காட்சிகன்-செங்கலடி.

### ஒற்றுமை

கிளியே!
நீயும் கூண்டிற்குள்;
ஏனெனில் உன் அழகு;
நாமும் கூண்டிற்குள்;
ஏனெனில் நாம் தமிழர்.

ந.மதி-மோதர.

### துயரப் பரிமாற்றம்

கடைசிக் காலந்தனில்-தான்
கட்டிக் காத்த பிள்ளைகள்
கைவிட்ட கதையினை
கூறியழக் கிடைத்த தோழன்
கிளிப் பிள்ளை தானோ?

ரம்லா ரவுஸ்டீன்-நாவலப்பிட்டி.

# வாசக(ர்)சாலை

அன்புள்ள ஆசிரியர்க்கு!

இலங்கையில் வாழும் நமது தமிழினம் படும் துன்ப துயரங்களடங்கிய இராணுவ அரசியல் விடயங்களை எமது எதிர்கால சந்ததியினர் அறிந்து புரிந்து கொள்ளும் வகையில் புத்தக வடிவில் வெளியீடு செய்தால் ஒரு சரித்திரமாக உபயோகப்படும் என்பது எனது அவா. எனவே இந்த சீரிய பணியை செய்வீர்களா?

எஸ்.எம்.இராமஜெயம்-டிக்கோயா.

ப்ரியமான முரசே!

சிறுவர் பகுதியில் மாணவர்களுடைய ஆக்கங்களையும் சேர்த்தால் நன்றாக இருக்கும். புலிகளின் வெற்றியின் இரகசியத்தை இன்னும் கொஞ்சம் அதிகரிக்க செய்தால் என்ன? இடி அமீனின் கதையை தொடர்ந்து தரும் அழகனுக்கு இவ்விடத்தில் நன்றியை தெரிவித்து கொள்கின்றேன். சிந்தியா பதில்களுக்கு கேள்விகளை அனுப்பினால் பதில் வருவதற்கு மிகவும் தாமதம் எடுப்பது ஏன்?

மேலும் உன் பணி தொடர வாழ்த்துகிறேன்.

ஏ.எல்.முஹம்மட் றஸ்மி-
அட்டாளச்சேனை-02.

நெஞ்சங்கவர்ந்த முரசுக்கு!

உன்னைப் படித்து மகிழ்பவள் எழுதுவது-சுவையான செய்திகள் பல அடக்கிய நீ பரிசுத் திட்டங்களையும் மேற்கொள்கிறாய். அதற்கு எனது பாராட்டுக்கள், 'நகைச்சுவை', 'சிறுகதை' போன்ற பல அம்சங்களை உள்ளடக்கிய நீ மேலும் முன்னேறி மக்கள் மத்தியில் புகழ் பூத்த பத்திரிகையாக விளங்க எனது பாராட்டுக்களும் வாழ்த்துக்களும்.

சு.தர்மினி-வவுனியா.

### சூடு, சுவை, சுவாரசியம்!

'அல்பிரட் துரையப்பா முதல் காமினிவரை' தொடரை அற்புதன் மிக அற்புதமாகவே தொடர்ந்தார். ஆனால் முற்றுப் பெறு முன்னர் அவரையே முடித்துவிட்டார்கள். இருப்பினும் அத்தொடரின் இறுதிக்கட்டமும் கிட்டத்தட்ட முடிந்தது போலத்தான் இருந்தது.

இன்று அற்புதனின் தொடரைப் போல் 'சத்தியன்' தரும் 'புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்' தொடர் சுவையாகவும் விறுவிறுப்பாகவும் அமைந்துள்ளது. இதுவரை அறியப்படாத பல இரகசியங்களை அம்பலப்படுத்துகிறார் எழுத்தாளர். அவ்வியக்கத்தவர்களின் சாணக்கியம் இக்கட்டுரை மூலம் தெட்டத் தெளிவாக விளக்கப்பட்டு வருகிறது.

அற்புதன் இல்லாத விடத்தும், அவர் தொடங்கிய பணி சூடு, சுவை, சுவாரசியம் குன்றாமல் வீறு நடை போடுவதைப் பாராட்டாமல் இருக்கமுடியாது. பலப்பல புதுப்புது அம்சங்களும் வெளிவந்து கொண்டு எம்போன்ற வாசகர்களுக்கு விருந்தாகின்றன.

முரசின் பணி தொடர எனது பிரார்த்தனைகள்.

சீ.பார்த்திபன்-திருமலை.



என் அபிமான முரசே! நீண்ட நாளைக்குப் பின் ஸ்போர்ட்ஸ் நியூஸ் பார்த்ததில் பெரு மகிழ்ச்சி. சுடச்சுட விளையாட்டுச் செய்திகளை விபரங்களுடன் முந்திக் கொண்டு தருவதில் முன்நிற்பது முரசு என்பதில் சந்தேகமில்லை. சந்தோஷப்படுகிறேன். ஒவ்வொரு மலரிலும் ஸ்போர்ட்ஸ் நியூஸ் இடம்பெறுவது சந்தேகமே. கவனத்தில் கொள்ளவும். அனைத்து தகவல்களும் என்னை வியக்க வைக்கின்றன. தொடரட்டும் உன்பணி வாழ்த்துக்கள்.

எம்.எம்.இமாம் ஹஸன்,
ஹெம்மாதகம.

தமிழ் முரசே,

உனது வழியே தமிழ் வழிதான். தமிழனின் தலை எழுத்து மாறுமா? தலைநகர் தாக்குதல் தொடருமா? மஹாநாயக்கர்களின் எதிர்ப்பு அமைதியை தூண்டுமா? ஜனாதிபதி வாக்குறுதி நிறைவேறுமா? எதிர்க் கட்சியின் திட்டம் நிறை வேறுமா? தமிழ் கட்சிகள் அனைத்தும் மௌன விரதமா? அமைதி தீர்வுக்கு அரைக் கம்பமா? மக்கள் கவலை தீருமா? முரசில் விடை காண காத்திருப்பேன். எனது வாழ்த்துக்கள்.

த.தியாகமூர்த்தி,
மலையூர்.

என் காதல் முரசே!

*என் வாழ்க்கையோ துன்பம்-அதில்*
*உன் நினைவுகளோ இன்பம்-அதை*
*நீ அறியாயோ என்றும்-இதை*
*நான் சொல்லவோ இன்னும்*
*மொத்தத்தில் நீ சுமந்து வரும்*
*அனைத்தும் சொர்க்கம்!*

நீ சுமந்து வருவதை குறிப்பாக என்று சொல்ல வேண்டுமானால் ஒவ்வொன்றும் ஒவ்வொரு விதத்தில் அருமையாக இருக்கிறது. ரசிக்கும் படியாகவும் இருக்கிறது. என் நன்றிகளை சொல்ல வார்த்தையே இல்லை. நீ நீடூழிகாலம் நிலைத்து நின்று உன் பணியை தொடர வாழ்த்துகின்றேன்.

லோரன்ஸ் நிரோஷினி, குளோரியா
ஸ்டொக்ஹோம், சுவீடன்.

முத்தான முரசே!

352வது முரசில் ஆன்மீகம் பகுதியில் சைவம், கிறிஸ்தவம், இஸ்லாம் ஆகிய மும்மதக் கருத்துக் குவியல்களுக்கும் இடம் கொடுத்திருந்தது வரவேற்கத்தக்கது. 'மன்னாதி மன்னன்' கதையின் ஆரம்பமே மிக அறிவு பூர்வமாக அமைந்து வந்தது. அசத்தலான கதை. 'விக்கிர மாதித்த பூபதியின் கதை' இதனை உங்களது எழுத்துப்பாணியில் படிக்க ஆவலாயுள்ளேன். வாசகர்சாலையில் எழுதப்படும் சில விடயங்களை கவனத்திற் கெடுத்தால் நல்லது. தொடர்ந்துவரும் 'சிகப்பு வணக்கம்' சுவையூட்டுகின்றது. நன்றி

அ.அரசரெத்தினம், சேனையூர்-6.

மடல்கள் மற்றும்
ஆக்கங்கள்- உட்பட சகல
தொடர்புகளுக்கும்:
தினமுரசு வாரமலர்,
த.பெ.இல:-1772, கொழும்பு.
தொலைபேசி: 074-514282
தொலை நகல் (Fax):- 074-513266

# புலிகளை எதிர்த்துப் போராட இந்தியப் படைகள்?

## அன்று எதிர்த்தவர்கள் இன்று வரவேற்கின்றனர்!

**இலங்கையில் இன்று இடம்பெறும் மோதல்களைத் தீர்த்து வைப்பதற்கு அன்னிய நாட்டின் உதவி அவசியம்தேவை என்ற புதுக் குரல் ஒன்று ஒலிக்கத் தொடங்கி உள்ளது. குறிப்பாக அயல் நாடான இந்தியாவே உதவிக்கு வரவேண்டுமென்று கோரிக்கை இடப்பட்டிருக்கிறது.**

**1987ம்** ஆண்டு ஏற்படுத்தப்பட்ட இலங்கை-இந்திய ஒப்பந்தத்தின்படி இங்கு அமைதியை நிலை நாட்டுவதற்கென கூறிக் கொண்டு வந்து சேர்ந்த, இந்திய அமைதிப் படையை உடனடியாக விரட்டி அடிக்க வேண்டுமென்று பெருங்குரலெழுப்பி கர்ஜித்த பௌத்த சங்கத்தினரே இப்பொழுது உதவிக்கு வரவேண்டுமென்று கோரிக்கை விட ஆரம்பித்திருக்கின்றனர்.

இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்காக சமாதானப்படையாக அல்லாமல் தனி நாடு கோரிப் போராடும் விடுதலைப் புலிகளை முறியடித்து அடக்கி ஒடுக்குவதற்காக இந்தியா இராணுவ ரீதியில் உதவ இங்கு வந்து சேர வேண்டும் என்று இவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்தப் பிராந்தியத்தில் இந்தியா ஒரு பலம் பொருந்திய நாடாகவும் 'சார்க்' நாடுகளில் ஒரங்கமாகவும் இருப்பதனால், அதே அமைப்பில் அங்கம் வகிக்கும் இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு உதவி செய்ய வேண்டும், என்றும் இவர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இந்த நாட்டில் இனப்பூசல்கள் ஒழிந்து நிரந்தரமான சமாதானம் நிலைபெற வேண்டுமானால் வேறொரு நாட்டின் மத்தியஸ்தத்துடன் சம்பந்தப்பட்ட தரப்பினர் பேச்சு வார்த்தைகள் நடத்த வேண்டும் என்று பல தரப்பிலிருந்தும் குரல்கள் எழுந்தன. ஆனால் இலங்கை அரசாங்கம் மட்டுமல்ல, "எங்கள் நாட்டு பிரச்சனையில் அன்னியர் தலையிட வேண்டிய அவசியமில்லை!" என்று குரல் கொடுத்த பலரும் இப்பொழுது இந்தியாவின் இராணுவ ரீதியிலான உதவியை கோருகின்றனர்.

மகா சங்கத்தின் பிரதிநிதிகள் இந்தியத் தூதரகத்தின் அதிகாரிகளைக் கண்டு தமது வேண்டுகோளை சமர்ப்பித்துள்ளனர்.

இத்தகைய திடீர் மனமாற்றத்துக்கு என்னதான் காரணம் என்பதை அறிந்து கொள்ள முடியாமல் அரசியல் அவதானிகள் தடுமாறுகின்றனர்.

'பிளவுபடாத இறைமையுடைய இலங்கையே எமது கருத்தாகும்' என்று அண்மையில் இந்திய அதிகாரிகள் தெரிவித்த கருத்துக்கள்தான் மகா சங்கத்தினரை இந்த முடிவுக்கு கொண்டு வந்திருக்க வேண்டுமோ என்றும் அரசியல் அவதானிகள் ஐயுறுகின்றனர்.

ஏற்கனவே பல்லாயிரக் கணக்கான படைவீரர்களுடனும் ஆயுதத் தளபாடங்களுடனும் இலங்கை வந்திருந்த இந்திய அமைதிப் படையினர் தமது நோக்கம் சிறிதளவேனும் நிறைவேறாத நிலையில் விரக்தியுடன் திரும்பிச் சென்றனர்.

இலங்கைக்கு அமைதிப்படையாக வந்து காரியம் கைகூடாமல் திரும்பிச் சென்றமைக்காக இந்தியாவின் உள்ளும் அயல் நாடுகளிலும் இந்தியப் படைகள் படுமோசமான விமர்சனங்களை எதிர் கொண்டனர். இந்த நிலையில் இலங்கை அரசாங்கமே வேண்டுகோள் விடுத்தாலும் கூட, இலங்கை விவகாரத்தில் இந்தியா மீண்டும் தலையிடும் என்று கருதுவதற்கு இடமேயில்லை என்ற அபிப்பிராயமே பரலாக எழுந்துள்ளது.

இஸ்ரேல், அமெரிக்கா, சீனா, பாகிஸ்தான் போன்ற நாடுகளின் உதவியையாவது பெற்றாக வேண்டும் என்று ஆங்கில தினசரியான 'தி ஐலண்ட்' தனது முன்பக்க தலையங்கத்தில் கூறியிருக்கிறது.

இந்நாட்டுக்கு நோர்வே பல வகையிலும் பேருதவி வழங்கி வருகிறது. இந்த நாட்டில் அமைதியை ஏற்படுத்துவதற்கு தன்னாலான மட்டும் முயற்சிகளை மேற் கொள்வதற்கு தானாகவே முன்வந்தது. இலங்கை அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் கூட நோர்வேயின் தலையீட்டை மறுதலிக்காமல் வரவேற்றுள்ளனர். அந்த நாடும் தனது பங்கினை நிறைவேற்றுவதற்கு ஏதுவாக பூர்வாங்க ஏற்பாடுகள் அனைத்தையும் செய்தும் விட்டது. இந்நிலையில் நோர்வேயை புறக்கணித்து விட்டு பிறிதொரு நாட்டின் உதவியை கோருவது எந்தவகையில் நியாய மாகும் என்று பலரும் வினவ ஆரம்பித்துள்ளனர்.

இத்தனை அநர்த்தங்கள் நிகழ்ந்த பின்னும் வேறொரு நாட்டின் இராணுவ உதவியுடன் விடுதலைப்புலிகளை வெற்றி கொள்ள நினைப்பது வேதனை தருவது மட்டுமல்லாமல் வெட்கப்பட வேண்டிய ஒரு விடயமுமாகும் என்று முதுபெரும் அரசியல்வாதி ஒருவர் கூறுகிறார்.

"போர் என்ற வார்த்தையை அகற்றி விட்டு அமைதிக்கான வழியைத் தேடுவதே புத்திசாலிக்கான பலம்!" என்றார் அவர்.

## ரணிலும்–சந்திரசேகரனும்

**ம**லையக மக்கள் முன்னணித் தலைவர் பெ.சந்திரசேகரன் பா.உ. இல்லம் சென்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவும் குழுவினரும் 30ம் திகதி ஞாயிற்றுக்கிழமை உரையாடினர். தற்போது நாட்டில் நிலவும் நிலமைகள் குறித்தும் தமிழ் மக்களுக்கு எதிராக இடம்பெறும் அச்சுறுத்தல்கள் பற்றியும் இருவரும் கலந்துரையாடினர்.

## புலிகள் ஊடுருவுவதற்கு ஐ.சி.ஆர்.சி உதவுகிறதா?

**வி**டுதலைப் புலி உறுப்பினர்களை தலைநகரான கொழும்புக்கு வடபகுதியில் இருந்து கொண்டு வருவதற்கு சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் பயன்படுகிறது என்று ஒரு புதிய குற்றச்சாட்டு அந்த அமைப்பின் மீது தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

யாழ்ப்பாணத்திலிருந்து ஒன்பது தமிழ் நோயாளிகளை சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் கொழும்புக்கு அழைத்து வந்தது. அவர்களை கொழும்பு தேசிய மருத்துவமனையில் சேர்ப்பதற்கான ஆவணங்களை தயாரித்துக் கொண்டிருந்தபோது அந்த ஒன்பது நோயாளிகளில் இருவர் திடீர்ரென மாயமாக மறைந்து விட்டனர். எஞ்சிய ஏழுபேருமே மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திடீரென தலைமறைவாகிய இருவரும் நோயாளிகள் என்ற போர்வையில் கொழும்பு நகருக்குள் ஊடுருவ வந்த விடுதலைப் புலி உறுப்பினர்களே என்று இப்பொழுது பொலிஸார் தீர்மானித்துள்ளனர்.

இதே போன்று முன்னரும் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கம் நோயாளிகள் என்ற பெயரில் விடுதலைப்புலிகளை தலை நகருக்கு கொண்டு வந்து சேர்ந்திருக்கலாம் என்று பொலிஸார் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் மீது சந்தேகத்தைக் கிளப்பியுள்ளனர்.

## கல்முனையில் மே தினம்!

**க**ல்முனை நகரத்தில் மே தினத்தன்று நடைபெற்ற ஒருவித பதட்டத்தைத் தவிர்த்து தொழிலாளிகளின் உரிமையைப் பேண கல்முனைப் பொலிஸார் உதவினர்.

அன்றுகாலையில் கடைகளில் வேலை செய்யும் தொழிலாளர்கள் தமக்கு "இன்று விடுமுறை வழங்கப்பட வேண்டும்" என்று கூறி வீதிக்கு இறங்கி ஆர்ப்பாட்டத்தில் லீடுபட்டனர். சில முதலாளிமார் மேதினத்தையும் பாராது கடைகளை திறந்து வேலை செய்ய பணித்ததே இதற்குக் காரணமாகும்.

"இன்றாவது எமக்கு விடுமுறை வழங்கக் கூடாதா?" என்று அவர்கள் கேட்டனர். அவர்களில் சிலர் கல்முனை பொலிஸ் நிலையத்திற்குச் சென்று முறையிட்டனர். மேலும் கல்முனை பிரதேச செயலாளர் ஏ.எல்.எம். பழிலிடம் சென்று கோரிக்கைவிடுத்தனர்.

உடனயாக பொலிஸார் கல்முனை கடைத்தெருவுக்கு வந்து ஆர்ப்பாட்டத்தை தடுத்து கடைகளை மூடுமாறு கோரினர். அதற்கிணங்க காலை 10.00 மணியளவில் கல்முனை பஸார் கடைகள் மூடப்பட்டன.

## அதிபர்களுக்கான பயிற்சி!

## ஆசிரியர்கள் புறக்கணிப்பு

(காரைதீவு நிருபர்)

**தி**றமைவாய்ந்த ஆசிரியர்களை அதிபராக பயிற்றுவிக்கும் திட்டத்திற்கு ஆட்சேர்ப்புக்காக கோரியபோது, வடகிழக்கில் சில வலயக்கல்வி அலுவலகங்கள் ஆசிரியர்களைப் புறக்கணித்து அலுவலகத்தில் பணியாற்றுவோரை சிபார்சு செய்து அனுப்பியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இதனால் ஆசிரியர்கள் பலர் விரக்தியடைந்துள்ளனர். குறிப்பிட்ட ஓர் அலுவலகம் அங்கு வேலை செய்யும் சேவைக் கால ஆசிரியர் ஆலோசகர்களை சிபார்சு செய்து மாகாணசபைக்கு அனுப்பி வைத்துள்ளதாம்.

பாடசாலையில் அதிபருக்கு ஒத்துழைக்கும் 40 வயதுக்குட்பட்ட பட்டப்பின்கல்வி டிப்ளோமாவுடன் கூடிய பட்டதாரி ஆசிரியரே இதற்கும் பொருந்தும். அத்துடன் அவர்கள் கற்பிக்கின்ற பாடங்களில் மாணவர்கள் உரிய தேர்ச்சியை பெற்றிருக்க வேண்டும் என்பதும் ஒரு நியதி.

இதனைப் பாராமல் செல்வாக்கிற்காக ஆசிரிய ஆலோசகர்களையும், சில ஆசிரியைகளையும் சிபார்சு செய்துள்ளனராம். இவர்களை மாகாணகல்வியமைச்சு நிராகரிக்க வேண்டும் என் ஆசிரியர்கள் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

## பாஸ் பெறச் சென்றபோது தாக்கப்பட்டாராம்

## மாணவன் தற்கொலை முயற்சி

(நமது நிருபர்)

**வ**வுனியாவில் பாஸ் பெறச் சென்ற வேளையில் பொலிஸாரால் தாக்கப் பட்ட மாணவன் ஒருவன் மண் எண்ணை குடித்துத் தற்கொலைக்கு முயற்சி செய்துள்ளான்.

இச்சம்பவம் பற்றித் தெரியவருவதாவது: வவுனியா மத்திய மகாவித்தியாலயத்தில் கல்வி பயிலும் 14 வயது மாணவன் தற்சமயம் வவுனியாவிலுள்ள தனது உறவினர் வீட்டில் தங்கி நிற்கிறான். அவனது தாய் தந்தையர் வன்னியில் அகப்பட்டுக் கொண்டார்கள்.

அவர்களைப் பார்த்து வருவதற்காக பயணப் பாஸ் பெற்றுக் கொள்ளும் நோக்கில் இந்த மாணவன் வவுனியா பிறவுண் கம்பனி பொலிஸ் நிலையம் சென்றபோது, அங்கு கடுமையாகத் தாக்கப்பட்டுள்ளான்.

விசாரணை என்று அழைத்துச் சென்று தனியான ஓர் அறையில் பூட்டி வைத்துத் தாக்கியதாகத் தெரிவிக்கப்படுகிறது. "ஏன் அடிக்கடி வன்னிக்குச் சென்று தாய் தந்தயரைப் பார்த்து வருகிறாய்?" என்று கேட்டே தாக்கினார்களாம்.

இதனால் விரக்தி நிலையில் காணப்பட்ட அந்த மாணவன் மண்ணெண்ணெய் குடித்துத் தற்கொலைக்கு முயற்சி செய்தவேளை வைத் தியசாலையில் சேர்க்கப்பட்டுக் காப்பாற்றப் பட்டுள்ளான்.

வவுனியாவில் 'பாஸ்' நடைமுறைக் கெடுபிடிகளால் விரக்தியுற்ற பலர் இதுபோன்று முன்னரும் முயற்சி செய்துள்ளார்கள்.

அகதிப் பெண்ணொருவர் தானே தலையில் மண்ணெண்ணெய் ஊற்றித் தீயிட்டுக் கருகி மாண்ட சம்பவம் கடந்த இரண்டு வருடங்களுக்கு முன்னர் இடம்பெற்றது குறிப்பிடத்தக்கது.

வவுனியாவில் தினமும் 5 பேர் தற்கொலைக்கு முயற்சி செய்கிறார்கள். இம்முயற்சிகளில் ஒவ்வொருநாளிலும் மூவர் மரணிக்கிறார்கள். விரக்தி நிலையே இத்தகைய தற்கொலை முயற்சிக்கு காரணமென்று வவுனியா மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எஸ்.அனுஷியானந்தன் தெரிவித்தார்.

சென்ற ஆண்டு-முதல் ஆறு மாதகாலப் பகுதியில், சுமார் 730 பேர் நஞ்சருந்தியுள்ளதாக வவுனியா வைத்திய அறிக்கையொன்று தெரிவிக்கிறது.

## அரசியல் தீர்வுக்கு அம்பாறை மக்களின்

## அபிப்பிராயமும் அவசியம்

**"அ**ம்பாறை மாவட்ட தமிழர்களின் ஆலோசனைகள் பெறாத அம்பாறை மாவட்டம் சம்பந்தமான எந்த ஒரு தீர்வுக்கும் அம்பாறைமாவட்ட தமிழர் மகாசங்கம் பலமான ஆட்சேபனைகளைத் தெரிவிக்கும்"

இவ்வாறு அம்பாறை மாவட்ட தமிழர் மகாசங்கத்தின் தலைவராக தெரிவான கா.சுப்பிரமணியம் பேசுகையில் குறிப்பிட்டார்.

கல்முனை இராமகிரஷ்ண மகா வித்தியாலயத்தில் ஞாயிறன்று நடைபெற்ற மகாசங்க தமிழ்ச்சங்க மகாநாட்டில் பேசுகையிலே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

தலைவர் சுப்பிரமணியம் மேலும் பேசுகையில்: இன்று அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் ஆனைவாயில் அகப்பட்ட புல் போலாகி தவிக்கிறார்கள். எமது மக்களின் சமூக பொருளாதார அரசியல் பெருமளவு பாதிப்புக்குள்ளாகி வருகிறது. இந்நிலை தொடருமேயாகில் நாம் இருள்சூழ்ந்த சமுதாயமாக மாற்றப்பட்டுவிடுவோம்.

எனவே முதலில் நாம் ஒற்றுமைப்பட வேண்டும். இம்மாவட்டத்தில் தமிழர்களும் முஸ்லிம்களும் பன்னெடும் காலமாக ஒரு தாய்மக்கள் போல் வாழ்ந்து கொண்டிருக்கும் போது, உத்தேச தென்கிழக்கு அலகு தமிழ் முஸ்லிம் மக்களை இனரீதியாக பிரிப்பதுடன், நிரந்தர வைரியாக்கி அமைதியின்மையையும் ஏற்படுத்தும் என்பதனால் உத்தேச தென் கிழக்கு பிராந்திய அலகு ஆலோசனையை மகாசங்கம் ஆணித்தரமாக ஆட்சேபிக்கிறது. இதனை நாம் சகல தமிழ்க்கட்சிகளுக்கும் தெரியப்படுத்தியுள்ளோம்.

1994ல் இழந்த அரசியல் பிரதிநிதித்துவத்தை கருத்திற்கொண்டு எதிர்வரும் காலங்களில் மகாசங்கம் எடுக்கும் சுயேச்சையான அரசியல் வழிநடாத்தல்களுக்கு எல்லாத் தமிழ்க்கட்சிகளும் ஒத்துழைப்பையும், ஒத்தாசையையும் வழங்கவேண்டும்" என்றார்.

## மறைந்த விரிவுரையாளருக்கு அனுதாபம்

(காரைதீவு நிருபர்)

**ச**ம்மாந்துறை தொழில்நுட்பக்கல்லூரி பொறியியற்பீட மாணவர்கள் தமது விரிவுரையாளர் க.சுந்தரமூர்த்தின் மறைவுக்கு அனுதாபம் தெரிவித்து பிரசுரங்களை வெளியிட்டுள்ளனர். மஞ்சந்தொடுவாய் தொழில் நுட்பக்கல்லூரி விரிவுரையாளரான சுந்தரமூர்த்தி சம்மாந்துறை கல்லூரியில் வருகை தரு போதனாசிரியராக பல வருடங்கள் கடமையாற்றியவர்.

பொறியியற்பீடதலைவர் எம்.ஐ.அச்சி முஹம்மது அனுதாபச் செய்தியை குடும்பத்தினருக்கு அனுப்பியுள்ளார்.

## வவுனியாவில் தொடரும் குண்டு வெடிப்புக்கள்

## சூத்திரதாரிகள் யார்?

**உ**லகிலேயே மிகக் கெடுபிடியான 'பாஸ்' நடைமுறைகளால் அவதியுறும் இடங்களில் ஒன்று வவுனியா மாவட்டம் என்று மக்கள் தெரிவிக்கிறார்கள்.

இராணுவ பாதுகாப்பு நலன்களை முன்னிட்டே புலிகள் எவரும் உள் நுழையாதபடி இந்த இறுக்கமான பாஸ் முறை அங்கு கொண்டுவரப்பட்டது.

இருப்பினும் இத்தகைய தீவிர பாதுகாப்புக்குள்ளும் ஊடுருவி புலிகள் இங்கு தாக்குதல் நடத்துகிறார்களா என்ற சந்தேகம் பல மட்டங்களிலும் வலுத்து வருகின்றன.

வவுனியாவில் படையினருக்கு அடுத்தபடியாக அங்கு ராஜாங்கம் நடத்துகிறவர்கள் போட்டித் தமிழ் இயக்கங்கள். அவர்களுக்குள்ளேயே பல்வேறுவகையான உட்பூசல்கள் முட்டை தொடக்கம் சகல பாவனைப் பொருட்களுக்கும் பொதுமக்களிடமிருந்து வரிவிதிப்பு, அரசு விதிக்கும் பொருட்கள் சேவைகள் வரிக்கு மேலதிகமாகவே இந்த வரி வசூலிப்பு.

வவுனியா புகையிரத சேவையை இலக்கு வைத்து இதுவரை நான்கு குண்டு வெடிப்புக்கள் இடம் பெற்றுள்ளன. கடைசியாக நடந்த குண்டு வெடிப்பை அடுத்து இரவு ரயில் சேவை நிறுத்தப்பட்டிருந்தது.

ரயில் சேவை ஒழுங்காக இடம் பெற்றதால் பாதிக்கப்பட்டவர்கள் தனியார் இன்ரசிற்றி வாகனக்காரர்கள். அதனால் பஸ்காரர்களிடமிருந்து வரி அறவிடுவதிலும் பாதிப்பு. அந்த வகையில் ரயில் போக்குவரத்தைக் குழப்புவதற்கு போட்டிக்குழுக்களின் உதவியுடன் பல்வேறு முயற்சிகள் நடந்ததாகப் பொதுமக்கள் மத்தியில் கதை அடிபடுகிறது.

இதனிடையே கடந்த வாரம் தேசிய இயந்திர உபகரண நிறுவனத்திற்குச் சொந்தமான கிறேடார் இயந்திரமொன்று குண்டு வைத்துத் தகர்க்கப்பட்டுள்ளது. இயந்திரத்தின் சாரதி பகல் உணவுக்காக வேலையை முடித்து இயந்திரத்தைவிட்டு இறங்கி வந்த போதே குண்டு வைத்துள்ளார்கள். இதனால் 'நெமொ' நிறுவனத்திற்கு 56 இலட்சம் ரூபா நஷ்டமேற்பட்டுள்ளது.

தேசிய இயந்திர உபகரண நிறுவனம் பல ஒப்பந்த வேலைகளைப் பொறுப்பேற்றுச் செய்து வருகிறது. அதனால் தங்களுக்குக் கிடைக்க வேண்டிய கொந்தராத்துகள், இலாபப் பங்குகள் என்பன கிடைக்காமற் போனதனால் வவுனியாவில் ஆட்சி நடத்தும் இயக்கத்தினர் உள்ளூர ஆத்திரம் கொண்டிருந்தனர். அதன் வெளிப்பாடே இது என்று பேசப்படுகிறது.

கடந்த 30ம் திகதி ஞாயிறு காலை 5.30 மணியளவில் ரெலோ இயக்கத்தின் ஆதரவில் இயங்கும் ஓர் ஒடியோ கடையொன்றின் அருகிலும் குண்டு வீசப்பட்டது. ஆனால் பாதிப்பெதுவும் ஏற்படவில்லை. இது போட்டி இயக்கத்தின் எச்சரிக்கை என்றே கருதப்படுகிறது.

## பொருட்களைக் கொண்டு செல்ல

## திடீர் தடை உத்தரவு!

**வ**டபகுதிப் போர்நிலமைகளின் பின்னடைவும் பிரதிபலிப்பும் கிழக்குப் பகுதியிலும் தலைகாட்டுவதைக் காணமுடிகிறது.

மட்டக்களப்பு பதுளை வீதிப் பிரதேசம் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ளது. அங்குள்ள பொதுமக்கள் செங்கலடி ஏறாவூர் போன்ற இராணுவ கட்டுப்பாட்டுப் பகுதிகளுக்கு வந்து உணவுப் பொருட்களையும் மற்றும் அத்தியாவசியப் பொருட்களையும் வாங்கிச் செல்கிறார்கள். இதுவரை அதற்காக எதுவித தடைகளோ கட்டுப்பாடுகளோ இருக்கவில்லை.

ஆனால் சமீப சில நாட்களாக அப்பகுதிக்குப் பொருட்களை எடுத்துச் செல்வதில் கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

இந்த விடயம் தெரியாது வழக்கமாகத் தாம் வாங்கிச் செல்வது போன்று பொருட்களைக் கொண்டு சென்ற பொதுமக்கள் செங்கலடி கறுத்தப்பால சோதனைச் சாவடியில் வைத்துத் திருப்பியனுப்பப்பட்டார்கள்.

குறிப்பிட்ட அளவுக்கு மேல் பொருட்களைக் கொண்டு செல்ல முடியாதவாறு அங்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது.

மண் எண்ணெய் ஒரு லீற்றர், தேங்காய் ஒன்று இவ்வாறான அடிப்படையிலேயே அனுமதிக்கப்படுகிறது. இதனால் பொதுமக்கள் பெரும் சிரமத்தை எதிர் நோக்குகிறார்கள்.

இதனிடையே பதுளை வீதிப் பகுதியிலிருந்து நகருக்கு வருவோரும் நகரிலிருந்து அப்பகுதிக்குப் போவோரும் சோதனைச் சாவடியிலுள்ள சீருடையினரால் பங்கர் அமைப்பு வேலைகளில் ஈடுபடுத்தப் படுகிறார்கள்.

## சிற்றூழியர்கள் திடீர் வேலை நீக்கம்

**மு**றைப்படி அனுமதி பெறாமல் நியமனம் செய்யப்பட்டு வடக்கு கிழக்கு மாகாண சபையில் சிற்றூழியர் தரத்தில் பணி புரியும் 94 பேரின் நியமனம் உடனடியாகச் செல்லுபடியற்றதாக்கப்பட்டுள்ளது.

வடக்குகிழக்கு மாகாண ஆளுநர் தலைமையில் ஏப்ரல் 19ந் திகதி இடம்பெற்ற செயலாளர்களுக்கான கூட்டத்தில் இந்த முடிவு மேற் கொள்ளப்பட்டிருக்கிறது.

நிர்மாணத் திணைக்களத்தைச் சேர்ந்த 25, விவசாயக் காணி அமைச்சைச் சேர்ந்தோர் 02, கூட்டுறவு அபிவிருத்தி திணைக்களத்தைச் சேர்ந்தோர் 14, புனர்வாழ்வு அமைச்சைச் சேர்ந்தோர் 01, வீதி அபிவிருத்தித் திணைக்களத்தைச் சேர்ந்தோர் 09, சமூகசேவைகள் திணைக்களத்தைச் சேர்ந்தோர் 01, சுதேச வைத்தியத் துறையைச் சேர்ந்தோர் 12, உதவி அரசாங்க அதிபர் அலுவலகத்தைச் சேர்ந்தோர் 06, பிரதேசச் செயலகத்தைச் சேர்ந்தோர் 22, கச்சேரிகளைச் சேர்ந்தோர் 02, ஆகிய 94 பேர் உடனடியாகப் பதவியிழக்கவுள்ளார்கள்.

1991ம் ஆண்டு நியமனம் பெற்றோர் கூட இதில் அடங்குகிறார்கள். எனத் தெரிய வருகிறது.

இவர்களுக்கான பதவி நீக்கற் கடிதங்கள் அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகள் மேற் கொள்ளப்பட்டு வருகின்றன.

## கடமைக்கு அழைப்பு

**ஓ**ய்வுபெற்ற முப்படைகளையும் சேர்ந்த 'றிசேவ்' படையினரை உடனடியாகக் கடமைக்குத் திரும்புமாறு ஜனாதிபதி உத்தரவு பிறப்பித்துள்ளார். 50 வயதுக்குட்பட்டவர்களுக்கே அது பொருந்தும்.

இவர்கள் மே மாதம் முதலாம் திகதிக்கும் 10ம் திகதிக்குமிடையில் அருகிலுள்ள இராணுவமுகாம்களில் அல்லது தத்தமது ரெஜிமெண்ட் நிலையங்களில் சமூகமளிக்குமாறு ஜனாதிபதி கட்டளை பிறப்பித்துள்ளார்.

உடனடியாகச் சேவைக்கு அழைக்கப்படும் இவர்கள் நெருக்கடி குறைந்த பகுதிகளிலேயே கடமைக்கு அமர்த்தப்படுவர் என்று கூறப்பட்டுள்ளது.

உலகப் புகழ்பெற்ற

# எக்ஸ் ஒயில்

TRADE MARK

* காய்ச்சல்
* தலைவலி
* தலைச்சுற்று
* தலைப்பாரம்
* ஜலதோஷம்
* இருமல்
* மூக்கடைப்பு
* பல்வலி
* காதுவலி
* வயிற்றுவலி
* வாதத்தால் வரும் வலிகள்
* உணர்ச்சியற்ற பாகங்கள்
* சுளுக்கு
* தசை வலிகள்
* பூச்சிக் கடிகள்
* பிரயாணக் களைப்பு
* மதுவால் ஏற்படும் பிரச்சினை





**ஆகியவற்றிற்கு உடனடி நிவாரணி.**

ஏக விநியோகஸ்தர் :

**SINGHA HOLDINGS (PVT) LTD**

14, Ground Floor - Welikada Plaza - Rajagiriya.
Tel : 888214 Fax : 682984


## 1வது பிறந்தநாள் வாழ்த்து



**செல்வி அபிதா 02.05.2000**

கனடா மொன்றியலில் வசிக்கும் ஜெயபாலசிங்கம் -சுகிர்தராஜினி தம்பதியினரின் செல்வப் புதல்வி அபிதா, தனது 1வது பிறந்த நாளை அம்மன் துணையுடன். 2000.05.02 அன்று சீரும் சிறப்புடன் கனடாவில் கொண்டாடினார். இவரை அம்மம்மா, அம்மப்பா, பெரியப்பாமார், பெரியம்மாமார், மாமன்மார், மாமிமார், சித்தப்பாமார், சித்திமார், அக்காமார், அண்ணன்மார், மச்சாள்மார், மச்சான்மார், தங்கை மற்றும் உற்றார் உறவினர் நண்பர்கள் ஆகியோர் இவரை பல்கலையும் பெற்று பல்லாண்டு வாழ்க என வாழ்த்துகிறார்கள்.

## 1வது பிறந்த நாள் வாழ்த்து



**பாரிஜா // 06.05.2000**

மண்டைதீவை சேர்ந்த பாலேந்திரா-கௌரி தம்பதியினரின் அருந்தவப் புதல்வி பாரிஜா தனது முதலாவது பிறந்த நாளை (06.05.2000) சுவிஸில் தனது இல்லத்தில் வெகு விமரிசையாக கொண்டாடினார். இவரை சுவிஸில் இருக்கும் அப்பா, அம்மா, அப்பப்பா, அப்பம்மா, சுவிஸில் இருக்கும் வரன்மாமா, மாமி ரஜனி குடும்பத்தார், கனடாவில் இருக்கும் அன்புமாமா, மாமி மாலினி குடும்பத்தார், இலங்கையில் இருக்கும் அம்மம்மா, அம்மப்பா, ராசன் மாமா, அனுசியா ஆசைசித்தி, சுகந்தி குட்டிசித்தி கொழும்பிலிருக்கும் கண்ணன் குட்டிமாமா, பெரியம்மா குடும்பத்தார், சித்தப்பா குடும்பத்தார், அக்காமார், உற்றார் உறவினர்கள் சுவிஸில் இருக்கும் நண்பர்கள் அனைவரும் பர்வதவர்த்தனி சமேத பசுபதீஸ்வரர் அருள் பெற்று ஆயகலைகள் கற்று பல்லாண்டு காலம் சிறப்புற வாழ்கவென்று வாழ்த்துகிறார்கள்.

தகவல் : திரு.திருமதி.கதிர்காமத்தம்பி, அம்மம்மா, அம்மப்பா,
325, பிரதான வீதி, பருத்தித்துறை.

## விளம்பரப் பகுதி


**பீனிசத்திற்கு வைத்தியம்**

இடைவிடாத தும்மல், தடிமன், மூக்கடைப்பு(நாசியரிப்பு), மூக்கால் நீர் வடிதல், மூக்கினுள் சவ்வு வளர்தல், கண்கடி(கண்ணரிப்பு), தலைவலி போன்ற பீனிசக் குணங்களுக்கு உடனடி நிரந்தர சுகம் பெற அஸ்மா சிகிச்சை நிபுணர் டொக்டர்.சுறாஜ் சோமசுந்தரம் அவர்களை 25, சில்வெஸ்டர் வீதி, கல்கிசை (மவுண்ட்லேவினியா)(கொழும்பு) எனும் இடத்தில் சிகிச்சை பெறுவதற்கு தொலைபேசி இலக்கம் 074 - 201582 மூலம் பார்வையிடப்படும் நாளையும் நேரத்தையும் பதிவு செய்து வரவும்.

**தேவை**

கடிகாரம்
திருத்துபவர்கள், T.V
ரேடியோ திருத்துபவர்கள்
தேவை. சாப்பாடு,
தங்குமிடவசதி உண்டு.
தொடர்பு கொள்ளவும்.

**MOHAN RECORD BAR**
19, BRIDWELL BAZAAR
BOGAWANTALAWA.
T.P 052 67616

சகல வசதிகளும் கொண்ட 2 மாடி வீடு
ஹெவ் லொக் டவுனில் வாடகைக்கு உண்டு.
**தொடர்பு.**
**RAMACHANDRAN**
200/44, Uthiyanapura, Havelock Town, Colombo - 05. T.P 506216


**K.N.S.SHOPPING CENTRE & TAKE AWAY - SWISS**

மளிகைப் பொருட்கள், ஒறிஜினல் வீடியோ, ஓடியோ. கசற்றுக்கள் 'COMPACT' டிஷ்குகள் வீடியோ C.Dகள், 22 கரட்டில் தங்க நகைகள், பத்திரிகைகள், சஞ்சிகைகள். இலங்கை, இந்திய, சுவிஸ் உணவு வகைகள் அனைத்தையும் ஒரே இடத்தில் இலகுவாக நீங்கள் பெற்றுக் கொள்ள-

**K.N.S.SHOPPING CENTRE**
K.N.SUKUMARAN
ANKER - STR - 16
8004 - Zurich _ Switzerland
T.P- 01-2427111 - FAX.01-2427144

வாரத்தில் 7 நாட்களும் காலை 9 மணி முதல் இரவு 12 மணிவரை (ஞாயிறு உட்பட) கடை திறந்திருக்கும்.

**90 DAYS SPOKEN ENGLISH**
POSTAL TUITION



**ஆங்கிலம் பேச, எழுத, வாசிக்க
மூன்றே மாத காலத்தில்
தபால் மூலமாக
கற்றுத்தரப்படும்**

எம்மிடம் கல்விகற்கும் மாணவ/மாணவிகளின் கருத்தே எமது கல்வி நெறியின் சிறப்புத் தன்மையாகும்

*நீங்களும் பயமின்றி ஆங்கிலம் பேச வேண்டுமாயின் மேலதிக விபரங்களுக்கு 3.50 முத்திரையொட்டிய சுயவிலாச மிடப்பட்ட தபாலுறையுடன் தொடர்பு கொள்க...*

**BRIGHT BOOK CENTRE (PVT) LTD**
BRIGHT FUTURE IN YOUR HAND
S-27, First Floor, P.O. BOX 162.
Colombo Central Super Market
Complex Colombo-11. T.P. 434770

**மனோதத்துவ வைத்தியம் (General Psycho Therapy)**

அடிமனதில் பதிந்துள்ள தாழ்வு மனப்பான்மையை நீக்கி உங்களை நீங்களே வெற்றி கொள்ள நாடுங்கள் பிரபல மனோதத்துவ நிபுணர் DR.P.ஆறுமுகம். அவர்களை சந்தியுங்கள் இளம் சமுதாயத்தினரை வாட்டும் உடல் மெலிவு, கனவில் சக்தி இழத்தல், பயம், ஞாபக மறதி, நடுக்கம், வெட்கம், சந்தேகம், ஏமாற்றம், நித்திரையின்மை, போன்ற தன்னம்பிக்கை இழக்க காரணமான வியாதிகளை மனோதத்துவ சிகிச்சை மூலம் நீக்கி உங்களையே நீங்கள் வெல்லுங்கள்.

**SEXUAL DISORDERS (தாம்பத்திய கோளாறுகள்)**

தாம்பத்திய பாலியல் குறைபாடுகளுக்கு நோயும் காரணமானாலும் 85% தாழ்வு மனப்பான்மையே காரணம். என்பதை 90 நிமிடத்தில் தான் குறைவற்ற ஆண் மகனாகிவிட்டேன். என்று அடி மனதில் பதியவைத்த பின்னரே பணம் பெறப்படும். வெளிநாட்டிலும், உள்நாட்டிலும், பல நூற்றுக்கணக்கான இளைஞர்களை சுகமாக்கிய ஆதாரங்கள் உண்டு.

**வெளிநாட்டில் உள்ளவர்களுக்கு விஷேட ஏற்பாடுகள்**

உங்களின் தாம்பத்திய (பாலியல்) குறைபாடுகளை நீக்க வழியின்றி தவிக்க தேவையில்லை. முழு விபரத்தையும் கடித மூலம். விளக்கி எழுதவும். பின் எமது சில கேள்விகளுக்கு பதில் தெரிந்த பின் தன்னுடைய குறைகள் முற்றாக நீங்க ஏற்ற மனோதத்துவ வைத்தியம் பதிவு செய்யப்பட்ட ஓடியோ கெசட் மூலம் மனோநிலையில் குறையற்றவர் என்றும், உடல் நிலை பாதிப்புக்கு உயர்தர மூலிகை மருந்தும் பெற்று வெற்றி பெற்ற ஆண் மகனாகுங்கள். (அந்தரங்கம் உறுதியாக பேணப்படும்) கட்டாயம் முத்திரை செலவு அனுப்பவும்.

**மட்டக்களப்பு விலாசத்திற்கு மாத்திரம் கடிதத் தொடர்பு கொள்ளவும்**

மனநிலை பாதிப்புக்கள், மன நோய்கள், "ஹிஸ்டிரியா" ஆச்சரியப்படும் வகையில் பலர் சுகமாகியுள்ளார்கள். நீரழிவு (கட்டுப்பாடான நடைமுறையுடனும் சில ஆசனப் பயிற்சியும் அத்துடன் எமது மருந்து பாவித்தும் பலர் நீரழிவு நோயில் இருந்து முற்றாக சுகமாகியுள்ளனர்) மற்றும் ஆஸ்மா, தலையிடி, வாதம், பயோரியா, வெள்ளை போதல், கிரந்தி நோய், குழந்தை பேறு இன்மை, இன்னும் தீர்க்க முடியாத வியாதிகளுக்கும், வைத்தியம் உண்டு. (கொழும்பில் விடுமுறை நாட்களிலும் சந்திக்கலாம்)

**கொழும்பில் மே 21 முதல் 28 திகதி வரை**

(கொழும்பு விலாசம் மாற்றப்பட்டுள்ளது)
DR.P.ARUMUGAM S.A.M.P. REG. 9492
New Ahmed Tourist Inn, Bang Bang Building,
Entrance Bankshall Street,No. 10 Reclamation Road, Colombo 11.
T.P. 074-715547, 074-715546 செல்டெல்: 072-609388

**கல்முனையில் மே 06. 07ம். திகதிகளில்**

T.M.M. பாமஸி, கல்முனை. T.P. - 067- 29329

**வவுனியாவில் மே 13,14 திகதிகளில் சந்திக்கலாம்**

(தயவு செய்து பதிவு செய்து கொள்ளவும்)
(Vanni Inn) 2ம் குறுக்குத் தெரு, ஞான வைரவர் கோயில் ஒழுங்கை, வவுனியாவில் சந்திக்கலாம் T.P.024-22074, 21405, 21406.

கடிதத் தொடர்பு: RESIDENT T.P:- 065-24019


**DR.P.ARUMUGAM S.A.M.P.,**
**NO.51/5. Koolavady Road,**
**Batticaloa. SRI LANKA.**

சுவிற்ஸர்லாந்தில் சகலவிதமான தொலைபேசி அட்டைகளையும் மொத்தமாகவும், சில்லறையாகவும் மற்றும் அனைத்து சஞ்சிகைகள், ஒரிஜினல் வீடியோ கொப்பிகள் வாடகைக்கும்-விற்பனைக்கும் பெற்றுக்கொள்ள நீங்கள் நாடவேண்டிய ஒரே இடம்-

**Tarmu Trading**
Aarauer Strasse-76
4600-Olten- Swiss.
T.P.& Fax : 062-2971070 Natel :- 079-2771573



**மலையாள மாந்திரிகத்தின் வெற்றிகள்**



நேற்றல்ல இன்றல்ல தொண்டு தொட்டு 33 வருடமாக உலக மாந்திரிக சக்கரவர்த்தியாக விளங்குவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரீக வேலைகளில் நன்மைக்கு இடமுண்டு தீமைக்கு இடமில்லை. இப்படி செயல் புரிவது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரீக துறையில் வருமான வரி செலுத்துவது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மாந்திரீக துறைக்கு வழிகாட்டியாக வரையறுக்கப்பட்ட நிறுவனமாக P. K. SAAMY ASSOCIATE (PVT) LTDஐ உருவாக்கியது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாடிக்கையாளரின் நலனை கருதி இரகசியத்தை பாதுகாப்பது என்றால் அது டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வாழையடி வாழையாக மக்களுக்கு உண்மை சேவை புரிவது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

தீரும் பிரச்சினைகளுக்கு திட்ட வட்ட திகதி குறித்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசதியற்றோருக்கு தான தர்மம், இலவச சேவை செய்து கொடுப்பது என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வசியத்தால் திருமணம் செய்து கொள்பவருக்கும் 25 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கும் மாத்திரமே! கட்டுப்பாட்டுடன் காதலன் வசியம் செய்து கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

வெளிநாட்டவருக்கு விஷேசமாக அந்தந்த ஆட்ருக்கு உரியவரிடம் பார்சல் போய் சென்றடைய உலகலாவிய ரீதியில் பிரதிநிதித்துவம் அமைத்து வைத்திருப்பவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

மதசார்பற்ற சேவை செய்பவர் யார் என்றால் அவர் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

செய்துகொள்ளும் மாந்திரிக வேலைகளுக்கு Gurantee Card கொடுப்பவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே!

அறவிடும் பணத்திற்கு முத்திரையுடன் ரசீது வழங்குபவர் என்றால் டாக்டர் பீ.கே. சாமி அவர்களே! 33 மாந்திரீகர் வேலை செய்வதும் என்றால் அது இங்கு தான்.

இனி என்ன உங்கள் பிரச்சினை? மாற்றான் மனைவி தொல்லையா, மனதுக்கு ஏற்றவரை திருமணம் செய்து கொள்ள வேண்டுமா, திருமண வயது ஏறிக் கொண்டே போகிறதா, கணவன் மனைவி பிணக்கு தீர, பிரிந்தவரை அழைத்து எடுக்க, விடுபட்ட திருமணம் நிறைவேற, மனதார நேசித்தவரை மற்றவர் விரும்பாமல் இருக்க, சூனியம் விடுபட, கல்வி சிறப்படைய, வியாபார விருத்தியடைய, தீராத நோய் தீர, பிரயாண தடை நீங்க, அன்றன்றாடு மனநிம்மதியுடன் மற்றவர் மனப்பொறாமை தவிர்த்து வாழ , தீயோர் நட்பு கிட்டாமல் இருக்க, மாங்கல்ய மன நிறைவு பெற உங்கள் குறைகளுக்கு முன்னறிவித்தலுடன் நேரில் வருவது சாலச்சிறந்தது. வெளிநாட்டவர்களுக்கு இலங்கை நேரப்படி காலை 9.00 மணிமுதல் இரவு 9.00 மணிவரை தேவைகளுக்கு டாக்டர் பீ. கே. சாமி அவர்களுடன் நேரடியாக தொடர்பு கொள்ளலாம். தொடர்பு கொள்ள வேண்டிய தொலைப்பேசி இலக்கங்கள்: 466271, 466571, 431137, 470615, 342463, 342464, 344831, 344832 இவை மட்டுமல்ல அருள் ஞானத்துடன் கூறப்படும் தெட்டத்தெளிவான ஜாதகங்கள் என்றுமே பிழைத்ததில்லை. நடந்தது, நடக்கப்போவது, திருமணம் எப்போது, எத்தனையாம் திகதி, எத்தனை மணிக்கு, வாழ்வில் அதிர்ஷ்டம் எப்போது என்பதை என்னால் கூறமுடியும். திகதி மாதம் குறித்து அனுப்பவும். கைரேகை என்றால் திகதி தேவையில்லை. இன்னும் சிறுவர்களுக்கு பிறந்த நாள் பரிசாக தங்க வலம்புரி சங்கு மோதிரத்தை நீங்கள் ஒரு குழந்தைக்கு அணிவிப்பது மூலம் இதன் நன்மையாக சிறுவர்களின் எதிர்காலம் சிறப்படைய நீங்கள் ஒரு தூண்டுகோள் ஆகலாம். அருள் ஞானம் பெற்ற தங்க வலம்புரி சங்கு மோதிரம் எம்மிடம் உண்டு.

கருணாகரபூசனம், உலக மலையாள மாந்திரீக சக்கரவர்த்தி
**Dr. P. K. Samy (J.D.G.A.N) JP**

162, Kotahena Street, Mayfield Road, Colombo 13.
Fax: 0094-1-342464 E-Mail : drpksamy@sltnet.lk
இன்னும் எமது சேவைகளை அறிய எமது இன்டர்நெட் வெப் தளத்தை நாடவும்
Web site: www.imexpolanka.com/drpksami
Web site: www.lgo.slt.lk/swami

வெளிநாட்டவர்களுக்கான விஷேட சலுகை:
வெளிநாட்டவர்கள் எமது கட்டணத்தை கம்பியூட்டர் மூலம் செலுத்தி உங்கள் தேவைகளை பூர்த்தி செய்து கொள்ளலாம்.
வழமைபோல் நுவரெலியாவிலும் எமது சேவை நடைபெறுகிறது.


## 45ம் நாள் நினைவஞ்சலியும் நன்றி நவிலலும்



மலர்வு:
**24.01.1979**
●●●
உதிர்வு:
**16.03.2000**

தெல்தோட்டம் கலஹாவைப் பிறப்பிடமாகக் கொண்ட

**செல்வன் நவரட்ணம் ஜோஸப் பெர்னாந்து**

எங்கள் குலவிளக்கே எம் கண்ணை விட்டு நீ மறைந்தாலும் எம் இதயத்தின் துடிப்பாய் உயிருள்ளவரை எம் முடன் வாழ்வாய் உன் நினைவுகள் என்றென்றும், அழிவதில்லை. இத்துயரில் எம்முடன் பங்கு கொண்ட உற்றார், உறவினர் நண்பர்கள், தெல்தோட்ட குரூப் பொதுமக்கள், இளைஞர்கள், உத்தியோகத்தர், நண்பர்கள் 'சன்கோ' நிறுவன உரிமையாளரும், உத்தியோகத்தர்களும், பிளேன் இன்ட நெஸனல் தலைவரும், அவரைச் சார்ந்தவர்களும், வருகை தந்த அனைவரும், சகல விதத்திலும் உதவி ஒத்தாசை புரிந்த யாவருக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறோம். அன்பு தெய்மே உமது ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

*அன்பு அம்மா திருமதி அம்பிகா பெர்னாந்து*
*பெரியப்பா வெள்ளத்துரை பெரியம்மா, அக்காமார், மச்சான், மருமகன்.*

# ஆனையிறவு வீழ்ச்சியும் கொந்தளிக்கும் உணர்ச்சிகளும்

இவ்வருடம் ஜனவரி 16ம் திகதி வெளிவந்த தினமுரசின் எக்ஸ்ரே ரிப்போர்ட் 'குடாநாட்டின் கழுத்தை இறுக்கும் சுருக்கு' என்ற தலைப்பில் எழுதிய கட்டுரையை ஒருமுறை மறுபடி வாசியுங்கள். அதில் முரசு முன்னரே இப்படிக் கூறியிருந்தது.

'... இத்தாக்குதலைத் தொடர்ந்து நகர்த்திச் சென்று ஆனையிறவின் கழுத்துப் புறத்தைச் சுற்றி ஊடுருவி நிலையெடுத்து நின்று, ஒரு பலத்த முற்றுகைக்கான முஸ்தீபுகளைச் செய்வதே அவர்களின் முதற்கட்ட நோக்கமாயிருந்தது. அதில் அவர்கள் கணிசமான முன்னேற்றத்தைக் கண்டுவிட்டார்கள்........... இத் தாக்குதலைச் செய்த வண்ணமே ஆனையிறவின் மறுபுறம் ஊடுருவி, யாழ்ப்பாணத்துக்கும் ஆனையிறவுக்குமான தரைவழித் தொடர்பை இடையறுக்குமுகமாக நிலையூன்றிக் கொண்டால், ஆனையிறவைத் தனிமைப்படுத்தி விடலாம். இதுவே அவர்களின் அடுத்த நகர்வு.'

முரசு மூன்று மாதங்களுக்கு முன்னரே அச்சொட்டாகச் சுட்டிக்காட்டியபடியே புலிகள் ஆனையிறவின் மறுபுறம் ஊடுருவி யாழ்ப்பாணத்துக்கும் ஆனையிறவுக்குமான தரைவழித் தொடர்பை இடையறுத்து நிலையூன்றி ஆனையிறவு முகாமைத் தனிமைப் படுத்திக் கைப்பற்றி விட்டார்கள்.

ஆனையிறவு முகாமை மட்டுமல்ல, இயக்கச்சி முகாமையும் கைப்பற்றினார்கள்.

இவை புலிகளால் கைப்பற்றப்பட்ட போது, இராணுவத் தளபதி சிறிலால் வீரசூரிய "தந்திரோபாயமாகப் பின்வாங்கியுள்ளோம்" என்று காரணம் கூறினார். "யாழ்ப்பாணத்தைப் பாதுகாப்பதே தமது பிரதான நோக்கம்!" என்றும் அவர் கூறினார்.

ஆனையிறவு முகாமின் வீழ்ச்சியென்பதை ஏதோ ஒரு சாதாரண முகாமின் வீழ்ச்சிபோல் சாதாரணமாக எடைபோட முடியாது. இது ஒரு முகாமின் வீழ்ச்சி மட்டுமல்ல; இலங்கை அரசின் தன்மானத்தின் வீழ்ச்சியுமாகும்.

தனது ஒரு பலம்வாய்ந்த, கேந்திர முக்கியத்துவம் கொண்ட முகாமை, பின்புலத்தில் இராணுவத்தின் பூரண கட்டுப்பாட்டுக்குள் உள்ள யாழ். நிலப்பரப்பையும், பாரிய பலாலி இராணுவ முகாமின் பலமான துணையையும், கடற்படை, விமானப்படைகளின் உறுதுணையையும் கூட வைத்துக் கொண்டு பறிகொடுத்த சம்பவமானது இலங்கையின் பராக்கிரமத்துக்கு மிக அவமானகரமான நிகழ்வு!

அதுவும் ஒரு திடீர்த் தாக்குதலில் பறிகொடுத்தாலும், ஏதோ எதிர்பாராத விதமாக நிகழ்ந்து விட்டதாகச் சாட்டுக் கூற முடிந்திருக்கலாம். ஆனால் டிசம்பர் மாதத்திலிருந்தே தொடுக்கப்பட்டு தொடரப்பட்ட ஒரு தாக்குதலை அறியாதிருந்ததாகக் கூற முடியாது.

அதனால் ஆயுதங்களை இழக்கவோ, சேதமாக்கவோ அவசியமேற்பட்டிருக்காது என்பதுடன் பிரிகேடியர் பேர்ஸி பெர்னாண்டோ, கேர்ணல் நீல் அக்மிமன், கேர்ணல் பாதிய ஜெயதிலக்க, லெப்டினன்ட் கேர்ணல் அரிஸ் ஹேவாரச்சி போன்ற முக்கிய இராணுவத் தளபதிகளையும் பல படைவீரர்களையும் பலி கொடுக்க நேர்ந்திராது.

இதில் பரிதாப நிலைமை என்னவென்றால் ஒரு கேர்ணல் பருகுவதற்கு நீரின்றி இறக்க நேரிட்டதாகச் சில ஊர்ஜிதமற்ற தகவல்கள் தெரிவிக்கின்றன. அது உண்மையானால் எந்த இறுதி நிலைவரை அவர்கள் ஒரு தீர்க்கமான இராணுவ முடிவை எடுக்க முடியாமல் தத்தளித்திருந்தார்கள் என்பதைப் பார்க்கலாம்.

ஆனையிறவு முகாமைப் புலிகள் கைப்பற்றியதென்பதன் தாற்பரியம் மிகப் பாரதூரமானது. ஆனையிறவு முகாம் 200 ஆண்டுகளுக்கு மேற்பட்ட சரித்திரத்தை உடையதும், யாழ்ப்பாணத்தின் நுழைவாயிலில் அமைந்துள்ள கேந்திர முக்கியத்துவம் கொண்டதுமான முகாம்.

இங்குதான் குட்டிமணி முதற் கொண்டு பல போராளிகள் சித்திரவதைக்குள்ளாக்கப்பட்டிருந்தனர். அக்காலத்தில் இச் சித்திரவதை விசாரணைகளுக்கான சி.ஐ.டி.யினர் வந்து தங்குவதற்கான றெஸ்ட் ஹவுஸ் ஒன்றும் இங்கு கட்டப்பட்டிருந்தது.

இந்த முகாமைக் கைப்பற்றுவதற்காக புலிகள் 1990ல் நிகழ்த்திய முற்றுகைத் தாக்குதல் இலங்கை அரசாங்கத்தின் கடும் பிரயத்தனத்தால் முறியடிக்கப்பட்டது. இம் முற்றுகையை உடைப்பதற்கென 5000 பேர்கொண்ட படையணியை பிரேமதாசா விசேடமாக அனுப்பிவைத்தார். அவர்கள் வெற்றிலைக் கேணியில் தரையிறங்கி ஆனையிறவை நோக்கி ஊடறுத்துச் சென்று அம் முகாமைப் பாதுகாத்தனர். இங்கே புலிகள் வைத்த ஒரு தற்கொலை அதிரடித் தாக்குதலுக்கான குறி பிசகியதே இத் தாக்குதல் திட்டத்தின் தோல்விக்கான ஒரு பிரதான காரணமாக அமைந்தது. ஆனையிறவு முகாமின் பிரதான வாயிலைத் தகர்ப்பதற்காக தற்கொலைக் குண்டுத்தாக்குதலாக புல்டோஸர் ஒன்றைத் தயாரித்து புலிகள் அனுப்பியிருந்தனர். ஆனால் ஒரு துணிச்சலுள்ள இராணுவ வீரன் கிரனைட்டுடன் அந்த புல்டோஸருக்குள் பாய்ந்து, அக் குண்டுத் தாக்குதலைத் தடுத்து மாண்டான். அதனால் வாயிலைத் தகர்க்கும் திட்டம் கைகூடாமல் முற்றுகை நீளவேண்டி ஏற்பட்டது.

அந்த புல்டோஸரைச் சுற்றி ஆனையிறவு இராணுவத்தினர் பூக்கன்றுகள் நட்டு ஒரு ஞாபகச் சின்னமாகப் பேணி வந்தனர்.

ஆனால் தற்போது நடத்திய தாக்குதல் வேறுவிதமாக அமைந்திருந்தது. புலிகள் கெரில்லாப் போராளிகளாக இயங்கினாலும் அவர்கள் ஒரு நிரந்தரப் படையணிக்குரிய படைக் கட்டமைப்பை இன்று எய்தியுள்ளார்கள். அவர்களது தாக்குதல் தந்திரோபாயங்களில் கெரில்லாத் தாக்குதல் பாணியும் நிரந்தரப் படையணிக்குரிய தன்மையும் கொண்டதாக இரண்டு அம்சங்களையும் காணமுடியும். ஒன்றிலிருந்து ஒன்றுக்கு மாறியபடி தம் தாக்குதல்களை நிகழ்த்த அவர்கள் வல்லவர்களாக இருக்கிறார்கள்.

தற்போதைய ஆனையிறவுத் தாக்குதலில் அவர்கள் ஒரு வித்தியாசமான உத்தியைக் கையாண்டார்கள். அதாவது 'சொல்லிவிட்டுத் தாக்கும்' உத்தி. இவ்வாறான உத்தியை கியூபாப் புரட்சியின்போது பிடல் காஸ்ரோ கையாண்டிருந்தார். இதிலிருக்கும் முக்கியமான பலம் யாதென்றால் எதிரியின் மனோவலிமையைச் சிதைப்பதாகும்.

உண்மையில் புலிகளின் இந்த வெற்றிக்குக் கைகொடுத்த ஆயுதங்கள் இரண்டு. ஒன்று ஆட்டிலெறி; மற்றையது உளவியல் ஆயுதம்.

புலிகள் ஆனையிறவு முகாமின் சுற்றுப்புற முனைகளைக் கைப்பற்றி அங்கிருந்து தொடர்ந்து ஆட்டிலெறி மற்றும் மோட்டார் ஷெல்களைப் பொழிந்து கொண்டிருக்க, முகாமில் இருந்த இராணுவத்தினர் இரவு பகலாகப் பதற்றத்துக்கு உள்ளாக்கப்பட்டு வந்தனர்.

இதில் இராணுவத்திடமும் ஆட்டிலெறிகள் இருந்தாலும் புலிகள் தரப்பிலேயே சாதகமான தள நிலை இருந்தது. இராணுவ முகாம் ஒரு குறிப்பிட்ட இடத்தில் தெளிவாகத் தெரியும் வண்ணம் அமைந்துள்ளதால், புலிகளால் எல்லாப் புறங்களிலிருந்தும் ஆட்டிலெறிகளையும், மோட்டார் ஷெல்களையும் குறிவைத்து ஏவ முடியும். ஆனால் முகாமிலிருந்தோ புலிகளைக் குறிவைத்துத் தாக்க முடியாது.

இப்படியான தொடர் தாக்குதல்களை நடத்திக் கொண்டு பலமான ஒரு படையெடுப்பை நடத்தி கரையோரங்களினூடாக ஊடறுத்து பிரதான விநியோகப்பாதையான கண்டி வீதியை வழிமறித்து நிலைகொண்டு விட்டார்கள் புலிகள். அந்தத் துண்டிப்போடு ஆனையிறவு முகாம் நெருக்கடிக்கு ஆளாகி விட்டது.

இந்நிலையில் யாழ் நிலப்பரப்பில் நிலை கொண்டிருந்த படையினர் உடனடியாகவே இத்துண்டிப்பு ஊடுருவலை முறியடித்து கண்டி வீதியைப் பாதுகாத்திருக்க வேண்டும்.

இந்த ஆனையிறவு முகாம் வெற்றி புலிகள் தரப்புக்கு ஏற்படுத்தியுள்ள சாதகங்கள் அளப்பரியன.

ஒருபுறம் இராணுவரீதியான சாதகங்கள். மறுபுறம் தமிழீழம் சாத்தியம் என்ற திசையில் குறிப்பாக புலம்பெயர்ந்த தமிழ் மக்கள் மத்தியில்-ஏற்படுத்தியிருக்கும் நம்பிக்கைகள், மற்றும் உற்சாகங்களின் மனோபலம் என்பது மறுபுறம்.

இவற்றின் காரணமாக அவர்களது போராட்டத்துக்கு ஆதரவாகத் திரள்கின்ற பெருந்தொகையான நிதியுதவிகள் இன்னொருபுறம்.

இராணுவரீதியாக ஆனையிறவு முகாமைத் தம் வசமாக்கியது புலிகளுக்கு யாழ்ப்பாணத்திற்குள் பிரவேசிக்கும் திறந்த பாதையை வழங்கியுள்ளது.

மறுபுறம் ஆனையிறவிலிருந்து, புலிகள் கூறுவதைப் போல் பெரும் திரளான ஆயுதங்களும், சில ஆட்டிலெறிகளும், இராணுவத் தளபாடங்களும் அவர்களால் கைப்பற்றப்பட்டிருக்குமேயானால், அது அவர்களின் தாக்கும் ஆற்றலை ஒரு உயர்ந்த மட்டத்துக்கு இட்டுச் செல்வதாக இருக்கும்.

புலிகள் இங்கே 152 மி.மீ ஆட்டிலெறி சுடுகலன் ஒன்றையும் 122 மி.மீ ஆட்டிலெறிகள் இரண்டு சகிதம், பெருந்தொகையான ஆயுதங்கள், டாங்குகள், கவசவாகனங்கள், தொலைத் தொடர்புக் கருவிகள் உட்பட பலகோடி ரூபா பெறுமதியான இராணுவப் பொருட்களைக் கைப்பற்றியுள்ளதாக அறிவித்துள்ளார்கள்.

புலிகளின் ஆனையிறவுத் தாக்குதலுக்குத் தலைமை தாங்கியவர் பானு. இவரே முன்னர் யாழ் கோட்டை மீதான தாக்குதலுக்கும் தலைமை தாங்கி அங்கு புலிக்கொடி ஏற்றியவர். இப்போது ஆனையிறவு முகாமில் பானு ஏற்றிய புலிக்கொடி பறந்து கொண்டிருக்கிறது.

தமிழ் மக்கள் மத்தியில் தமிழீழம் என்ற கருத்துக்குறித்து சாத்தியம்-சாத்தியமில்லை என்ற ஓர் உள்ளார்ந்த விவாதம் நிகழ்ந்தபடியுள்ளது. இந்த ஆனையிறவுத் தாக்குதல் வெற்றி 'சாத்தியம்' என்று சாதிக்கும் தரப்பினரின் கரத்தை வெகுவாகப் பலப்படுத்தியுள்ளது.

அத்தோடு இவ் வெற்றியையடுத்து வெளி நாடுகளில் உள்ள தமிழர்கள் மத்தியில் பெரும் உற்சாகம் தோன்றியுள்ளது.

இலங்கை அரசாங்கமும், அதன் ராஜதந்திரிகளும் இதைக் கண்டு வாயடைத்துப் போய் நிற்கின்றனர்.

இதேவேளை மறுபுறத்தில் சிங்கள மக்கள் தரப்பில் உணர்வலைகள் கொந்தளிக்கின்றன. அரசாங்கத்தால் வழங்கப்பட்ட யுத்தமுனைச் செய்திகளை அவர்கள் நம்ப மறுக்கிறார்கள். இராணுவம் யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றிய வெற்றிச் செய்தியை 'நாடுகளை வென்று தளபதிகள் ஏந்திவரும் அரசகாலச் செய்தி சுருள் வடிவில் ஏந்தி வந்து பெரும் டாம்பீக ஏற்பாடுகளுடன் ஜனாதிபதியிடம் பிரதிப்பாதுகாப்பு அமைச்சர் அனுருத்த ரத்வத்த கையளித்த வைபவம் இப்போது ஒரு கேலிக்கூத்தாகத் தோன்றும் நிலை உருவாகி வருகிறது.

ஏனெனில், ஆனையிறவின் வீழ்ச்சியோடு இச் சரிவு நிற்பதாக இல்லை. இதுவரை பளைவரை புலிகளின் விஸ்தரிப்பு பரந்துவிட்டது. பளையை எட்டினால் புலிகளின் ஆட்டிலெறிகளின் வீச்சு பலாலி முகாமை எட்டும் நிலைக்கு வந்துவிடும். ஆனாலும் பளை ஒரு முன்னரங்க போர் முனையாக இருக்கும் வரை புலிகள் தமது ஆட்டிலெறிகளை அவற்றின் பாதுகாப்புக் கருதி அங்கு நகர்த்த மாட்டார்கள். பளையைத் தாண்டி புலிகளின் விஸ்தரிப்புச் சென்று பளை பின்னரங்கப் போர்த்தளமாகும் போதுதான் ஆட்டிலெறிகளை நகர்த்துவார்கள். தற்போது கொடிகாமப் பகுதி மக்களை இடம் பெயரும்படி அறிவுறுத்தி வருவது அவர்கள் இம் முன்னேற்றத்தை என்நேரமும் மேற் கொள்ளலாமென்ற பதற்றத்தை ஏற்படுத்தியுள்ளது. இராணுவம் எழுதுமட்டுவாளில் தனது பலமான தடுப்பரணை அமைத்துள்ளது. புலிகள் இதைத் தகர்ப்பார்களாயின் யாழ்ப்பாணம் அவர்களின் கைக்கெட்டியதாக மாறிவிடும்.

இதேவேளை மறுபுறம் வடமராட்சி நோக்கி நாகர் கோயிலை தாண்டி முன்னேறிவிட்டாலும் பலாலி முகாம் புலிகளின் ஆட்டிலெறி வீச்செல்லைக்குள் விழுந்து விடும்.

3 மாதங்களுக்கு முன்னரே முரசு தனது 340 ஆவது இதழ் எக்ஸ்ரே ரிப்போட்டில் "ஆனையிறவு முகாம் தாக்குதல் வெற்றியளிக்குமானால் அது மிகப்பெரும் சம நிலை மாற்றத்தை ஏற்படுத்தி விடும்" என்று சுட்டிக்காட்டியிருந்தது.

தற்போது எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, இத் தாக்குதலால் பேச்சு வார்த்தைகளுக்கான புலிகளின் பேரம் பேசும் திறன் அதிகரித்து விட்டதெனக் கூறியுள்ளார்.

இதேவேளை இராணுவத் தளபதி புலிகளின் சுடுபலம் அதிகரித்துள்ளதாக ஒத்துக்கொண்டு, தம்மிடம் இல்லாத ஆயுதங்களும் அவர்களிடம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

மேலும் அவரது கருத்துக்கள் இராணுவத்தின் சஞ்சலத்தைப் புலப்படுத்துகின்றன. யாழ் மக்கள் யார் தேவை என்பதைத் தீர்மானித்துக் கொள்ளட்டுமென்று அவர் கூறியுள்ளதும் இம் மனத்தளர்வை வெளிப்படுத்துகிறது. யாழ் மக்களைப் நாம் பாதுகாப்போமெனக் கூறி திரும்பிவர அழைத்தவர்கள்; இப்போது இப்படி மாறிக்கூறுமளவுக்குச் சென்றுவிட்டார்கள்.

இந்நிலையில் சிங்களப் பத்திரிகைகளும், பல்வேறு இனவாத அமைப்புக்களும் மிகவும் பதற்றத்துக்குள்ளாகியுள்ளன. அவை அரசாங்கம் யாழ்ப்பாணத்தை இழந்து விடும் என்று அவநம்பிக்கைக்கு உள்ளாகிவிட்டன. இதனால் முன்னர் எப்போதும் அவர்கள் கக்கிவந்த அகங்காரமும் மமதையும் கொண்ட பிடிவாதக் கருத்துக்கள் வெலவெலத்துப் போயுள்ளன. தாம் தமது கற்பனையான உயர் நிலையிலிருந்து அதல பாதாளத்துக்குள் விழுந்து கொண்டிருப்பதாக இப்போதுதான் உணர்ந்து விழிக்கின்றன. எப்படியாவது இந்த வீழ்ச்சி யைத் தடுத்து நிறுத்த வேண்டு மென்ற ஆதங்கத்தில் ஒருபுறம் அரசாங்கத்தின் பலஹீனங்களையும் அசமந்தப் போக்கு களையும் தோல்விகளையும் வைத்தபடி, மறுபுறம் மாற்றுவழிதேடி அலைகின்றன.

**-நரன்-**

இதனால் இப்போது அன்னிய உதவியை நாடவேண்டுமென்ற முனைப்பு இச் சக்திகளுக்கிடையே காலம் கடந்து தோன்றியிருக்கிறது. இவர்கள் எப்போதும் எடுத்த எடுப்பில் அன்னியத் தலையீடுகளை எதிர்த் தும் வந்தவர்கள்.

முன்னர் இந்திய-இலங்கை ஒப்பந்தத்தையும் இந்தியப் படைகளின் வருகையையும் எதிர்த்தவர்களும் இவர்களே. தற்போது நோர்வேயின் மத்தியஸ்தத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஊர்வலம் நடத்தி கொடியெரித்தவர்களும் இவர்களே.

ஆனால் தலை வெள்ளத்துக்குள் மூழ்கிய பின்னர்தான் கை எதையாவது பிடிக்க வெளியே துழாவுகிறது.

காலம் பிந்திவிட்டது? ■



ஊடகவியலாளர்களுக்கு முப்படைத் தளபதிகளும் விளக்கமளிக்கிறார்கள்.

## செய்திச் சிதறல்

✪ கொழும்பிலுள்ள இராணுவ மருத்துவமனையிலிருந்து விலையுயர்ந்த மருந்துகள் சிலவற்றை கடத்திச் சென்ற ஒருவர் பொலிஸாரிடம் மாட்டிக் கொண்டார். விசாரணையின் போது அவர் கொடுத்த தகவலின் அடிப்படையில் இராணுவ ஆஸ்பத்திரிக்கு பொறுப்பதிகாரியான கேர்ணல் சில்வா சார்ஜன்ட் தரத்திலுள்ள மற்றுமொருவரும், மருதானையிலுள்ள ஒரு மருந்தகத்தின் சிப்பந்தியும் கைது செய்யப்பட்டனர். இத்தகைய மருந்து திருடும் சம்பவம் தொடர்ந்து பல காலமாக நடந்து வருவதாகவும் இராணுவத்தைச் சேர்ந்த ஓர் அதிகாரியின் மருந்தகத்துக்காகவே இம்மருந்துகள் எடுத்துச் செல்வதாகவும் தகவல்கள் கூறுகின்றன.

✪ ஆனையிறவு மோதலைத் தொடர்ந்து ஏராளமான சிப்பாய்கள் இராணுவ மருத்துவமனையிலும் ஏனைய அரசாங்க ஆஸ்பத்திரிகளிலும் சிகிச்சைப் பெற்று வருகின்றனர். இவர்களுக்கு சில அத்தியாவசிய மருந்துப் பொருட்களை வழங்குவதற்காக ஐக்கிய தேசியக் கட்சியைச் சேர்ந்த பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர். ஜயலத் ஜயவர்த்தன எடுத்த முயற்சி இராணுவ மருத்துவமனை அதிகாரிகளால் தடுக்கப்பட்டது. ஐ.தே.கட்சியின் சார்பில் இராணுவ மருத்துவமனைக்கு மருந்துப் பொருட்களை கொண்டு வந்தால் அவற்றை ஏற்றுக் கொள்ள வேண்டாம் என்று மேலிடத்தில் உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருப்பதாக அவர்களிடம் தெரிவிக்கப்பட்டது.

✪ இந்தியா உட்பட சில வெளிநாடுகளுக்கு உத்தியோகப் பூர்வமான பயணத்தை மேற்கொண்டு நாடு திரும்பிய ஐ.தே. கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, ஆனையிறவு முகாம் புலிகளிடம் வீழ்ச்சியடைந்தது தொடர்பாக விவாதிப்பதற்கு பாராளுமன்றத்தை உடனடியாக கூட்ட வேண்டுமென்று கோரிக்கை விடுத்தார். இல்லையானால் ஏனைய அரசியல் கட்சிகளுடன் சேர்ந்து தானே பாராளுமன்றத்தைக் கூட்ட போவதாக அறிவித்தார். ஆனால் நாட்டிலுள்ள தற்போதைய நிலமையையிட்டு ஆராய்வதற்காக 2ம் திகதி செவ்வாய்க்கிழமை அலரிமாளிகையில் நடைபெறும் அவசரக் கூட்டத்துக்கு வருமாறு ரணிலுக்கு ஜனாதிபதி அழைப்பு விடுத்துள்ளார்.

✪ சிங்கள பேரினவாத அமைப்புக்களை ஒன்றிணைத்து செயற்படுவதற்காக உருவாக்கப்பட்ட 'சிங்கள உறுமய' கட்சியில் இலங்கையில் பிரபல கிரிக்கெட் ஆட்டக்காரரான அர்ஜுன ரணதுங்கவும் இணைந்து விட்டதாக வந்த செய்திகளை மறுத்துள்ளார்.

✪ ஆனையிறவு முகாமை விடுதலைப் புலிகள் கைப்பற்றி எட்டாவது நாளான 30ம் திகதியன்று பளை முகாமையும் புலிகள் தம்வசமாக்கி விட்டதாக தெரிவிக்கப்படுகிறது. இங்கு இடம் பெற்ற சமரில் பலியான 50 இராணுவத்தினரின் சடலங்களை புலிகள் ச.தே. செஞ்சிலுவை சங்கத்தினூடாக இராணுவத்தினரிடம் ஒப்படைத்துள்ளனர்.

✪ யாழ்ப்பாணத்தில் விடுதலை புலிகளுக்கும் அரசப்படைகளுக்கும் இடையில் தொடர்ந்து மோதல்கள் இடம் பெற்று வருவதனால் தமது பணிகளை தொடர்ந்து மேற்கொள்வது சிரமாக இருப்பதாகக் கூறி பன்நாட்டு தொண்டர் நிறுவனங்கள் அங்கிருந்து வெளியேற திட்டமிட்டு வருவதாக தெரிவிக்கப்படுகிறது. ●

-ஸ்பெஷல் ரிப்போர்ட்-

# புலிகள் இயக்கத்தின் வெற்றியின் இரகசியங்கள்

பிரேமதாசா
ஜனாதிபதித்தேர்தலில்
நின்றபோது,
அவருக்கு ஆதரவான
தேர்தல் வேலைகளை
தமிழ்ப்பகுதிகளில்
மேற்கொண்டவர்கள்
வேறுயாருமல்ல;
ஈ.பி.ஆர்.எல்.எஃப். தான்.
பிரேமதாசா
51 வீத வாக்குகளைப் பெற
ஈ.பி.ஆர்.எல்.எஃப். பின்
வேலைகள்தான்
உண்மையில் கைகொடுத்தன.

அந்தவகையில்
ஆரம்பக் கட்டத்தில்
ஈ.பி.ஆர்.எல்.எஃப். புடன்
பிரேமதாஸாவுக்கு
நல்லுறவு இருந்தது.

இந்த நல்லுறவின் போது
ஏற்பட்ட பழக்கத்தில்தான்
ஈ.பி.ஆர்.எல்.எஃப். பின்
மாகாண அமைச்சரான
டயான் ஜெயத்திலக
பிற்காலத்தில்
ஐ.தே.கவுக்கு மாறி
பிரேமதாசாவின்
ஆலோசகராகச் செயற்பட்டார்.
பிரேமதாசாவின்
மறைவுக்குப்பின்
சிறிசேன கூரேயுடன் சேர்ந்து
பிரேமதாசா நிலையத்தில்
செயற்பட்டு வருகிறார்.

இந்தவகையில்
உருவாகிய நெருக்கத்தை
ஈ.பி.ஆர்.எல்.எஃப்.
சமயோசிதமாகப் பயன்படுத்தத்
தவறிவிட்டது.

இந்தியாவின்
பக்கபலம் இருந்ததால்
பிரேமதாசாவின் துணையை
முக்கியத்துவம் வாய்ந்ததாக
அது உணரவில்லை.

கடைசி
தந்திரோபாய அடிப்படையிலாவது
பக்குவமாகக் கையாள
அதற்குத் தெரியவில்லை.

மாகாணசபை அரசாங்கத்தைப்
பெற்றுக் கொண்டதும்
வினைத்திறன் மிக்க ஒரு
நிர்வாகத்தை
வெற்றிகரமாக
ஈ.பி.ஆர்.எல்.எஃப். அமைத்தது.

புலிகளினால்
முதலமைச்சருக்காக
சிபாரிசு செய்யப்பட்டு,
ஜே.ஆரால் மறுக்கப்பட்ட
அதே பத்மநாதனை
தனது மாகாண அரசாங்கத்தில்
செயலாளராகப்
பணியாற்ற வைத்தது.

இருந்த போதிலும்
அந்த மாகாண அரசைச்
செயற்படுத்துவதில்
பாரிய சிரமங்களை
அது எதிர்நோக்கியது.

இரண்டு காரணங்களால்
அதற்குத் தடையேற்பட்டது.
ஒன்று,
புலிகள் இதனைச்
செயற்பட அனுமதிக்கவில்லை.
இரண்டாவது,
மாகாண சபையை
முழுமையாகச் செயல்படுத்த
போதிய அதிகாரங்களும்
வழிவகைகளும்
ஒத்துழைப்பும்
அரசாங்கத்திடமிருந்து
கிடைக்கவில்லை.

இதற்கான காரணங்கள்
பலவாயிருந்தன.
மாகாண அரசு என்பது
புதியதொரு
அரசியல் வடிவமாக
இலங்கைக்கு இருந்ததால்
அதன் செயற்பாட்டுக்கான
சகல வழிமுறைகளும்
ஒழுங்கமைக்கப் பட்டிருக்கவில்லை.



எல்லாமே
புதிதாக ஆரம்பிக்கப்
படவேண்டியதாக இருந்தது.
இதில்
மத்திய அரசாங்கத்துக்கும்
மாகாண அரசாங்கத்துக்கும்
இடையிலான
தங்குதடையற்ற
சீரான தொடர்பு
அவசியப்பட்டு நின்றது.

ஆனால் இங்கு
மாகாண அரசுபற்றிய
புரிதல்
அடியோடு அற்ற
மத்திய அரசின்
அதிகாரக் கட்டமைப்பு
இடங்கொடுக்கத்
தயாராக இருக்கவில்லை.

இதேவேளை,
பிரேமதாசாவின் எண்ணத்திலும்
மத்திய அரசு
மாகாண அரசென்னும்
இரண்டு வித
அரசு வடிவங்கள் பற்றிய
கருத்துருவம்
அடியோடு இருக்கவில்லை.
ஒரே அரசு வடிவமாகத்தான்
அவரது பார்வையும்
அணுகுமுறையும் இருந்தது.

மாகாண அரசுகளைத்
தனக்குக் கீழ்ப்பட்டு
நேரடியாகச் செயற்படும்
'நல்ல பிள்ளைகளாகத்தான்'
அவர் எதிர்பார்த்தார்.

அத்தகைய கருத்தோடுதான்
மாகாண சபைகளுக்கு
மாற்று வழியாக
பிரதேச செயலகங்களைப்
பின்னர் அமைத்தார்.

இத்தகைய சூழ்நிலையில்
மாகாண அரசாங்கமானது
அதிகாரமற்ற
வெறும் கோதாகவே
ஈ.பி.ஆர்.எல்.எஃப். புக்குப்
புலப்பட்டது.

அதனால், அது
அதற்குரிய
அதிகாரங்களைப் பெற
மத்திய அரசாங்கத்துடன்
மோதவேண்டியிருந்தது.

தமிழ் மக்களின்
அபிலாஷைகளை ஈடுசெய்யும்
மாற்றுத் தீர்வாக
மாகாண சபையை அது
நிரூபிக்க வேண்டிய
அரசியற் கடமையும்
அதற்கு விளைந்திருந்தது.
இதேவேளை
இந்தியாவின் உறுதுணையை
பாரிய பலமாக
அது கருதியிருந்தது.

இதனால்
இந்தியாவின் துணைகொண்டு
மத்திய அரசாங்கத்தைப்
பணியவைக்கும் முனைப்பில்
அது இறங்கியது.

மத்திய அரசுக்குச்
சவாலான செயல்பாடுகளை
மேற்கொள்ளத் தொடங்கியது.

மத்திய அரசால்
நிறைவேற்றிக் கொடுக்கப்படாத
தேவைகளை
இந்தியாவிடமிருந்து
நேரடியாகப் பெறுவதில்
அது இறங்கியது.
அது
மத்திய அரசுக்கான
தன்மானத்தைப் பாதிப்பதாய்
அமைந்திருந்தது.

இலங்கை அரசின் கீழ்
செயற்படும் அலகாக அன்றி
இந்திய அரசின்
மாகாணம் போலச்
செயற்படும் தோற்றப்பாட்டை
ஏற்படுத்தலாயிற்று.

முதலமைச்சர்
வரதராஜப் பெருமாளின்
இந்தியப் பயணங்களும்
இலங்கை அரசிடம்
அனுமதி பெறாமலே
வெறுமனே அதற்குச்
சொல்லிக்கொண்டு செல்வதாகவே
அமைந்திருந்தன.

இதேவேளை
ஈ.பி.ஆர்.எல்.எஃப்.
மாகாண அரசாங்கம்
சி.வி.எஃப். என்னும்
தொண்டர் படையையும்
கட்டத் தொடங்கியது.
அதற்கு மேலாக
ரி.என்.ஏ என்ற
தமிழ் தேசிய இராணுவம் ஒன்றை
ஈ.பி.ஆர்.எல்.எஃப்.
தலைமையில்
மாற்று இயக்கங்களைக் கொண்டு
இந்தியா அமைத்தது.

தனக்கு விசுவாசமற்ற
ஆயுதப் படையொன்று
இங்கே உருவாவது
இலங்கை அரசுக்குத்
துண்டறப் பிடிக்கவில்லை.

அதையும் மீறி
இந்த இராணுவ அமைப்பும்
இந்தியப் படைகளுமாகச்சேர்ந்து
இலங்கைப் பொலிசுக்கும்
இராணுவத்துக்கும்
சவாலாக இயங்கின.

திருகோணமலை போன்ற
பிரதேசங்களில்
இலங்கைப் பொலிசுக்கு
தமிழ் மக்களிடையே
பாரிய பயக்கெடுதி
இருந்துவந்தது.

இந்தியப்படைகளின்
வருகைக்குப் பின்னர்
இப் பொலிஸாரும் இராணுவமும்
மரியாதை இழந்தவர்களாயினர்.
சில சந்தர்ப்பங்களில்
இந்தியப்படையினர்
பொலிஸ் நிலையத்துக்குள் சென்றே
அதிகாரியைக்
கொலரில் பிடித்தும்
மிரட்டிவிட்டு வந்தனர்.

சிங்களக் குடியேற்றங்கள்
பாதுகாப்பிழந்தன.
இவற்றின் உச்சக்கட்டமாக
பிற்பட்ட நாட்களில்
இலங்கைப் பொலிஸார் மீது
ஆயுதத் தாக்குதல் நடத்திக்
கொன்றழிக்குமளவுக்கு
ரி.என்.ஏ சென்றது.

இவை யாவற்றையும் விட
இந்தியாவுக்கும்
பிரேமதாசாவுக்குமிடையிலான
எதிர்ப்பு மனப்பான்மை
சூடுபிடிக்கத் தொடங்கிவிட்டது.

இதற்குப் பலிக்கடாவாகத்
தாங்கள் ஆகிவருவதை
ஈ.பி.ஆர்.எல்.எஃப்.
உணர்ந்திருக்கவில்லை.

ஈ.பி.ஆர்.எல்.எஃப். பைக்
கடித்துக் குதறுமளவு
ஆத்திர உணர்வை
அரசாங்கத்துக்கு ஏற்படுத்திவிட்டு
அவர்களை
'அம்போ'வெனக் கைவிட்டுவிட்டு
இந்தியா போனதன்பின்தான்
ஈ.பி.ஆர்.எல்.எஃப்.
ஓடி முழித்தனர்.
அப்போது
காலம் பறிபோய்விட்டது.

**சத்தியன்**

இந்தியாவினதும்
ஈ.பி.ஆர்.எல்.எஃப். பினதும்
ஆத்திர மூட்டலைச்
சகித்துக் கொள்ள முடியாத,
இயல்பிலேயே ஆத்திரக்காரரான
பிரேமதாசாவைப்
பயன்படுத்திக் கொள்வது
சுலபமெனப்
புலிகளுக்குப் புரிந்தது.
ஆத்திரக் காரனுக்குப்
புத்தி மட்டென்பார்கள்.
ஆம்!
புலிகள் விரித்த வலையில்
பிரேமதாசா வீழ்ந்தார்!.

(இன்னும் நகரும்)

---

## அண்டை மண்டலத்தில்....

### ராஜீவ் காந்தி கொலை வழக்கு

# நளினி தலை தப்பியது, மற்றவர்கள் கதி?

ராஜீவ் காந்தி கொலை வழக்கில் தூக்கு தண்டனை விதிக்கப்பட்ட நால்வரில், நளினியின் தலைமட்டும் தப்பியிருக்கிறது. தமிழக முதல்வர் கருணாநிதியின் புண்ணியத்தில். முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோரின் கதி? அது இப்போது குடியரசுத் தலைவர் நாராயணனின் கையில்.

1991ஆம் ஆண்டு மே 21ம் நாளன்று தமிழ் நாட்டில் சென்னை நகரருகிலுள்ள ஸ்ரீபெரும்புதூரில் இந்தியாவின் முன்னாள் பிரதமர் ராஜீவ் காந்தி படுகொலை செய்யப்பட்டார். ஓராண்டு கழித்து 42 பேர் மீது குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்பட்டது. ஆறாண்டு விசாரணைக்குப் பிறகு சென்னையில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தின் கீழ் அமைக்கப்பட்ட நீதிமன்றம், தன் முன்னர் ஆஜர் படுத்தப்பட்ட 26 பேருக்கும் மரண தண்டனை விதித்தது.

விடுதலைப் புலிகள் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், அகிலா, பொட்டு அம்மன் உட்பட மற்றவர்களைக் காவல்துறை பிடிக்கமுடியவில்லை என்று கூறிவிட்டது. ஒரு சிலர் வழக்கு விசாரணையின்போதே இறந்துவிட்டார்கள், ஒற்றைக்கண் சிவராசன், சுபா, டிக்ஸன் உட்பட ஏனையோர் பொலீசாரின் கையில் சிக்கி மாண்டார்கள்.

உச்சநீதிமன்றத்திற்கு வழக்கு சென்றது. நால்வருக்கு தூக்கு, மூவருக்கு ஆயுள் தண்டனை, மற்றவர் விடுதலை என்று அது தீர்ப்பளித்தது. நளினி, முருகன், சாந்தன் மற்றும் பேரறிவாளன் ஆகியோர் வேலூர் சிறையில் அடைக்கப்பட்டனர். தூக்கு தண்டனையினை எதிர்த்து அவர்கள் மீண்டும் தாக்கல் செய்த மனு உச்சநீதி மன்றத்தால் நிராகரிக்கப்பட்டது. குடியரசுத்தலைவருக்கும் தமிழக ஆளுநருக்கும் அவர்கள் கருணை மனுக்களை அனுப்பி வைத்தனர்.

தமிழக அரசுதானே, கலைஞர் அரசுதானே, கருணை மனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்டுவிடும் என்று எல்லோரும் கருத்து தெரிவித்துக் கொண்டிருந்தனர். கருணாநிதியேதான் மரணதண்டனையினை கொள்கை அளவில் எதிர்ப்பதாகத் தெரிவித்தார். தப்பிவிட்டார்கள் நால்வரும் என்று எல்லோரும் நினைத்துக்கொண்டிருந்த வேளையில், ஆளுநர் ஃபாத்திமா பீவி மனுக்களை நிராகரித்துவிட்டார் என்று செய்தி வந்தது.

சரி, எல்லாம் முடிந்து விட்டது. இனி தூக்குமேடைதான் என்று முடிவு செய்யப்பட்டது. நால்வரும் தூக்குமேடை ஏறும் நாளும் குறிக்கப்பட்டது. போதிய வலுவுடைய கயிறுகள் இல்லாததால், கல்கத்தாவிலிருந்து அவை தருவிக்கப்படும் என்றெல்லாம் செய்திகள் வெளியாயின.

ஆனாலும் வழக்கறிஞர்கள் விடுவதாக யில்லை. ஃபாத்திமா பீவி மனுக்களை நிராகரித்தது செல்லாது, ஏனெனில் அவர் வக்காலத்து வாங்குவதாக புகார் வரும் என்றஞ்சியா? புலிகள்மீது பற்றுக் கொண்ட, ஆனால் அதைவைத்து காசு பண்ணாத பிரபல வழக்கறிஞர் சந்துரு, சட்டவிதிகள்படி ஆளுநர் அமைச்சரவையினைக் கலந்தாலோசிக்காமல் கருணைமனுக்களை நிராகரித்தது செல்லாது என்று வாதிட்டார். கருணாநிதிக்கு தர்மசங்கடமாகிவிட்டது.

ஒரு பக்கம் புலி ஆதரவாளர்கள் அவரது மனிதாபிமான அணுகுமுறையைப் பாராட்டி ஊர்வலம் எடுத்துக் கொண்டிருந்தார்கள், மன்னிப்பளித்தால் அரசியல் ரீதியாக தனக்கு பின்னடைவு ஏற்படுமோ என்ற அச்சம் இன்னொரு புறம், சரி, கருத்தேதும் தெரிவிக்காமல் ஃபைல்களை பீவிபக்கம் நகர்த்திவிட்டு தப்பிக்க முயற்சி செய்தால், மாநில அரசை கலந்தாலோசிக்காமல் தன்னிச்சையாக முடிவெடுத்திருக்கிறார் என்று கூறி சென்னை உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டது. இன்றுவரை அந்தக்கட்டத்தில் கருணாநிதி என்ன செய்தார் என்பது தெளிவுபடுத்தப்படவேயில்லை.

ஒரு கட்டத்தில் தான் மரணதண்டனைக்கு எதிரானவன் என்று பிரகடனப் படுத்திக்கொண்டார் கருணாநிதி. அந்தக் கருத்து ராஜீவ் கொலைவழக்கிற்கும் பொருந்துமென்றார். பின்னர் பொதுவான ஒரு கருத்தையே தான் சொல்லியதாகவும், நிருபர்கள் தான் தேவையில்லாமல் ராஜீவ் வழக்குடன் சம்பந்தப்படுத்திவிட்டனர் என்றும் பல்டியடித்தார். அது வேறு கதை.

உச்சநீதிமன்ற தீர்புக்களை சுட்டிக் காட்டி, தண்டனைகளைக் குறைப்பதற்கு முகாந்திரம் ஏதும் இல்லை என்று துறை அதிகாரிகள் சொல்ல, அதனை ஆமோதிக்கும் ரீதியில் கையெழுத்திட்டு ஃபைல்களை ஆளுநருக்கு முதல்வர் அனுப்பினார் என்றே சொல்லப்படுகிறது.

மரணதண்டனையை எதிர்ப்பவர் ஏன் தைரியமாக தண்டனை மாற்றப்படவேண்டும் என்று கூறவில்லை? விடுதலைப் புலிகளுக்கு வழக்கு வேறு போட்டு தன் நிலையென்ன என்று அறிவிக்கக் கட்டாயப்படுத்துகிறார்கள்.

இறுதிவரை நீதிமன்றத்தில் அரசின் கருத்தென்ன என்பதை அரசு வழக்கறிஞர் கூறவேயில்லை. அமைச்சரவையைக் கலக்காமலேயே முடிவெடுக்கும் உரிமை ஆளுநருக்கு உண்டென்றுமட்டுமே வாதாடப்பட்டது. நீதிபதி கோவிந்தராஜன் பீவிக்கு அந்த உரிமையில்லை, அமைச்சரவையைக் கலந்தாலோசித்து கருணைமனுக்கள் மீது முடிவெடுக்கட்டும் என்று தீர்ப்புக்கூறினார்.

தீர்ப்புக் குறித்து கருத்து தெரிவிக்கையில் கருணாநிதி, "ஆளுநர் தவறேதும் செய்யவில்லையே," என்று மட்டும் கூறினார். "சரி, இப்போது என்ன செய்யப் போகிறீர்கள்?" என்று கேட்டால், "சட்டவல்லுநர்கள் இது குறித்து ஆய்வு செய்வார்கள்," என்று கூறிவிட்டு நிறுத்திக்கொண்டார்.

இடையில் சோனியா காந்திவரை விவகாரம் சென்று, சம்பந்தப்பட்ட அனைவருக்கும் மரணதண்டனை ஆயுட்காலமாக குறைக்கப்படலாம் என்று அவர் குடியரசுத்தலைவருக்கே கடிதம் எழுதியதாக செய்திகள். இல்லை, இல்லை நளினியைமட்டும்தான், அவரது குழந்தையின் எதிர்காலத்தை உத்தேசித்து, மன்னித்து விடுமாறு சோனியா ஆலோசனை கூறினார் என்றும் சிலர் கூறுகின்றனர். இன்னும் பல்வேறு தரப்புக்களிலிருந்தும் அத்தகைய கோரிக்கைகள் எழுந்தன.

ஒரு கையெழுத்தியக்கமே நடத்தப்பட்டது. இதில் ஒன்றை விளங்கிக்கொள்ள வேண்டும். மரணதண்டனை குறைக்கப்படவேண்டும் என்று வாதாடியவர்களெல்லாம் புலி ஆதரவாளர்களல்ல, மனிதாபிமானத்தின் பேரிலேயே அவர்கள் அப்படிக் கோரினார்கள். தமிழகத்தைப் பொறுத்தவரை நால்வர் மீதும் பெரிய அளவில் அனுதாபமிருந்ததாகக் கூறமுடியாது. ஒழிந்து போகட்டும், நடந்தது நடந்துவிட்டது, எதற்காக இவர்களை, குறிப்பாக நளினி, முருகன் இருவரையும் தூக்கு மேடைக்கு அனுப்பி, மகள் அரித்ராவை அனாதையாக்க வேண்டும் என்று பலர் நினைத்தார்கள் அவ்வளவே.

நான்கு மாதங்கள் முடிவெடுக்க முடியாமல் திணறி, பின்னால் நளினிக்கு மட்டும் மன்னிப்பு என்று தமிழக அரசு அறிவித்தபோது யாரும் விழா எடுக்கவில்லை, இன்னுஞ் சொல்லப்போனால் சட்டப்பேரவையில் நளினிக்கு கருணைகாண்பிக்குமாறு ஆளுநருக்கு சிபாரிசு செய்ததில் தவறெதுமில்லை என்று பெரிய பிரசங்கமே செய்யவேண்டியதாயிருந்தது கருணாநிதிக்கு.

**கானகன்**

நளினியைத் தப்பிக்க விட்டதால் தமிழகத்தில் மீண்டும் விடுதலைப்புலிகள் நடமாட்டம் அதிகமாகும் என்று அ.இ.அ.தி.மு.க.வும், தமிழ் மாநில காங்கிரசும் அச்சம் தெரிவித்தன. பதிலுக்கு முதல்வர் முந்தைய காலகட்டங்களில் ஜெயலலிதா புலிகளுக்கு வக்காலத்து வாங்கியதை நினைவு கூர்ந்தார்.

சிங்கள இராணுவமும், காவல் துறையும் இலங்கையில் தமிழ் இனத்தை அழிப்பதில் தீவிரமாக இருக்கிறார்கள், துணிவுடன் விடுதலைப்புலிகள் இராணுவத்தை எதிர்கொள்கிறார்கள், அவர்களுக்கு கருணாநிதி உதவவேயில்லை, என்றெல்லாம் 1990ல் ஜெயலலிதா குற்றஞ்சாட்டியிருந்தாரே, இப்போது என்னை புலிகளுக்கு ஊக்கம் கொடுப்பதாகச் சொல்வது தவறல்லவா?" என்றார் முதல்வர். "சோனியா கருணை காட்டச் சொல்லும் போது, நான் மட்டும் அதுபோல் கூறக் கூடாதா? நானும் இந்திரா காந்தி குடும்பத்திற்கு மிக நெருக்கமாகயிருந்தவன்தானே? தீர்ப்புக் கூறிய மூன்று உச்சநீதிமன்ற நீதிபதிகளில் ஒருவர், 'நளினி பாவம், அப்பாவி, முருகனால் மூளைச்சலவை செய்யப்பட்டவர், ஸ்ரீபெரும்தூரில்தான் அவர் இறங்கியிருந்த செயலின் பயங்கரத்தை அவர் உணர்ந்தார், மேலும் பெற்றோரிருவரையும் தூக்கு மேடைக்கு அனுப்பிவிட்டால் குழந்தை அனாதையாகிவிடுமே,' என்றல்லவா கூறியிருந்தார். அவர் ராஜிவ் கொலையை நியாயப்படுத்தியதாகச் சொல்ல முடியுமா என்ன?" என்று வினவினார் அவர். எவ்வளவு சிரமப்படுகிறார் பாருங்கள். அதுவும் தான் மரணதன்டனைக்கு எதிரானவன் என்று பிரகடனப்படுத்திக்கொண்ட பிறகு, அவ்வாறு செய்ததற்கு.

ஊஹூம். ஒருவரையாவது காப்பாற்றியதற்கு நன்றி என்றார் பழ. நெடுமாறன். "புலிகளுக்கு நண்பர்களுமில்லை, எதிரிகளுமில்லை. தங்கள் காரியம் ஆவதற்கு யாருடைய காலையும் பிடிப்பார்கள் முடிந்தபிறகு கழுத்தை நெரிப்பார்கள்!" என்கிறார் ஒரு விமர்சகர் இப்போது கருணாநிதியினால் என்ன காரியம் ஆகவேண்டும்? மற்ற மூவரும் தப்புவது குடியரசுத்தலைவரின், அதாவது மத்திய அரசின் கையில். இந்நேரம் பார்த்து கலைஞரை பகைத்துக் கொள்வது புத்திசாலித்தனமல்லவே.

மத்திய அரசியல் சட்ட அமைச்சர் ராம் ஜெத்மலானி, பாதுகாப்பு அமைச்சர் ஃபெர்னாண்டஸ், வை.கோ, டாக்டர் ராமதாஸ் இவர்களின் ஒட்டுமொத்த முயற்சியால் மற்ற மூவரையும் காப்பாற்ற முடியும் என்ற நம்பிக்கை புலி ஆதரவாளர்களுக்கிருக்கிறது. இந்துத் தமிழர்களை சிங்கள பௌத்தர்கள் நசுக்குகிறார்கள் என்ற பிரச்சாரம் பாரதிய ஜனதா மத்தியில் எடுபடுகிறது. என்பதையும் மறக்கலாகாது. இத்தனையும் மீறி காங்கிரஸ்காரரான குடியரசுத் தலைவர் நாராயணன் கருணை மனுக்களை நிராகரிக்கவும் செய்யலாம். பொறுத்திருந்துதான் பாாக்கவேண்டும்.

# புத்தாயிரமாவது ஆண்டின் முதலாவது 'வெசாக் முழுநிலவு!'

அலசுவது - இராஜதந்திரி

புத்தாயிரமாம் ஆண்டில் புத்த பகவானின் மகிமையைக் குறிக்கும் முதலாவது வெசாக் பௌர்ணமி நிலவு இம்மாதத்தில் தோன்றவிருக்கிறது.

பிறப்பில் அரசிளங்குமரனாக அவதரித்த சித்தார்த்தரே பின்னர் ஞானோதயம் பெற்றுக் கௌதம புத்தரானார்.

இளவரசர் சித்தார்த்தர் தமது குதிரை மீதேறி ஒரு நாள் உலா வந்தபோது ஒரு வயோதிபனையும், பின்னர் அவஸ்த்தைப்படும் ஒரு நோயாளியையும், இவற்றையடுத்து மரண ஊர்வலமொன்றையும் கண்டார்.

இந்த மூன்று காட்சிகளுமே வாழ்க்கை நிலையாமை, மானிடரின் துன்ப, துயரங்கள் என்பவைபற்றி அறியும் சந்தர்ப்பத்தை அவருக்கு வழங்கின.

இதனையடுத்து வாழக்கிடைத்த காலத்தில் மனிதர்கள் எவ்வாறு உன்னதமானவர்களாகத் திகழலாம் என்று ஆழச்சிந்தித்து, இளவரசர் சித்தாத்தர் மேற்கொண்ட தியானப் பயணமே அவரை தெய்வீக நிலைக்கு உயர்த்தியது.

இளவரசர் சித்தார்த்தர் புத்தபகவான் என்ற நிலைக்கு உயர்ந்து அருளிச் சென்ற போதனைகளே லௌகீக வாழ்வில் மானிடர்களுக்கு ஔடதமாகவும் இருக்கின்றன.

இளவரசர் சித்தார்த்தர் புத்தபகவான் என்ற நிலைக்கு உயர்ந்து அருளிய போதனைகளை கலிங்கத்துப் போரில் வாளேந்திப் போரிட்டு பல உயிர்களைக் கொன்று குவித்த அசோகச் சக்கரவர்த்தியும் பின்பற்றலானார்.

போரின் கொடுமையையும், அதனால் மானிடகுலம் எதிர்நோக்கும் அவலங்கள், இன்னல்களை தான்நடத்திய கலிங்கப் போரிலேயே அசோகச் சக்கரவர்த்திநேரில் கண்டார்.

இதனையடுத்தே அவர் புத்தரின் போதனைகளை ஏற்றுக்கொண்டதோடு தமது வாரிசுகளான, புதல்வன் மஹிந்தனையும், புதல்வி சங்கமித்தையையும் பௌத்தத்தைத் தழுவச் செய்தார்.

எனவே போரின் அனர்த்தத்தைக் கண்டுணர்ந்த அசோகச் சக்கரவர்த்தியின் புதல்வர் மஹிந்தன், புதல்வி சங்கமித்தை ஆகியோரே புத்தபிரான் தியானமிருந்த வெள்ளரசுமரத்தின் கிளையையும் இலங்கைக்குக் கொண்டுவந்தனர். இதனையடுத்தே பௌத்தம் இலங்கையிலும் வேரூன்றலாயிற்று.

இருந்தபோதிலும் இலங்கையில் புத்தமதம் பெயரளவில் மட்டுமே இருந்து வருகின்றது. அம்மதம் எவற்றையெல்லாம் மானிடர்கள் தவிர்க்க வேண்டுமெனப் போதித்ததோ, அவற்றையெல்லாம் இலங்கையில் புத்தபிக்குகள் எனக் கூறப்படுவோர் முதற்கொண்டு, பௌத்தர்கள் என்றிருப்போர் விடாப்பிடியாகக்கைக்கொண்டிருப்பதையே அவதானிக்க முடிகின்றது.

கடந்த ஏப்ரல் மாதத்தின் வசந்தகாலம் கொண்டுவந்த சித்திரைப் புத்தாண்டின் குதாகலத்தைக் கொண்டாடமுடியாத இலங்கை மக்கள், தற்போது புத்தபகவான் அவதரித்த வெசாக் மாதத்தின் மகத்துவத்தையும் கொண்டாட முடியாதவர்களாகவே இருக்கின்றனர்.

ஆனையிறவு மோதலில் உயிரிழந்த படையினரின் சடலங்கள் சென்றடையாத இடங்களே இலங்கையில் இல்லையெனக் கூறலாம்.

அடையாளங்காணப்பட்ட சிப்பாய்களின் உடல்கள் அவர்களின் கிராமங்கள், நகரங்களைச் சென்றடைந்தன. அடையாளங் காணப்படமுடியாமல் உருக்குலைந்திருந்த ஏராளமான சடலங்கள் யுத்தப் பிரதேசங்களிலேயே புதைக்கப்பட்டிருந்தன.

கடந்த பத்துவருடங்களுக்கும் மேலாகவே யுத்த அனர்த்தம் இலங்கையில் தொடர்ந்து கொண்டிருப்பதுடன் அழிவுகளும் பெருகியவாறே இருக்கின்றன.

ஆனையிறவுத்தளத்தைக் கைப்பற்றிய தமிழீழ விடுதலைப் புலிகள் தற்போது வடக்கே ஆயுதப் படையினரைவிட விஸ்தாரமான நிலப்பிரதேசத்தை வன்னியிலிருந்து யாழ்குடாநாட்டின் பளைப் பிரதேசம் வரை தமது கட்டுப் பாட்டின் கீழ் கொண்டுவந்துள்ளனர்.

அனுபவம்மிக்க உயரதிகாரிகள் ஓய்வுபெற்ற நிலையிலும், யுத்தகளத்தில் நின்ற சிரேஷ்ட அதிகாரிகளில் பெரும்பாலானோர் உட்பட சாதாரண சிப்பாய்கள் பலர் உயிர்நீத்த நிலையிலும் யாழ்குடாநாட்டில் ஆயுதப்படையினர் பெரிதும் நிலைதளர்ந்துள்ளனர்.

உயிரிழப்புக்கள் மட்டுமல்ல, பலகோடிக்கணக்கான பெறுமதிமிக்க யுத்த சாதனங்களும் ஆனையிறவு மோதலில் புலிகள் வசமாகியுள்ளன.

எனவே ஆட்பற்றாக்குறைக்குமட்டு மல்ல, ஆயுதப் பற்றாக்குறைக்கும் ஏககாலத்தில் பரிகாரம் தேடவேண்டிய நிர்ப்பந்தம் அரசுக்கு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகவே கடந்தவாரம் சர்வதேச ஆயுத விற்பனையாளர்கள் சிலர் வரவழைக்கப்பட்டு, புதிய நவீனரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்வது பற்றி பாதுகாப்பமைச்சு பேச்சுக்களை நடத்தியிருந்தது.

புலிகளால் கடந்த சிலவருடங்களாகவே ஓயாத அலைகள் என்ற பெயரில் தொடர்ச்சியாகப் பெருந்தாக்குதல்கள் நடத்தப்பட்டு வருகின்றன.

இத்தாக்குதல்கள் முல்லைத்தீவு முகாம் தாக்குதலில் ஆரம்பமாகின. அன்றிலிருந்து ஆனையிறவு மோதல் வரை புலிகள் நடத்திய தாக்குதல்களில் அதிநவீன ஆயுதங்கள் பல்வேறு ரகத்திலும் அவர்கள் வசமாகியிருப்பதையே காணமுடிகின்றது.

இறுதியாக ஆனையிறவில் நடந்த தாக்குதலில் இராணுவத்தினரின் சக்திமிக்க யுத்தடாங்கிகள், மற்றும் கவச வாகனங்கள் சிலவும் புலிகள் வசமாகியுள்ளன.


155 மி.மீ ரக நெடுந்தூர ஆட்டிலறிப் பீரங்கி, மற்றும் எண்ணிலடங்காத தொகையில் ஆட்டிலறி, ஷெல் வெடிகுண்டுகள் இயந்திரத்துப்பாக்கிகள் என்பவையும் புலிகளால் ஆனையிறவில் கைப்பற்றப்பட்டுள்ளன.

எனவே புலிகளைப் பொறுத்தவரை ஆயுதங்களுக்குப் பஞ்சமில்லை என்ற நிலையே காணப்படுகின்றது.

இந்நிலையில் அரச தரப்பினரும் சர்வதேசசந்தையில் மேலும்அதிகளவில் ஆயுதங்களை வாங்கிக் குவிக்கும் பட்சத்தில் ஏற்படக்கூடிய மோதல்கள் பயங்கரமான விளைவுகளை ஏற்படுத்துமென்றே கருதலாம்.

ஆயுதப்படையினர் நவீன ஆயுதங்களைப் பெற்றவர்களாக புதிய தாக்குதல்களைத் தொடுக்கும்பட்சத்தில், புலிகளும் தம்மிடமுள்ள நவீன ஆயுதங்களைப் பயன்படுத்துவர். அச்சமயம் அழிவென்பது மேலும் பெருகுமே தவிர எவ்வகையிலும் குறைந்து விடாதென்றே கருதலாம்.

பிணங்கள் குவிந்துள்ள இடத்தில் கழுகுகளும், வல்லூறுகளும் வந்து சேர்வதைப் போலவே, தற்போதைய போர்ச்சூழலை நன்கு லாபகரமானதாகப் பயன்படுத்த சர்வதேச ஆயுத விற்பனையாளர்களும் கொழும்பு வந்துள்ளதை அவதானிக்க முடிந்தது.



யுத்தம் மூலம் எவ்விதத்திலும் ஓர் இறுதி வெற்றியை ஈட்டமுடியாதென்பதையே அனைத்துத்தரப்பினரும் ஏற்றுக்கொண்டுள்ளனர்.

யுத்தத்தை நிறுத்தி சமாதான நடவடிக்கைகளை மேற்கொள்ள நோர்வே கரம் நீட்டியபோது அதனைக் கைப்பற்றி சமாதான முயற்சிகளை விரைந்து முன்னெடுப்பதில் அரச தரப்பினர் ஆர்வங்காட்டவில்லை.

ஆனால் யுத்தத்தைத் தொடர்ந்து நடத்துவதற்கான ஆயுதங்களைப் பெறுவதற்கு ஒன்றுக்கும் மேற்பட்ட வெளிநாடுகளிடம் இலங்கை மண்டியிட்டுள்ளதையே காணமுடிகின்றது.

ஆட்சியாளர்கள் ஆயுதவிற்பனையாளருடன் பேரம் பேசிய

அதேசமயம், மூத்த பிக்குமார்களின் குழுவொன்று இலங்கைக்கான இந்திய உயர்ஸ்தானிகரையும் சந்தித்திருந்தது.

அப்பிக்குமார் கூட இந்தியாவிடம் இன்றைய பிரச்சனையைத் தீர்ப்பதற்கு அரசியல் ரீதியான உதவிகளைக் கோருவதை விடுத்து, இராணுவ ரீதியான ஒத்துழைப்பை வழங்கும்படியே இந்திய ஸ்தானிகர் சிவசங்கர் மேனனிடம் கேட்டிருந்தனர்.

1987ம் ஆண்டு. யாழ்குடாநாட்டில் இரணுவத்தினர் ஒப்பரேஷன் வடமராட்சி நடவடிக்கையை ஆரம்பித்தபோது பாதிக்கப்பட்ட வடபகுதி மக்களுக்கு இந்தியா, உணவு, மற்றும் மருந்துப் பொட்டலங்களை ஆகாய மார்க்கமாகப் போட்டிருந்தது.

அப்போது அந்த நடவடிக்கையை தென்னிலங்கையர்கள் பரிகாசம் செய்தனர். கொழும்பிலுள்ள இந்தியத்தூதரா லயத்தினுள் ஒரு சிறிய தனியார் விமானமொன்று நையாண்டியாக பருப்புப் பொட்டலங்கள் சிலவற்றையும் வீசியிருந்தது.

இது தவிர 1987ம் ஆண்டில் இலங்கை இந்திய ஒப்பந்தம் கொழும்பில் ஓர் அமைதியற்ற சூழ்நிலையிலேயே கைச்சாத்திடப்பட்டிருந்தது.

மறைந்த இந்தியப் பிரதமர் ரஜீவ்காந்தி இலங்கை-இந்திய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடுவதற்காகக் கொழும்பு வந்திருந்தபோது அணிவகுத்து நின்ற கடற்படைச் சிப்பாய் ஒருவன் ரஜீவ் காந்திமீது தனது ரைபிள் துப்பாக்கியினால் அடித்திருந்தான்.

பிக்குமார்கள் உட்பட ஏராளமானவர்கள் அன்று இந்தியாவின் தலையீட்டை வன்மையாகக் கண்டித்து ஆர்ப்பாட்டங்களைச் செய்திருந்தனர்.

ஆனால் இலங்கையில் இருவருடகாலம் நிலைகொண்டிருந்த இந்தியப் படை வெளியேறி பத்து ஆண்டுகள் பூர்த்தியடைந்த நிலையில் தற்போது இலங்கையில் ஒரு சாரார் இந்தியாவிடம் மீளவும் இராணுவ உதவி கேட்பது வேடிக்கையானதாகவே இருக்கின்றது.

இந்தியப்படையினர் இலங்கையிலிருந்து வெளியேறி பத்து ஆண்டுகள் பூர்த்தியானதைத் தொடர்ந்து இலங்கையில் பணியாற்றிய இந்தியப்படை உயரதிகாரிகள் பலர் தமது இலங்கை அனுபவம்பற்றி அண்மையில் குறிப்பிட்டிருந்தனர்.

இந்தியா இலங்கைக்கு இராணுவத்தை அனுப்பிவைத்தமை பெருந்தவறு என்றே அந்த அதிகாரிகள் பலரும் குறிப்பிட்டிருந்தனர்.

அத்துடன் இலங்கையிலிருந்தும் வெளியேறிய இந்தியப் படை உயரதிகாரிகள் தமது அனுபவங்களை மையமாகவைத்து, இலங்கை இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வே காணப்படவேண்டுமென்பதை வலியுறுத்தியிருந்தனர்.

இலங்கையில் இந்தியப் படைகளின் பிரதம தளபதியாகவிருந்த ஜெனரல் கல்கட்இலங்கைப் பிரச்னைக்கு அரசியல் தீர்வின் அவசியத்தை வலியுறுத்தியவர்களில் முக்கியமானவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இதுதவிர தமிழீழ விடுதலைப் புலிகள் ஒரு சிறந்த பலம் மிக்க கெரில்லா அமைப்பாக இருக்கின்றனர் என்பதையும் இந்திய தளபதிகள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

இந்நிலையில் யுத்தத்தின்மேல் யுத்தங்களை நடத்தி அழிவுக்கு மேல் அழிவைத் தேடிய நிலையிலும், அரசியல் ரீதியான சமரச நடவடிக்கைகள்இதுவரை ஆரம்பிக்கப்படாதிருப்பது விநோதமானதாகவே இருக்கின்றது.

புத்தாயிரமாம் ஆண்டின் முதலாவது புனித வெசாக் முழு நிலவு தோன்றவிருக்கும் இத்தருணத்தில் புத்த பகவானின் போதனைகளுக்குப் புறம்பான யுத்தம் பேரழிவுகளையே ஏற்படுத்தியிருக்கிறது.

இளவரசர் சித்தார்த்தர் புத்த பகவானாக உயர்வதற்கு அவர் கண்ணுற்ற ஒரு மரண ஊர்வலமும் காரணமாக இருந்தது.

இலங்கையில் ஒன்றல்ல; பல நூறு மரண ஊர்வலங்கள் யுத்த அனர்த்தத்தினால் இடம் பெறுவதைக் காணமுடிகின்றது. இவற்றைக் கண்டும் யுத்தத்தைத் தொடரச் செய்யும் சூழ்நிலைகளே பலமடைந்துள்ள நிலையில் பௌத்ததர்மமும், இலங்கையில் வலுவிழந்ததோ என்றே எண்ணத் தோன்றுகிறது.

## அதிரடி அய்யாத்துரை



**இராணுவ ஆஸ்பத்திரி** யிலிருந்து மருந்துகள் களவெடுக்கப் பட்டிருக்குது. கேர்ணல் தரத்திலிருக்கிற அதிகாரிதான் சூத்திரதாரி. யுத்தத்தினால் காயப்பட்டு உயிருக்காக ஊசலாடிக்கொண்டு போர் வீரர் இருக்கினம். இந்த நேரத்தில் அந்த கேர்ணல் வைத்திய சாலையிலிருந்து மருந்து வியாபாரம் செய்திருக்கிறார். யார் கண்டது, இராணுவ ஆயுதக்களஞ்சியத்திலிருந்து அவர் வெடிமருந்து வியாபாரமும் செய்திருக்கலாம்.

**கிரிக்கெட் பந்தயத்துக்கும்,** குதிரையோட்டப் பந்தயத்துக்கும் வித்தியாசமில்லாமல் போயிருக்குது. குதிரைப் பந்தயத்தில் காசு கட்டுவதுபோல கிரிக்கெட் பந்தயத்திலும் காசுகட்டிச் சூதாட்டம் நடத்தப்படுகிது. தென்னாபிரிக்கக் கப்டன் அகப்பட்டிருக்கிறர். இன்னும் நன்றாக ஆராய்ந்தால் பல முக்கிய விளையாட்டுக் காரர்களும் அகப்படுவர்கள் என்று சொல்லப்படுகிறது. ஏதோ ஒழுக்கமான விளையாட்டு என்றிருந்த கிரிக்கெட்டிலும், இப்ப ஒழுங்கீனங்கள் ஏற்பட்டிருக்கிறது. ஒரு சூதாட்டமாக மாறுகிறது கிரிக்கெட்.

**கிணறு வெட்டப்பூதம்** தோன்றியது போல கண்ணிவெடி அகற்றுவதில் ஈடுபட்டிருந்தபோது வடக்கே யுத்தம் மூண்டிருக்குது. நிலத்தைத் தோண்டி கண்ணிவெடிகளை அகற்றிய ஐ.நா. தொண்டர்கள் கொழும்பு திரும்பியிருக்கினம். யுத்தம் போறபோக்கில குடாநாட்டில் கந்தகக் காற்றுத்தான் பலமாக வீச ஆரம்பிச்சிருக்குது.

**எதிலும் அசல், நகல்** என்றிருப்பது போல இப்ப பொலிஸ், ஆயுதப்படையிலும் அசல். நகல் என்றிருக்குது. போலிப் பொலிஸாராலும், ஆயுதப் படையினராலும் நாளுக்குநாள் தொல்லைகள் அதிகரிக்குது. தமிழ்மக்களே சரியாகப் பாதிக்கப் பட்டிருக்கினம். போர்க்காலம் இந்தப் பேர்வழிகளுக்கு நல்ல வாய்ப்பாக இருக்குது.

**ஒரு காலத்தில்** கலைஞர் மு.கருணாநிதியை பச்சைக் கட்சிக்காரர் திட்டித் தீர்த்தவை. கலைஞரை தமிழ்த்தீவிரவாதத்தின் ஆதரவாளர் என்றெல்லாம் வசைபாடியிருந்தனர். இன்று அதே பச்சைக் கட்சியின் தலைவர் ரணில், கலைஞரைச் சந்தித்து குலம் விசாரித்திருக்கிறார். அரசியலில் நட்பும், பகையும் நிரந்தரமில்லை என்று இருவரும் நிரூபித்திருக்கினம்.

**பட்டி, தொட்டியெல்லாவற்றையும்** காந்தம் போல பி.பி.ஸி தமிழோசையின் நாதஸ்வர இசை சுண்டி இழுத்து விட்டிருந்தது. ஆனால் இப்ப மேற்கத்தேய இசையோடுதான் தமிழோசை தொடங்குது. குறள் விளக்கம் கூட ஆங்கில இசைப் பின்னணியோடு வரும் போது தமிழ் மணம் குன்றி விடுகிறது தனித்துவம் பேண தமிழிசையோடு தமிழோசை ஒலிபரப் பாகவேண்டும். இல்லைபோல் பி.பி.ஸியில் தமிழின்பத்தை அனுபவிக்கமுடியாமலே போய்விடும்.

உண்மைத் தொடர்

## அதிர் இடி 107

### கடந்தவாரம்

இடி அமீனின் அமைச்சரவையில் இருந்த சில அமைச்சர்களும் உயர்தர அதிகாரிகளும் நாட்டைவிட்டுத் தப்பிச் சென்றுவிட்டனர். ஆனால் அமைச்சர் ஹென்றி சியம்பா அமீனுடன் ஒட்டியே இருந்து வந்தார். ஆனால்அமீனின் கொலைப் பட்டியலில் சியம்பாவின் பெயர் அடுத்து வருவதாகவும் இருவர் பேசிக்கொண்டிருப்பதை சியம்பாவுக்கு வேண்டியவர் ஒருவர் அறிவித்திருந்தார். இதேபோல் பல தகவல்கள் சியம்பாவுக்கு எட்டின. இவற்றையெல்லாம் வைத்து சியம்பா நாட்டை விட்டு வெளியேற அந்தரங்க ஏற்பாடுகளைச் செய்யலானார். அதே வேளை தனது திட்டங்கள் அமீனை எட்டிவிடாமல் முன்னேற்பாடுகளையும் செய்தார்.

தனது குடும்பத்தினரைப் பத்திரமாக நாட்டை விட்டு வெளியேற்றிவிடவும் ஏற்பாடுகளைச் செய்தார். ஜெனீவாவில் நடைபெறவிருந்த உலக சுகாதார அமைச்சர்கள் மாநாட்டில் உகண்டா தூதுக்குழுவுக்கு சியம்பாவே தலைமை தாங்க வேண்டியிருந்தது. இம்மாநாட்டுக்கு முன்னோடியான நடவடிக்கைகளையும் ஆபிரிக்க நாடுகளின் ஒன்றியம் செய்ய வேண்டியிருந்தது. ஆகவே முன்னதாகவே எகிப்தின் தலைநகர் கெய்ரோவுக்கு செல்ல சியம்பா அமீனிடம் அனுமதிகேட்டார். ஆர்ச் பிஷப்பும் அமைச்சர்கள் இருவரும் கொல்லப்பட்டது தொடர்பாக உலக நாடுகளில் எழுந்த செய்திகளை மறுத்துரைக்கவும் கெய்ரோ மாநாடு உதவும் என்றும் அமீன் கருதினான்.

இனி...

# இடி அமீன்

அமீனுடைய அமைச்சர் அவையிலிருந்த பலர், அமீனிடம் சொல்லி கொள்ளாமலே நாட்டை விட்டு வெளியேறி விட்டனர். தொடர்ந்து இருந்த ஏனையோரும் வெளியேறுவதற்கான சந்தர்ப்பத்தை எதிர்பார்த்துக் காத்திருந்தனர். இத்தகையோர் மீது அமீனுடைய ஒற்றர்கள் எப்போதும் கண்காணித்த வண்ணமிருந்தனர்.

அமைச்சர் சியம்பா தன்மீது அமீனின் சந்தேகக்கண் விழுந்துவிடாமலிருக்க போதிய முன்னேற்பாடுகளைச் செய்திருந்தார். ஜிஞ்ஜா பிரதேசத்தில் அவருக்கு 70 ஏக்கர் பண்ணை ஒன்று இருந்தது. அதனை மேலும் விரிவாக்க எண்ணியிருப்பதனால், அயலிலுள்ள காணிகளையும் விலை பேச ஆரம்பித்தார். நாட்டை விட்டு வெளியேறும் ஒருவர் புதிதாகக் காணி வாங்க வேண்டிய அவசியம் இல்லையே, என்ற எண்ணத்தைப் பரப்புவதற்காகவே இவ்வாறு ஒரு பொய்யான பாங்கினைப் பரப்பினார். அமீனுடன் மிக நெருக்கமாகவும் அந்தரங்கமாகவும் உறவாடுவோரிடமும் காணியை விசாரித்தார். இதே போல், மற்றுமொருவருடன் கூட்டுச் சேர்ந்து ஒரு மோட்டார் வண்டியையும் வாங்கினார். இதே வேளையில் தனது சொத்துக்கள் பலவற்றை தனது சொந்தக்காரர்களுக்கு கை மாற்றினார். இவ்வாறு சொத்துக்களைச் சொந்தக்காரைருக்கும் மிக நெருக்கமானவர்களுக்கும் கொடுத்துதவும் பழக்கம் பண்டு தொட்டு சியம்பாவின் வம்சத்தாரிடம் இருந்து வரும் பழக்கம். ஆகவே இவ்வாறு தனது சொத்துக்களை சியம்பா பகிர்ந்தளிப்பதை எவரும் வித்தியாசமாகக் கருத இடம் இருக்கவில்லை. எல்லாச் சொத்துக்களையும் சியாம்பா கைமாற்றவில்லை. தனக்கு அப்போது தேவையானவற்றை மட்டும் வைத்துக் கொண்டார்.

சியம்பாமீது அமீனுக்கு எந்த சந்தேகமும் எழுந்ததில்லை. அவர் தனக்குரிய காரியத்தை மட்டும் கவனித்துக் கொள்வார். ஆகவே கெய்ரோவுக்குச் செல்வதற்கு சியம்பா புறப்படுவதற்கு உடனயாகவே அமீன் சம்மதமளித்துவிட்டான்.

உகண்டாவில் உள்ள அரச மருந்துவமனைகளில் மருத்துவர்களுக்கு பற்றாக்குறை இருந்து வந்தது. சில மருத்துவர்களை உகண்டாவுக்கு அனுப்பி உதவுமாறு எகிப்திய ஜனாதிபதி அன்வர் சதாத்திடம் அமீன் கேட்டிருந்தான். இது தொடர்பாகவும் நடவடிக்கை எடுக்குமாறும் சியம்பாவிடம் அமீன் கேட்டுக்கொண்டான்.

ஜெனீவாவில் நடைபெறவிருந்த உலக சுகாதார அமைச்சர்கள் மாநாடு தொடங்குவதற்கு இரு வாரங்களுக்கு முன்னதாகவே சியம்பா கெய்ரோவுக்குப் புறப்பட்டார். அதற்கு முன்னதாக தனது இரு புதல்வர்களையும் ஒரு மனைவி எலிஸபத்தையும் நைரோபிக்கு அனுப்பிவிட்டார். அடுத்த மனைவியான தெரேசா, முலாகோ மருத்துவ மனையில் பணி புரிபவர் என்பதனால், ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்ளும் உகண்டா பிரதிநிதிகள் குழுவில் ஒருவராக தெரேசாவையும் சேர்த்துக்கொண்டார். இருப்பினும் தெரேசா கெய்ரோவுக்கு தன் கணவனுடன் செல்லாமல், தூதுக்குழுவின் ஏனைய உறுப்பினர்களுடன் தான் செல்ல வேண்டியிருந்தது.

ஜெனீவாவுக்கு உத்தியோக விடயமாகப் போகும் அமைச்சர் சியம்பா நாடுதிரும்பமாட்டார் என்ற வதந்தி பரவாமலில்லை. இதே போன்று பல அமைச்சர்களும் அதிகாரிகளும் சர்வதேச மாநாடுகளைச் சாட்டாக வைத்து வெளியேறியவர்கள் திரும்பிவரவேயில்லை. சியம்பா பற்றிய வதந்தி அமீனிடமும் பிரஸ்தாபிக்கப்பட்டது. ஆனால் சியம்பா தனக்கு எப்போதுமே துரோகம் செய்யமாட்டார் என்றே அவன் பெரிதும் நம்பினான்.

சியம்பாவிடம் இரு மோட்டார் வண்டிகள் இருந்தன. அவற்றில் ஒன்றையாவது நைரோபிக்கு அனுப்பிவிடவேண்டும் என்று கருதினார். சியம்பாவின் மிக நெருக்கமான நண்பர் நாட்டைவிட்டு வெளியேற சந்தர்ப்பம் பார்த்துக் கொண்டிருந்தார். அவரிடம் ஒரு வண்டியைக் கொடுத்து நைரோபிக்கு எடுத்துச் சென்றுவிடுமாறு கேட்டுக் கொண்டார்.

உகண்டா நாட்டிலிருந்து அயலிலுள்ள ஆபிரிக்க நாடுகளுக்குத் தரைமார்க்கமாகச் சென்று திரும்ப கடவுச்சீட்டுகள் அப்போது தேவையில்லை. எல்லைப் புறக்காவல் படை அதிகாரிகளிடம் வலுவான காரணத்தைக் காட்டி புகைப்படம் ஒட்டிய அனுமதிச் சீட்டு ஒன்றைப் பெறவேண்டும். இதனைப் பெறவும் வலுவான காரணம் எதுவும் நடைமுறைப்படி தேவையில்லை. சில ஷிலிங் பணத்தை இலஞ்சமாகக் கொடுத்தால் உடனடியாகவே அனுமதி கிடைத்துவிடும். அதிகாரிகளின் ஏஜெண்டுகள் எல்லைப் புறக்கிராமங்களில் தாராளமாகவே இருந்தனர்.

மற்றுமொரு வண்டியை தனது 70 வயது தாயாரின் பாவனைக்காக சியம்பா அங்கேயே விட்டுச் சென்றார். அவர் ஜெனீவா மாநாடு முடிவடைந்து பலவாரங்களாகியும் நாடு திரும்பவில்லை. அவர் நாட்டை விட்டு ஒரேயடியாகச் சென்றுவிட்டார் என்பதைத் திட்டவட்டமாக அறிந்ததும் சியம்பாவின் ஏனைய சொத்துக்களுடன், தாயாரிடமிருந்த காரையும் அமீனின் ஏவலாளர்கள் பறித்துக் கொண்டனர்.



ஏப்ரல் 13ம் திகதி புதன்கிழமை எண்டபே விமான நிலையத்திலிருந்து கெய்ரொ செல்லும் விமானத்தில் சியம்பா புறப்பட்டார். 16ம் திகதி எகிப்தின் சுகாதார அமைச்சரைச் சந்தித்து உலகசுகாதார மாநாடு தொடர்பான பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை நடத்தினார். கூடவே உகண்டாவில் பணி புரிய மருத்துவர்களை அனுப்புவதற்கான ஏற்பாடுகளையும் செய்து விட்டார். அமீனுடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டு, எகிப்திலிருந்து 35 மருத்துவர்கள் உகண்டாவுக்கு வரவிரும்புவதாகவும் அவர்களுக்கு நேர்முகப் பரீட்சை நடத்தித் தெரிவு செய்ய ஒரு குழுவை கெய்ரோவுக்கு அனுப்பி வைக்குமாறும் கேட்டுக்கொண்டார்.

ஏப்ரல் 21ம் திகதி சியம்பா ஜெனீவா சென்றார். சியம்பா நாட்டைவிட்டுச் சென்றதும் அவருடைய மனைவி தெரேசாவுக்கு சங்கடங்கள் ஏற்பட்டன. சியம்பா திரும்பி வரப் போவதில்லை என்ற வதந்தி பரவியதால், பலர் தெரேசாவை நேரடியாகவும் தொலைபேசியிலும் விசாரிக்கத் தொடங்கினர். ஆகவே அவர் ஜெனீவா புறப்படவிருந்த தூதுக்குழுவுடன் ஏப்ரல் 28ம் திகதிதான் கம்பலாவிலிருந்து புறப்படுவது ஆபத்து என்பதனால் சற்று முன்னதாகவே நைரோபி சென்று அங்கிருந்து பஸ்மூலம் கெய்ரோ புறப்படத்திட்டமிட்டார்.

இலஞ்சமாகப் பணம் கொடுத்தே போலி ஆவணம் தயாரித்து தெரேசா எல்லையைக் கடந்தார். பின்னர் ஜெனீவா மாநாட்டில் கலந்து கொள்ளுவதற்கான ஆவணங்களை பஸ் பயணத்தின் போது ஏனைய நாட்டு அதிகாரிகளிடம் காண்பித்து, சிரமமின்றி கெய்ரோ போய்ச்சேர்ந்து, அங்கிருந்து விமானத்தில் ஏனைய தூதுக்குழுவினருடன் இணைந்து ஏப்ரல் 29ம் திகதி ஜெனீவா சென்றடைந்தார்.

அமைச்சர் சியம்பாவின் அலுவலக மோட்டார்காரில் தான் அவர் கெய்ரோ செல்ல விமான நிலையம் சென்றார். இவருடைய வண்டிச் சாரதி மசிகா என்பவனும் அமீனின் தனிப்பட்ட ஒற்றர் படையைச் சார்ந்தவன் தான். பொதுவாக அமைச்சர்களனைவரினதும் அலுவலக சாரதிகள் யாவரும் ஒற்றர் படைப் பிரிவைச் சார்ந்தவர்களே.

சில அமைச்சர்கள் நாட்டை விட்டு வெளியேறிச் சென்றபின் அவர்களுடைய சாரதிகள் பெரும் அவஸ்தைக்குள்ளாக்கப்பட்டனர். அமைச்சர் எரினயோ ஒரியேமா கொலை செய்யப்பட்டதை அடுத்து அவருடைய வண்டிச்சாரதி அமீனின் மெய்காப்பாளர்களால் கொலை செய்யப்பட்டான்.

இத்தகைய நிலை தனக்கும் ஏற்படாமல் இருக்க அமைச்சர் சியம்பாவின் சாரதி மசிகாவும் முன்யோசனையுடன் நடந்து கொண்டான். எண்டபே விமான நிலையத்தில் சியம்பா விமானத்தில் ஏறியதும், அங்கு நின்ற மசிகாயின் நண்பர்கள் பலர் 'சியம்பா' நாட்டைவிட்டு வெளியேறுகிறாரா?' என்றும் விசாரித்தனர் இவற்றையும் ஏற்கனவே தான் கேட்டவதந்திகளையும் ஒன்றிணைத்து சியம்பா பற்றிய ஓர் அறிக்கை யைத் தயாரித்து தனது மேலதிகாரிகள் மூலம் மசிகா அமீனுக்கு அனுப்பிவைத்தான்.

எகிப்து மருத்துவர்கள் தொடர்பாக அமீனுடன் சியம்பா தொலைபேசியில் தொடர்பு கொண்டமையினால் அவர் மீது அமீனுக்கு சந்தேகம் ஏற்படவில்லை.

ஜெனீவாவில் மாநாடு தொடங்கிய அன்றும் அன்றைய நிகழ்ச்சிபற்றிய தொகுப்புரையை சியம்பா அமீனுக்கு தொலைபேசியில் வழங்கினார். இவ்வாறு இரண்டு நாட்கள் தொகுப்புரையை சியம்பா வழங்கினார். பின்னர் தினசரி சியம்பாவின் தொகுப்புரையை அமீன் எதிர்பார்த்தார். ஆனால் தொகுப்புரை வரவில்லை இதனால் மாநாட்டி லிருந்து சியம்பா வெளியேறிவிட்டாரா என்றும் ஐயம் எழுந்தது.

இதே கால கட்டத்தில் நைரோபியிலிருந்து வெளியான சில பத்திரிகைகளில் அமைச்சர் சியம்பா நாட்டை விட்டு வெளியேறிவிட்டார் என்ற செய்திகள் வெளியாகின. அமீன் ஜெனீவாவிலுள்ள உகண்டா தூதுவரை, மாநாட்டில் கலந்து கொள்ளும் குழுவினரின் நடவடிக்கை களை அவதானித்து, தனக்கு அறிவிக்கும்படி கேட்டிருந்தான். அத்தூதுவர் மாநாட்டு மண்டபத்தை வந்தடையும் அதே சந்தர்ப்பத்தில் உலக சுகாதார அமைச்சர்கள் சங்கத்தின் உப தலைவராக ஹென்றி சியம்பா நியமிக்கப்படுவதை அவதானிக்க நேர்ந்தது.

அது மட்டுமல்லாமல் பாரிஸ் நகரில் உகண்டாவின் தூதுவராக இருந்த ஒக்கி சோர்.:.பெரி ஒகோலாவையும் ஜெனீவா சென்று உண்மையை அறிந்து தனக்கு அறிவிக்குமாறு அமீன் கேட்டிருந்தான். (இடி தொடரும்)

தருவது
அழகன்

## பானுப்பிரியாவுக்கு மிரட்டல்



திருமணம் நிச்சயிக்கப்பட்ட நாளில் இருந்தே பானுப்பிரியாவுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் இடையே விவகாரம் ஆரம்பமாகியது.

'திருமணமான பின் பானுப்பிரியா அமெரிக்கா போனால் எங்கள் நிலமை என்னாவது?' என்று அவரது தாயும், சகோதரனும் சண்டையை ஆரம்பிக்க, இன்னொரு புறம் அவரது தங்கையும் நடிகையுமான நிஷாந்தி, சொத்தில் தனக்கும் பங்கிருப்பதாக வாக்குவாதம் செய்தார்.

திருமணம் செய்து கொண்டு அமெரிக்கா சென்ற பானுப்பிரியா இப்போது இந்தியா வந்துள்ளார். இதைத் தொடர்ந்து சொத்து விவகாரம் முற்றி இருக்கிறது.

பானுப்பிரியா சென்னையில் இருக்கும் தனது பங்களாவை விற்க முயற்சி செய்து கொண்டிருக்கிறார். இதை அடுத்து அடியாட்கள் மூலம் பானுப்பிரியாவுக்கு மிரட்டல் விடுக்கப்பட்டிருக்கிறது.

'வீட்டை விற்க முயற்சி செய்தால் நீ உயிரோடு இருக்க முடியாது. இந்த வீட்டிற்கும் எனக்கும் எந்த சம்பந்தமும் இல்லை என எழுதிக் கொடு' என்று பானுப்பிரியா மிரட்டப்பட்டிருக்கிறார்.

இப்படி மிரட்ட வைத்தவர்கள் வேறு யாருமல்ல பானுப்பிரியாவின் அம்மாவும், சகோதரரும் தான்.

இதனால் தொலைக்காட்சித் தொடர் ஒன்றில் நடித்துக் கொண்டிருந்த பானுப்பிரியாவுக்குப் பயம் அதிகமாகி வீட்டிலும் தங்க முடியாமலும், வெளியே போக முடியாமலும் தவித்தார்.

சொந்த அம்மாவும் சகோதரனுமே விரோதியாவார்கள் எனக் கனவிலும் எதிர்பார்க்காத பானுப்பிரியா கண்ணியமான பட அதிபரிடம் உதவி கேட்டார்.

அவர் தனக்குச் சொந்தமான மேக்-அப் அறையை வசதியான வீடாக மாற்றிக் கொடுத்து, பாதுகாப்புக்கு ஒருவரையும் நியமித்திருக்கிறார்.

தொலைக்காட்சித் தொடர்களில் நடிக்கும்போது இங்கு தங்கிக் கொள்ளும் பானுப்பிரியா, மற்றைய நாட்களில் ஆந்திர மாநிலத்தில் உள்ள தனது மாமனார் வீட்டிற்குச் சென்று விடுகிறார்.

அண்மையில் ஆந்திர முதல்வர் சந்திரபாபு நாயுடுவைச் சந்தித்துத் தனது நிலைமைகளைக் கூறிய பானுப்பிரியாவுக்கு உதவியளிப்பதாக அவர் வாக்குறுதி அளித்திருக்கிறாராம்.

## வயாக்ராவுக்குப் போட்டியாக உப்ரிமா

ஆண்களுக்கு வீரிய சக்தியை அதிகரிக்கும் மாத்திரையான வயாக்ராவைப் பற்றி நாளுக்கு 'நாள் செய்திகள் வந்த வண்ணமே இருக்கின்றன.

இதுவரை காலமும் மாத்திரை வடிவில் வந்த வயாக்ரா இனித் திரவ வடிவிலும் வரப்போகிறதாம்.

இந்த வயாக்ராவிற்குப் போட்டியாக விரைவில் 'உப்ரிமா' என்ற புதிய மாத்திரை ஒன்றும் விரைவில் விற்பனைக்கு வரப் போகிறதாம்.

'டைமண்ட்' வடிவத்தில் இருக்கும் இந்த மாத்திரை 15 நிமிடத்தில் பலன் தரும் ஆற்றல் கொண்டது என்று கூறப்படுகிறது.

அமெரிக்க அரசின் உயர்நிலை மருத்துவ ஆலோசகர்கள் அடங்கிய குழு 'உப்ரிமா' மாத்திரையை ஆய்வு செய்ய வுள்ளது.

வயாக்ரா மாத்திரை வருடத்திற்கு சுமார் ஏழரை ஆயிரம் கோடி ரூபாவுக்கு மேல் விற்பனையாகி வருகிறது. 'உப்ரிமா' மாத்திரைக்கு அங்கீகாரம் கிடைத்தால் அது வயாக்ராவுக்குப் பெரும் போட்டியாக மாறும் என்பதை மறுக்க முடியாது.

## பெருகி வரும் மக்கள் தொகை

மே மாதம் 11ம் திகதி இந்திய மக்கள் தொகை 100 கோடியை எட்டுகின்றது. உலக மக்கள் தொகையில் இது 16 சதவீதம். ஆனால் இந்திய நிலப்பரப்பு உலக நிலப்பரப்பில் வெறும் 2.4 சதவீதம் மட்டும்தான்.

அதாவது இந்திய நிலப்பரப்பின் அடிப்படையில் இந்தியாவில் இருக்கவேண்டிய மக்கள் தொகையை விட 6 மடங்கு அதிகம். வருடா வருடம் ஒன்றரைக் கோடி புதிய இந்தியர்கள் உருவாகுகிறார்கள்.

உலக அளவில் அதிக மக்கள் தொகை கொண்டது சீனாதான். இந்தியாவில் இதே வேகத்தில் மக்கள் தொகை அதிகரிக்குமானால் 2045ம் ஆண்டில் இந்தியா, மக்கள் தொகையில் சீனாவை மிஞ்சிவிடும்.

கடந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் 200 கோடியாக இருந்த உலக சனத்தொகை நூற்றாண்டு முடிவில் 625 கோடியாக உயர்ந்துள்ளது. இது கிட்டத்தட்ட மும்மடங்கு உயர்வு.

கடந்த நூற்றாண்டுத் தொடக்கத்தில் 25 கோடியாக இருந்த இந்திய மக்கள் தொகை இப்போது 100 கோடியாகி விட்டது. இது 4 மடங்கு அதிகரிப்பு.

## மேலும் ஒரு குற்றச்சாட்டு



கிரிக்கெட் சூதாட்டக்காரர்களிடம் இலஞ்சம் பெற்றுக் கொண்டதாகக் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கும் தென்னாபிரிக்க முன்னாள் கப்டன் ஹன்ஸி குரோன்யே மீது இப்போது இன்னொரு குற்றச்சாட்டும் எழுந்துள்ளது.

இங்கிலாந்தின் இலண்டன் நகரைச் சேர்ந்த டெபி கோல்மன் என்ற பெண், குரோன்யே தன்னைக் காதலித்து ஏமாற்றி விட்டதாகக் குற்றம் சாட்டியுள்ளார்.

"கிரிக்கெட் பெட்டிங்கில் குரோன்யே சம்பந்தப்பட்டது எனக்கு அதிர்ச்சியளிக்கவில்லை. காரணம் அவர் எனக்கு அவர் நம்பிக்கை துரோகம் செய்து விட்டது தான்.

18 மாதங்களாக நாங்கள் தீவிர காதலர்களாக இருந்தோம். முதன் முதலாக அவரை நான் ஜிம் ஒன்றில் தான் சந்தித்தேன். அப்போதுதான் எங்கள் காதல் மலர்ந்தது.

அவர் அடிக்கடி எங்கள் திருமணத்தைப் பற்றி பேசினார். இதற்கு ஆதாரமாக எனக்கு வைர மோதிரம் ஒன்றையும் பரிசளித்தார்.

இதற்கிடையே இங்கிலாந்தின் கவுண்டி அணி ஒன்றில் விளையாட என்னையும் அழைத்துக் கொண்டு இங்கிலாந்து வந்தார். என்னை ஆச்சரியம் கொள்ள வைத்த இந்த அழைப்புத்தான் எங்கள் காதலின் இறுதியாகவும் அமைந்து விட்டது.

என்னுடன் படுக்கை அறை உறவு வரை வந்த குரோன்யே ஒரு கட்டத்தில், 'எல்லாம் முடிந்து விட்டது. நீ போகலாம்' என்றார்.

என் வாழ்நாளில் நான் அதிகமாகக் கண்ணீர் சிந்தியது அன்றுதான். உடல் இச்சைகளுக்கு உபயோகப்படுத்துவதற்காக என் மேல் குரோன்யே வைத்த காதலை நினைத்து இன்றும் வருத்தப்பட்டுக் கொண்டிருகிறேன்.

ஏற்கனவே எனக்குக் காதலில் துரோகம் செய்து விட்டார். இப்போது கிரிக்கெட்டிலும் துரோகம் செய்து நாட்டையே அசிங்கப்படுத்தி விட்டார்" என்று கூறியுள்ளார் டெபி கோல்மன்.

## முறைப்படுத்துவாரா சார்ள்ஸ்?

டயானாவைக் காதலித்து திருமணம் செய்து கொண்ட சார்ள்ஸ், கமீலா பார்க்கரைக் காதலித்து வந்தார். கமீலா விவாகரத்து ஆனவர்.

சார்ள்ஸ்-கமீலா உறவால் மனம் புழுங்கிய டயானாவின் வாழ்க்கை பல்வேறு திருப்பங்களைச் சந்தித்தது. டயானாவின் மரணத்திற்குப் பின்னும் சார்ள்ஸ்-கமீலா தொடர்பு தொடர்கிறது.

இந்நிலையில் ஆங்கில கிறிஸ்தவர்களின் ஆர்ச் பிஷப் ஜோர்ஜ் கேரி, இவர்களின் உறவு பற்றி மிகவும் வருத்தப்பட்டுள்ளார்.

"ஆங்கிலத் தேவாலயங்களின் ஆளுநர் பதவியில் இங்கிலாந்தை ஆள்பவர்தான் இருக்கமுடியும். அந்த வகையில் இப்போதைய ஆளுநரின் மகன் சார்ள்ஸ் திருமணம் செய்யாமல் வாழ்ந்து வருவதைத் தேவாலயத்தால் பொறுத்துக் கொள்ள முடியாது.

கமீலா பார்க்கருடனான உறவை சார்ள்ஸ் முறைப்படுத்திக் கொள்ள வேண்டும்," எனக் கூறியுள்ளார் ஆர்ச் பிஷப் ஜோர்ஜ் கேரி.

முறைப்படுத்துவாரா சார்ள்ஸ்?

# மக்கள் அலை



→ 'கடல் அலையா தலை அலையா' என வியக்க வைக்கும் வகையில் பல ஆயிரக்கணக்கான மக்கள் கூடியிருப்பது வத்திக் கானில் உள்ள புனித இராயப்பர் தேவாலய சதுக்கத்தில்.

அண்மையில் நடந்த ஈஸ்டர் பண்டிகையை ஒட்டி புனித இராயப்பர் தேவாலயத்தில் போப் பாண்டவர் இரண்டாவது அருளப்பர் சின்னப்பர் திருப்பலி ஒப்புக் கொடுத்தார்.


உலகிலேயே மிகப் பெரிய தேவாலயம் என்ற பெருமைக்குரிய இத்தேவாலயத்தில் ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் அலை அலையாகத் திரண்டு வந்து திருப்பலியில் பங்கு கொண்ட காட்சியே இது.

↓ பிரமாண்டத்தை எதிலும் கொண்டு வரலாம். எதிலும் என்றால் இசையிலும் தான். அண்மையில் ஜப்பான் நகரான டோக்கியோவில் பிரமாண்டமான இசை நிகழ்ச்சி ஒன்று நடத்தப் பட்டது.

பெரிய மைதானம் ஒன்று 3 ஆயிரம் பேர் வயலின், புல்லாங்குழல் உள்ளிட்ட பல்வேறு வாத்தியக் கருவிகளை இசைத்து ஓர் இசைப் புயலையே அல்ல அல்ல, இசைச் சூறாவளியையே உருவாக்கி விட் டார்கள்.

சீருடைகளில் அணிவகுத்து நின்று இந்தப் பிரமாண்டமான இசை நிகழ்ச்சியை நடத்தியவர்கள் அனைவரும் பாடசாலை மாணவ, மாணவியர் என்பது குறிப்பிடத்தக்கது.

# இசை புயல் சூறாவளி



# பெண்களும் பென்குயின்களும்



← உலகில் அழிந்து வரும் உயிரினங்களில் ஒன்றுதான் பென்குயின் பறவையினம். அதிக குளிர்ப்பிரதேசங்களில் வாழும் இந்தப் பறவைகளால் பறக்க முடியாது என்பது இன்னொரு சிறப்பம்சம்.

கொரியா நாட்டின் 'கங்னாம்' ஆற்றுப் பகுதியில் பென்குயின்கள் வளர்க்கப்படுகின்றன. இந்த ஆற்றின் அருகே 63 மாடிகள் கொண்ட அழகான உல்லாச விடுதி ஒன்று அமைக்கப்பட்டுள்ளது. உல்லாச விடுதியில் தங்கியிருந்த இளம் பெண்கள் சிலர் 'கங்னாம்' ஆற்றங்கரையில் இருந்த பென்குயின்களுக்கு உணவு கொடுத்தார்கள். உணவை உண்டு விட்டு, அந்தப் பெண்களுடன் விளையாடி மகிழ்ந்தன பென்குயின்கள்.

(பட உதவி: அஸாம் அலி-அஹமட் நியாஸ்)

## தகவல் பெட்டி

# மணல் சிற்பங்கள்

↓ உலகப் புகழ்பெற்ற இத்தாலிய ஓவியர் லியர்னடோ டாவின்ஸி வரைந்த ஓவியங்களில் 'இயேசுகிறிஸ்துவின் கடைசி இராப்போசன' ஓவியம் தனிப் புகழ் வாய்ந்தது.

சமீபத்தில் இந்த 'இயேசுகிறிஸ்துவின் கடைசி இராப்போசன'த்தை மணல் சிற்பங்களாக வடித்துள்ளார் புகழ்பெற்ற சிற்பியான மைக்கல் மெகர்ட் என்பவர். உருகுவே நாட்டின் மான்டிவிடியோவில் உள்ள பொசிடோங் கடற்கரையில் இந்தக் கண்ணைக் கவரும் வண்ண மணல் சிற்பங்களை வடிவமைத்துள்ளார் மைக்கல்.





# தானியங்கிக் குளியல்

↑ உலகில் நாளுக்கு நாள் புதிது புதிதாகப் பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு வருகின்றன.

ஜப்பான் நிறுவனம் ஒன்று தானியங்கிக் குளியல் கருவி ஒன்றைக் கண்டுபிடித்துள்ளது. இதில் படுத்துக் கொண்டு, மேல் மூடியைக் கழுத்து வரை மூடிக் கொள்ள வேண்டும். பின் சுவிட்சைப் போட்டால் போதும். இயந்திரத்தின் உள்ளே இருக்கும் 13 நுண்துளைகளில் இருந்து சவர்க்கார நீருடன் தண்ணீர் பீய்ச்சியடித்து குளிப்பாட்டி விடும். பின்னர் வெதுவெதுப்பான காற்று வந்து உடம்பைத் துடைத்து விடுமாம்.

## சங்கீதம் பயிலும் நடிகை

ஐஸ்வர்யாராய், சிம்ரான் போன்ற முன்னணி நடிகைகளுக்கு பின்னணிக் குரல் கொடுத்து வருபவர் சவிதா.

'பெண்கள் வீட்டின் கண்கள்' உட்பட சில தொலைக்காட்சித் தொடர்களில் நடித்திருக்கும் இவரது குரல் வளத்தைப் பலர் பாராட்ட, இவர் இப்போது சங்கீதம் பயின்று வருகிறார்.

பின்னணிக் குரல் கொடுத்து வரும் இவர் விரைவில் பின்னணிப் பாடல்களைப் பாடலாம்.

## கமலின் 'வால்' தனம்

கமல் நடிக்க கே.எஸ்.ரவிக்குமார் தயாரித்து இயக்கும் 'தெனாலி' படத்தில் கமலுக்கு பயந்தாங்கொள்ளி டாக்டர் வேடமாம்.

முழுக்க முழுக்க நகைச்சுவை ததும்பும் படமாக உருவாக இருக்கும் 'தெனாலி'யில் கமலின் 'வால்' தனங்களுக்கு குறைவிருக்காதாம்.

இதற்காக 'தெனாலி' என்ற இப்படத்தின் பெயரில் 'லி' என்ற எழுத்தை எலி வால போல் அமைத்துள்ளார்கள்.

## பிரசாந்த் நடிக்கும் 'என்ன விலை அழகே'

'அவள் வருவாளா' படத்தைத் தயாரித்த சி.எச்.வி. அப்பாராவ் தயாரிக்கும் புதிய படத்தின் பெயர் 'என்ன விலை அழகே'.

இதில் கதாநாயகனாக பிரசாந்த் நடிக்கிறார். இவருக்கு ஜோடியாக 'கஹூானா கோ பியார் ஹை' இந்திப் பட நாயகி அமிஷா பட்டேல் நடிக்கிறார்.

இவர்களுடன் மணிவண்ணன், வடிவேல், நாசர், விவேக், 'வெண்ணிற ஆடை' நிர்மலா, கோவை சரளா, சபிதா ஆனந்த் ஆகியோரும் நடிக்கின்றனர்.

கவிஞர் வைரமுத்துவின் பாடல்களுக்கு தேவா இசையமைக்கிறார்.

கதை-திரைக்கதை-வசனம் எழுதி இயக்கி முக்கிய வேடம் ஒன்றிலும் நடிக்கிறார் ராஜ்கபூர்.

## குபேரனாக கார்த்திக்

பிரபு-ரோஜா நடித்திருக்கும் 'கந்தா கடம்பா கதிர்வேலா' படத்தை மிகக் குறுகிய காலத்திற்குள் இயக்கி முடித்திருக்கும் இராம. நாராயணன் அடுத்து இயக்கும் படத்திற்குக் 'குபேரன்' என்று பெயரிட்டுள்ளார்.

இதில் கார்த்திக் கதாநாயகனாக நடிக்க அவருக்கு இணையாக கௌசல்யாவும் மந்த்ராவும் நடிக்கின்றனர் மற்றும் மணிவண்ணன், விவேக், வடிவேலு, கோவை சரளா ஆகியோரும் நடிக்கின்றனர்.

எஸ்.ஏ.ராஜ்குமார் இசையமைக்க கதை திரைக்கதை அமைத்து படத்தை இயக்குகிறார் இராம. நாராயணன்.



## வாரிசு உருவாகிறது

ஜெயராம் காதலித்துக் கைபிடித்துக் கொண்டது முன்னாள் நடிகை பார்வதியை. இவர் தியாகராஜனின் 'பூவுக்குள் பூகம்பம்' படத்திலும் நடித்திருக்கிறார்.

இப்போது ஜெயராம்-பார்வதி தம்பதியின் மகன் காளிதாசனுக்கு 5 வயதாகிறது. காளிதாசன் முதன் முதலாக மலையாளப் படமொன்றில் நடிக்கிறான்.

இதில் கதாநாயகனாக ஜெயராம் நடிக்கிறார். படத்திலும் இவர்கள் தந்தை மகனாகவே நடிக்கிறார்கள். கதாநாயகியாக சம்யுக்தா நடிக்க, சத்தியன் அந்திக்காடு இயக்குகிறார்.

## ஜேசுதாஸ் மகன் பாட்டு

பிரேம் கதாநாயகனாக நடித்து தயாரித்து இயக்கி வரும் படம் 'குரோதம் 2'.

இப்படத்தின் படப்பிடிப்பு அண்மையில் துவங்கியது. துவக்க தினத்தன்று பிறைசூடன் எழுதிய, 'பாபா... பாபா... அலிபாபா...!' என்று தொடங்கும் பாடல் பிரபல பின்னணிப் பாடகரான கே.ஜே.ஜேசுதாஸின் மகன் விஜய் ஜேசுதாஸ், ஹரிணி இணைந்து பாடப் பதிவாகியது.

## காதோடு சொல்லுகிறோம்

மகாகவியின் பெயரைத் தன் பெயரின் பின் பாதியாகக் கொண்டிருக்கும் அந்த 'செல்ல' இயக்குநர், மூன்றெழுத்து இளம் நாயகனை வைத்துப் படத்தை இயக்கி வருகிறார். இவர் தன்னிடம் பணிபுரியும் உதவி இயக்குநர்களுக்கென்று தயாரிப்பாளர்களிடம் சம்பளம் பெற்று அதில் சிறிய தொகையை அவர்களுக்குக் கொடுத்து விட்டு, மிகுதியை அவரே அபேஸ் செய்து கொள்கிறாராம்.

## முகப்பில் கமல் / குஷ்பு

## ராணியின் கட்-அ...

கமலின் 'ஹேராம்' பெரிதும் பேசப்பட்ட... அதை யாரும் மறுப்பதற்கில்லை. அதே... பெரிய தோல்வியையும் சந்தித்திருக்கிற... மும்பையில் இப்படம் திரையிடப்... யரங்குகளில் எல்லாம் கமலின் கூட... கதாநாயகி வசுந்தராவின் கட்-அவுட்... மல் படத்தில் சிறிது நேரம் மட்டு... ராணி முகர்ஜியின் கட்-அ... வைக்கப்பட்டிருந்தன.


ராணி முகர்ஜி பட்த்... சிறிது நேரமே வருவதா... இரசிகர்கள் ஏமாற்றமடைந்து திரும்புவதாக மும்பை சினிமாப் பத்திரிகைகள் தெரிவித்துள்ளன.

மித்ரமான... வேண்டும் என... நீண்ட காலத்... தங்கை வேட...

மன்வாச... ஆன்தான... பேராசிரியரை... படமெடுத்து...

படப்பிடி... நடிகர் நட... கொண்டுள்ளன... நடிகையும் த...





## 'ஜெமினி... நிஜம்' நீடி...

சத்யஜோதி ஃபிலிம்... ரிக்க பட்டுக்கோட்டை பிர... கதை- திரைக்கதை- வசனத்தில் ... பாலா இயக்கும் 'ஜெமினியது நிஜம்' தொலைக்காட்சித் தொடர் மறுபடி நீடிக்கப்பட்டுள்ள... முதலில் 26 பகுதிகளாக உருவாக்கப்... இத்தொடருக்கு ஏற்பட்ட அமோக வரவேற்பினா... 50 பகுதிகள் வரை நீடிக்கப்பட்டது. கதாநாயகன் அரவிந்த் தலைமறைவாக இருந்தபடி சமூக விரோதிகளை வரிசையாகக் கொலைசெய்து வருவதாக நம்பிக்கொண்டிருந்தார்கள். ஆனால் அரவிந்த் முன்னரே இறந்து விட்ட உண்மை தெரிந்ததால் இரசிகர்கள் மத்தியில் மேலும் அதிக எதிர்பார்ப்பு ஏற்பட்டது. இதனால் இப்போது 50 பகுதிகளுக்குப் பின் மேலும் 8 அத்தியாயங்கள் நீடிக்கப்பட்டுள்ளது.

## வெப்பத்தைத் தவிர்க்கப் புதுவழி

மே மாதம் முழுவதும் ஆந்திர, கேரள முன்னணி நடிகர்கள் இந்தியாவில் இருக்கமாட்டார்கள்.

சிரஞ்சீவி, நாகார்ஜுனா, வெங்கடேஷ், பாலகிருஷ்ணா போன்ற தெலுங்கு நடிகர்கள் பல்வேறு படங்களின் படப்பிடிப்புக்களுக்காக வெளிநாடுகளுக்குச் செல்கிறார்கள்.

அதே போல் மலையாள நடிகர்களான மோகன்லால், முகேஷ், ஜெயராம், இயக்குநர் பிரியதர்ஷன், விஎம்.சி.ஹனீபா ஆகியோர் கலை நிகழ்ச்சிகளுக்காக வெளிநாடு செல்கிறார்கள்.

'கோடையின் வெப்பத்தைத் தவிர்க்கும் புதுவழியா இது?' எனத் திரையுலகப் புள்ளிகள் தங்களுக்குள் பேசிக் கொள்கிறார்கள்.

## மோகன்லால் வாங்கிய 'அலைபாயுதே'

மணிரத்னம் இயக்கத்தில் மாதவன்-ஷாலினி நடித்து ஓடிக்கொண்டிருக்கும் 'அலைபாயுதே' படத்தின் கேரள வெளியீட்டு உரிமையை வாங்கியுள்ளார் மலையாள நடிகர் மோகன்லால்.

சொந்தப் படங்களைத்தயாரித்து நடித்து வரும் மோகன்லால் இப்போது தமிழ்ப் படங்களை கேரளாவில் வெளியிடும் உரிமையையும் வாங்கி வருகிறார்.

மணிரத்னம் இயக்கிய 'உணரு' என்ற மலையாளப் படத்தில் கதாநாயகனாக நடித்த மோகன்லால் மணிரத்னத்தின் 'இருவர்' தமிழ்ப்படத்திலும் நடித்திருக்கிறார்.

அது மட்டுமன்றி 'அலைபாயுதே' படத்தில் அரவிந்தசாமி நடித்த வேடத்தில் முதலில் நடிக்கவிருந்தது மோகன்லால் என்பதும் குறிப்பிடத்தக்கது.

## ஷங்கர் படத்தில் விக்ரம்?

'முதல்வன்' படத்தின் வெற்றியில் திளைத்திருக்கும் ஷங்கரின் அடுத்த படமும் சொந்தத்தயாரிப்புத் தான். படத்தின் நாயகியாக 'முதல்வனி'ல் 'ஷக்கலக்க பேபி...' பாடலுக்கு நடனமாடிய முன்னாள் உலக அழகி சுஷ்மிதா சென், 'ஷக்கலக்க பேபி...' பாடலைப்பாடிய 'ஹேராம்' நாயகி வசுந்தரா தான் என்று பெயர்கள் அடிபடுகின்றன. நாயகனாக அநேகமாக 'சேது' விக்ரம் நடிப்பார் என்று தகவல்.

## சின்னத்திரையில் கவலட்சுமி

கவலட்சுமியைச் சின்னத்திரைக்குக் கொண்டுபோகப் பல தயாரிப்பாளர்கள் முயற்சி செய்தனர். ஆனால் கவலட்சுமி அப்போது அதற்குச் சம்மதிக்கவில்லை.

இப்போது கவலட்சுமி ராதிகாவின் ராடன் டி.வி. தயாரிக்கும் தொலைக்காட்சித் ...மொன்றில் நடிக்கவுள்ளார். இதன் படப்பிடிப்புகள் யாவும் வெளிநாடுகளில் படமாக்கவுள்ளன.



விஜயகாந்த்-தேவயானி

## மினி சினி

◆ 'சொல்லாமலே' வெற்றிப்படத்தை இயக்கிய சசி, அதன் பின் தெலுங்குப்படம் ஒன்றை இயக்கினார். படம் ஓடவில்லை. மறுபடி தமிழுக்கு வந்துவிட்டார். இப்படத்தில் நாயகனாக அஜித் நடிக்கவுள்ளார்.

◆ 'கேசவன்' படத்தைப் பாதியில் நிறுத்தி விட்டு சொந்தமாகப் படம் ஒன்றைத் தயாரித்து இயக்கவுள்ளார் மு.களஞ்சியம். இப்படத்தில் களஞ்சியத்தின் ஆஸ்தான நாயகி தேவயானி தான் கதாநாயகியாக நடிக்கவுள்ளார்.

◆ 'வானத்தைபோல' தமிழில் வெற்றிபெற்றதைத் தொடர்ந்து அதைத் தெலுங்கிலும் இயக்க முடிவு செய்திருந்தார் விக்ரமன். ஏனோ தெரியவில்லை இப்போது அத்திட்டம் கைவிடப்பட்டுள்ளது.

◆ 'டபுள்ஸ்' படத்தை பாண்டியராஜன் இயக்க பிரபுதேவா நாயகனாக நடித்து வருவது தெரிந்ததே. இதில் பிரபுதேவாவுக்கு ஜோடியாக நடிக்க மாளவிகாவை அணுக, அவர் நடிக்க மறுத்து விட்டார்.

◆ 'நீ வருவாய் என' பட இயக்குநர் ராஜகுமாரன் அடுத்து இயக்கும் 'விண்ணுக்கும் மண்ணுக்கும்' படத்தில் முதலில் பிரசாந்த் கதாநாயகனாக நடிப்பதாக இருந்தது. இப்போது அவருக்குப் பதில் விக்ரம் நடிக்கவுள்ளார்.

◆ 'தாஜ்மகால்', 'குட்லக்' ஆகிய படங்கள் தோல்வியடைந்தாலும் அப்படங்களின் நாயகி ரியாசென்னுக்கு ஓரிரு படவாய்ப்புக்கள் வந்த வண்ணமே இருக்கின்றன.

◆ 'தை பொறந்தாச்சு' வெற்றிபெற்றதைத் தொடர்ந்து அடுத்த படத் தயாரிப்பில் இறங்கி விட்டார் அப்படத்தின் தயாரிப்பாளர் 'அன்பாலயா' பிரபாகரன். புதிய படத்தையும் அறிமுக இயக்குநரே இயக்கவுள்ளார்.

◆ 'நண்பர்கள்' படத்தின் மூலம் தமிழில் அறிமுகமான இந்தி நடிகை மம்தா குல்கார்னி நீண்ட இடைவெளிக்குப் பின் தமிழில் தயாராகும் 'சுஜ்ரோஹோ' படத்தில் நடித்து வருகிறார்.

## அஜித் ஜோடியாக ப்ரீத்தி ஸிந்தா

'சூரியன்' பட இயக்குநர் பவித்திரனின் உதவியாளர் சரவண சுப்பையா இயக்கத்தில் அஜித் நடிக்கும் படம் 'சிட்டிசன்'.

வித விதமான கெட்-அப்களில் அஜித் நடிக்கும் இப்படத்தில் முதலில் இவருக்கு ஜோடியாக நடிக்க இருந்தவர் சோனாலி பிந்த்ரே. இப்போது இவருக்குப் பதிலாக ப்ரீத்தி ஸிந்தா நடிக்கப் போகிறார்.

ப்ரீத்தி ஸிந்தா மணிரத்னத்தின் 'உயிரே', மற்றும் 'தேசீக்கிதேஸ்' ஆகிய தமிழ்ப்படங்களில் நடித்துள்ளார்.

...ம்மா நடிகை தனது மகளைப் பிரபல நாயகியாக்கிவிட ...னவு கண்டார். மகள் நாயகியாக நடித்த முதல் படம் ... பின் வெளியாகி ப்ளாப்பாகிவிட்டது. இதனால் மகளைத் ... நடிக்க வைக்க முயற்சி செய்து வருகிறார் நடிகை.

...இயக்குநர் மீது கடுங்கோபத்தில் இருக்கிறாராம் அவரது ...ர். அவரது கதையை வாங்கி, தனக்கு நெருக்கமான ...ந்து அதில் பல மாற்றங்களைச் செய்து 'கடல்' பெயரில் ...துதானாம் கதாசிரியரின் கோபத்திற்குக் காரணமாம்.

...ல்லாத நாட்களில் பொன்மாலைப் பொழுதுகளில் 'கார' ...ஹோட்டல் பார்களுக்குச் செல்வதை வழக்கமாக்கிக் ... நடிகருக்குக் கம்பெனி கொடுக்க இரண்டெழுத்துப் பூ ...ல் அங்கு ஆஜராகி விடுவாராம்.



பிரசாந்த்-சிம்ரன்
படம்: பார்த்தேன் ரசித்தேன்




ராணி முகர்ஜி

(திரையுலக மறுபக்கம்) (146)

# இயக்குநருக்கு அம்மா நடிகை போட்ட கிடுக்கிப்பிடி

தமிழ்நாட்டிலிருந்து மயன்

இரண்டெழுத்து நட்சத்திர இயக்குநர் பார்ட்டி வைக்கும் அந்தக் கலைக் குடும்பத்தினர் மீது எப்போதுமே ஒரு தனிப்பாசம் தான்.

நட்சத்திர இயக்குநரின் படங்களில் எல்லாம் கலைக் குடும்ப தலைமை நடிகர் தவறாமல் இருப்பார்.

இது போதாதென்று கலைக்குடும்ப தலைமை நடிகரின் தம்பியையும் நட்சத்திர இயக்குநர் அண்மையில் இயக்கிய 'போலீஸ்' என்று முடிவடையும் படத்திலும் அறிமுகப் படுத்தினார்.

இதற்கு முன் கலைக்குடும்ப தலைமை நடிகரான 'குமார' நடிகரின் முதல் மனைவியின் மகளையும் கட்டழகு நடிகருக்குத் தங்கையாக நடிக்க வைத்தார்.

'குமார' நடிகரின் இரண்டாவது மகளையும் நட்சத்திர இயக்குநர் தனது படங்களில் நாயகியாக நடிக்கவைத்தார்.

'குமார' நடிகருக்கு அவரது இரண்டாவது மனைவிக்கும் பிறந்த கடைசிப் பெண்ணையும் குழந்தை நட்சத்திரமாக அந்த இயக்குநர் தான் அறிமுகப்படுத்தினார்.

நட்சத்திர இயக்குநரின் படங்களில் கலைக்குடும்ப அங்கத்தவர்கள் இடம்பிடிப்பதற்கு என்ன காரணம்?

முன்னாள் நாயகியும் 'குமார' நடிகரின் இரண்டாவது மனைவியான அந்த அம்மா நடிகையின் அனுசரிப்புகள் தான் இதற்குக் காரணம்.

கலைக்குடும்பத்தினரால் வைக்கப்படும் பார்ட்டிகளில் நட்சத்திர இயக்குநருக்கும், அவரது முக்கிய உதவியாளர்களுக்கும் தவறாமல் அழைப்பு விடுக்கப்படும்.

பார்ட்டிகளில் நட்சத்திர இயக்குநருக்கு என்ன தேவை யென்றாலும் அந்த அம்மா நடிகையால் அவை உடனுக்குடன் நிறைவேற்றி வைக்கப்படும்.

இதனால் நட்சத்திர இயக்குநரின் படங்களில் இவர்களும் இருப்பார்கள். படங்களில் நடிகர்களை இயக்கிவரும் நட்சத்திர இயக்குநர் கலைக்குடும்ப அம்மா நடிகையின் இயக்கத்தின்படியே நடந்து வருகிறார்.

எஸ்.ஏ.சந்திரசேகரன் தனது மகன் விஜய்யை கதாநாயகனாக அறிமுகப்படுத்த சொந்தப்படம் எடுத்தார். அதே போல் நட்சத்திர இயக்குநரும் தனது மகனை நாயகனாக அறிமுகப்படுத்த சொந்தப்படம் எடுக்கத் திட்டமிட்டுள்ளார்.

இதை அறிந்த கலைக்குடும்ப அம்மா நடிகை தனது மூன்றாவது மகளை அதில் கதாநாயகியாக அறிமுகப்படுத்துமாறு நட்சத்திர இயக்குநருக்கு நெருக்கிக் கொண்டிருக்கிறார்.

தனது மகனுக்கு ஜோடியாக மும்பாய் நடிகை ஒருவரை நாயகியாக நடிக்க வைக்கத் திட்டமிட்டிருந்தார் இயக்குநர்.

கலைக்குடும்ப வாரிசுகள் நாயகியாக நடித்த படங்கள் ஒன்று கூட ஓடவில்லை. ராசியில்லாத குடும்ப வாரிசு தன் மகனுக்கு ஜோடியாக நடித்தால் தனது மகனின் திரையுலக வாழ்வே அஸ்தமனமாகி விடும் என்று யோசித்தார் இயக்குநர்.

அதனால் அம்மா நடிகையின் கிடுக்கிப்பிடியில் இருந்து தப்ப, இயக்குநர் இப்போது மகனை அறிமுகப்படுத்தும் திட்டத்தை கொஞ்ச நாட்களுக்குத் தள்ளி வைத்து விட்டார்.

## ரம்யா கிருஷ்ணன் நடிக்கும் 'அம்மன் கோயில் குழந்தை'

தெலுங்கில் வெளியான பக்திப்படமொன்று தமிழில் 'அம்மன் கோயில் குழந்தை' என்ற பெயரில் மொழிமாற்றப்பட்டு வருகிறது.

மாமியார், மருமகள் இடையே ஏற்படும் குடும்பப் பிரச்சனைகளை மையமாகக் கொண்டு உணர்வு பூர்வமாகவும், நகைச்சுவையோடும் உருவாக்கப் பட்டுள்ளது இப்படம்.

இதில் மருமகளாக ரம்யா கிருஷ்ணனும், மாமியாராக மஞ்சுளாவும் குழந்தையாக 'கையளவு மனசு' புகழ் நீபாவும் நடித்துள்ளனர். இவர்களுடன் வினோத்குமார், ராஜா ரவீந்தர், ஸ்ரீலதா ஆகியோரும் நடித்துள்ளனர்.

இசை: கோட்டி, பாடல்கள்: கலைக்குமார், இயக்கம்: சாகர்

## தமிழர் இயக்கும் ஆங்கிலப் படம்

கென். கந்தையா என்ற தமிழர் கனடாவில் ஆங்கிலப்படம் ஒன்றை இயக்கியுள்ளார். இவர் கனடாவில் உள்ள வான்கூவர் திரைப்படக்கல்லூரி மாணவராவார்.

'பெயித் த ஃபில் தி அன்ரோல்ட் ஸ்டோரி' என்ற இப்படத்தின் கதை வட அமெரிக்காவில் வாழும் 3 ஜோடிகளைப் பற்றியதாகும்.

105 நிமிடங்கள் ஓடக்கூடிய இப்படத்தில் ரிச்சர்ட் பிகாரி (கனடா), ட்ரேக் (கனடா), அஜன் கபூர (இந்தியா), இவன் புஷிர் (கனடா), மிக்கா ஷெய்ரா (கனடா), ஸ்டெபானி (அமெரிக்கா), கீர்த்தி பணிரா (இலண்டன்) ஆகியோர் நடிக்கின்றனர்.

கென் கந்தையா இயக்கிய இப் படத்திற்கு எல்.வைத்தியநாதன் இசையமைத்துள்ளார்.

## நீவருவாயென

நீ
வருவாயென்ற
நம்பிக்கையோடே
நாட்களை
நகர்த்திக் கொண்டிருக்கிறேன்!
❖
என் எதிர் பார்ப்புக்கள்
எத்தனை, எத்தனையோ
ஏமாற்றத் தவத்தோடு
உன்
வருகையைப்போல்!
❖
எதிர்
பார்த்து, பார்த்து
ஏங்கிப் போகிறேன்
எப்போது
நீ
வருவாயென
கேட்டுக், கேட்டு
இம்சை பண்ணும்
இதயத்திற்கு
பதில்
சொல்லிச், செல்லியே
இளைத்துப் போகிறேன்!
❖
தினம் எதிர் பார்த்து, பார்த்து
உனை காணாததால்
கலங்கிக் கொண்டிருக்கும்
என்
விழிகளுக்கு
என்ன ஆறுதல்
சொல்வதென்றே
தெரியவில்லை.
❖
என் வீட்டு
முற்றத்து
கதவை யார்
தட்டினாலும் ஏக்கத்தோடு
எட்டிப் பார்க்கும்
என் விழிகள்!
❖
நீ இல்லையென்று
அறிந்த பின்
மீண்டும்–என்
விழி வழியே
கண்ணீர்
அருவியாக!.........
❖

செல்வி. கருப்பையா சந்திரலதா
பூண்டுலோயா.

## அன்றும் இன்றும்

அமைதி கொண்டு
மகிழ்வுடனே கூடி
வாழ்ந்த காலம் அது...
***
மத்தளம் கொட்ட
நாதஸ்வரம் ஒலிக்க
பறைமுழங்க கேட்ட
காலம் அது....
***
காதல் கொண்ட,
இள நெஞ்சங்கள்.
இன்பமாக இணையும்
காலம்–அது
***
இன மத பேதம் இன்றி
மகிழ்வுடன், சேர்ந்து.
ஊர் சுற்றிய இளைஞர்கள் வாழ்ந்த
காலம்–அது
***
பிரயாணத்தில் இறங்கும் வரை
இன்பமாகத் தூங்கிய
காலம்,–அது
மனிதர்கள் வாழ்ந்த காலம்
***
பாட்டியும் பாட்டனும்
குடும்பத்தோடு, சேர்ந்து
மகிழ்வுடனே வாழ்ந்த
காலம்,–அது
***
முழக்கம் இன்றி வேறு
ஓசை கேட்காத காலம்
அது மனிதர்கள் வாழ்ந்த காலம்
***
அமைதி இன்றி
அல்லல் பட்டு
அகதி முகாமுக்குள்
வாழ்க்கை ஓட்டும்
சுதந்திரத்தை தூரே எறிந்த
காலம் இது
***
குண்டுகள் வெடிக்க
செல்கள் சிதற
வேட்டோசை ஒலிக்க
மனிதர்கள் கதறும்
ஓசை கேட்கும் காலம்–இது
***
காதல் கொண்ட
உள்ளங்களில் ஒன்று
'சந்தேக நபர்' என்னும்
முத்திரை குத்தி சிறையிலே
பிரித்து வைக்கும் காலம்–இது
***
நடுத் தெருவில் உடை களைந்து
நன்றாகப் பார்க்கின்ற
காலம்,–இது
உழைத்து இன்பமாகவும்
மகிழ்வாகவும் வாழும், காலத்தை
கம்பிக் கூண்டுக்குள் கழிக்கின்ற
காலம்,–இது
***
மங்கை அவள் திருமணம் நடந்து
மூன்றே நாட்களில் கணவனை இழந்து
அழுது விரக்தி உரும் காலம்–இது
மனித மிருகங்கள் வாழ்கின்ற காலம்–இது


மா. திருமால், சித்தாண்டி.

## காதல் பொல்லாதது

காதல் கொண்டால் கவிதை வரும்
அது தோல்வி என்றால் போதை வரும்
இதுவும் அதுவும் கலப்பதுதான் காதல்
இதயம் இதயம் சேர்வதுதான் மோதல்
காக்கை குருவி இல்லாத நாடு உண்டு
ஆனால் காதல் இல்லாத நாடேயில்லை
காதல் புனிதமானது பிரிவது அனுதாபமானது
காதல் வளரவேண்டும்
காதலர்கள் சேரவேண்டும்.

மு. இ. றஸ்மியா, பொத்துவில்.

# தேன் கிண்ணம்



## 50 வயதுக் கன்னி

கௌரவத்திற்காக என் காதலை
பிரிக்கத்தெரிந்த என் பெற்றாருக்கு
மகளுக்கு மணம் என்றால்
சீர் தேவை என்பது மட்டும்
புரியாத புதிரானதால்....
இன்று நானொரு
50 வயதுக் கன்னி.

செல்வி. கதிரவேல் ஸ்ரீவாசுகி,
மட்டக்களப்பு.

## தமிழராய் பிறந்ததால்....

சிறுவயதில் ஜன்னல் கம்பிகளை
எண்ணிப் பார்த்தோம்–விளையாட்டுக்காய்–இன்று
சிறைக்கம்பி எண்ணிப் பார்க்கின்றோம்–வாழ்வில்
விதி விளையாடியதால்.
❊◆
அடையாள அட்டை காட்டினோம்–தலையாட்டி
அடையாளம் காட்டினான்
எம்மை பயங்கரவாதியாய்
அடைத்தனர் அதனால் சிறையில்
அடிமையாகிப் போனோம் எம் மண்ணில்!
❊◆
நாம் வளர்ந்ததால் குற்றவாளியானோமா? இல்லை
வாழ்வதால் விலங்கிடப்பட்டோமா?
நாம் செய்த குற்றந்தானென்ன–இந்நாட்டில்
நாம் தமிழராய் பிறந்ததால் அடிமைப்பட்டோம்!
❊◆
நாட்டில் வாழவும் உரிமையில்லை
நாட்டை விட்டு வெளியேறவும் வழியில்லை
காட்டில் மாறினோம் விலங்குகளாய்–நாம்படும்
பாட்டை யார் அறிவர்?
❊◆
விலங்குகளுக்கு புகலரண்–வனத்தின்
பறவைகளுக்கு பாதுகாப்பு
மிருகங்களின் சந்ததிக்கு சரணாலயம்
மனிதர் எமக்கு.....?

ம. சுகிர்தா-மன்னார்.

## எங்களின் திரு(மரண)விழாக்கள்


யுத்தத்தால் வீசப்படும்
வெடி குண்டுகளின்
சத்தங்களே எங்கள்,
மேள தாளங்கள்.
வீசப்படும் பராக்களின்
வெளிச்சமே எங்களின்
தீப்பந்தங்(குத்து விளக்கு)கள்
▲
எழும்புகின்ற நச்சுப்
புகையோ–எங்களின்
ஊதுபத்தி(சாம்பிராணி)கள்.
▲
நாங்கள் சிந்துகின்ற
கண்ணீரே எங்களின்
பன்னீர்(வாசனை)துளிகள்.
▲
இதுதான் –தினம்
வட–கிழக்கில் வாழும்
தமிழர்கள் எங்களின்
திரு(மரண)விழாக்கள்.

'பாலமுனை வாஹீட்'

## தலையணை ஜோசியம்

**தலையணையைக் கட்டிப் பிடித்தபடி கவிழ்ந்து படுத்துத் தூங்குபவர்கள்:**

பிறர்பால் அன்பைப் பொழிகிறவர்களாக இருப்பார்கள். அதுபோல் பிறரும் தன்பால் அன்பு காட்ட வேண்டும் என்று எதிர்பார்ப்பார்கள். இவர்களுக்குத் தனிமை பிடிக்காது.



**தலையணையைப் பிடித்தபடி ஒருக்களித்துப் படுப்பவர்கள்:**

அழுத்தமானவர்கள், பிரச்சனைகளைப் பெரிதுபடுத்த மாட்டார்கள். இரகசியம் இவர்களிடம் தங்கும்.

**தலையணையை தலைக்கு வைத்து நிமிர்ந்து படுத்துத் தூங்குபவர்கள்:**

கரார் பேர்வழிகள். நல்ல நோக்கங்களைக் கொண்டவர்கள். வணங்காமுடிகள்.


**தலைக்கு உயரமாகப் போட்டு காலுக்கும் கைக்கும் தலையணைகளை வைத்துத் தூங்குபவர்கள்:**

சுகபோகிகள். தனிமை விரும்பிகள். இவர்கள் தங்கள் விவகாரங்களை இரகசியமாக வைத்துக் கொள்வார்கள். எந்தவொரு காரியத்திலும் தங்களை முழுமையாக அர்ப்பணித்துச் செயற்படுவார்கள்.


**தலையணை இல்லாமல் தூங்குபவர்கள்:**

சகலகலா வல்லவர்கள். பெருமிதம் மிக்கவர்கள்.

## பேனா நண்பர்கள்



பெயர்: கே. ராஜா,
வயது: 19
முகவரி: இல. 25-2/5,
டாம் வீதி,
கொழும்பு-12.
பொழுது போக்கு:
வழமையானவை



பெயர்: பி. ஜெயநளினி,
வயது: 21
முகவரி:
மகா வித்தியாலயம் வீதி,
தம்பிலுவில்-02.
பொழுது போக்கு:
வானொலி, பத்திரிகை,,

## இந்தவாரம் உங்கள் பலன்

07.05.2000 முதல் 13.05.2000வரை

ஜோதிடர் 'கார்னர்'

**மேடம்:-**
சிற்சில கிரகமாற்றம். தொழில் தடைகளை விலத்தும் எதிர்ப்பு நிலை நீங்கும். பண வசதிகள் பெருகுவதுடன் கல்வி முயற்சிகள் தொடரும். பயணங்கள் கைகூடும். அச்சுவினிக்காரர் பல நன்மைகளைப் பெறுவார்கள்
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 4
அதிஷ்ட திகதிகள் : 7, 11

**இடபம்:-**
தொழில் ஸ்தானபலம் கூடுவதால் வருமானம் கூடும். தொழில் ஆக்கப்பாடுகள் விரிவடையும். பெண்களால் பல மாற்றமான முடிவுகள் கிடைக்கும். நெடுநாள் எதிர்பார்த்த செய்தி கிடைக்கும், ரோகிணிக்காரருக்கு சுபகருமங்கள் நடைபெறலாம்
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : இளம்பச்சை; எண்: 9
அதிஷ்ட திகதிகள் : 9, 12

**மிதுனம்:-**
குடும்பஸ்தானம் நன்றாக உள்ளதால், பேசித்தடைப்பட்ட திருமணம் கைகூடும். பிள்ளைகளின் கல்வி வசதிகள் பெருகும். உறவினர்களால் பண உதவிகள் கிடைக்கும். சிறு பிள்ளைகளுக்கு நோய்துன்பங்கள் வந்துபோகப் பார்க்கும். திருவாதிரைக்காரருக்கு நல்ல விடயங்கள் நடைபெறும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : இளநீலம்; எண்: 2
அதிஷ்ட திகதிகள் : 10, 11

**கடகம்:-**
பயண அலைச்சலும் உடல் களைப்பும், நோய்துன்பச் சேர்க்கையும் காணப்படும். உறவினர்களுடன் வாக்குவாதங்கள் ஏற்படலாம். கல்வி நிலை தொழில் நிலை நன்றாக அமையாது. பிரயாணத் தடைகள் ஏற்படலாம் ஆயிலிய, பூசக்காரர் எச்சரிக்கையாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், ஞாயிறு
அதிஷ்ட நிறம் : வெள்ளை; எண்: 7
அதிஷ்ட திகதிகள் : 7, 11

**சிம்மம்:-**
பாக்கிய பலம் சிறப்புள்ளதாக அமைவது முக்கிய திருமணபேச்சுக்கள் தடைப்பெறலாம். பிரயாண அமைப்பு திட்டமிடப்படும். பலகாலம் தடைப்பட்ட திட்டங்கள் நடைமுறைக்கு வரும். நண்பர்களின் உதவிகள் கிடைக்கும். மக நட்சத்திர ஆண்களுக்கு சிறப்பான வாரமாகும்
அதிஷ்ட நாட்கள் : புதன், வியாழன்
அதிஸ்ர நிறம் : றோஸ்; எண்: 5
அதிஸ்ரதிகதிகள் : 10, 12

**கன்னி:-**
குடும்பத்தில் நிம்மதி இருக்காது. பணவிடயங்கள் சிக்கலாகக் காணப்படும். தொழில் நிலையில் பிரச்சனைகள் தலைதூக்கும், நண்பர்கள் எதிரிகளாவார்கள். வாகனப்பிரயாணங்களை தவிர்க்கவும். அத்த நட்சத்திரப் பெண்கள் கவனமாக நடக்கவும்
அதிஷ்ட நாட்கள் : புதன், சனி
அதிஷ்ட நிறம : சாம்பல் நிறம்; எண்: 8
அதிஷ்ட திகதிகள் : 8, 9

**துலாம்:-**
பிரிந்த காதலர் ஒன்று சேர்வார்கள். சந்தோஷ நிலை நீடிக்கும், குடும்பம் தொழில் நிலை சிறப்பாக காணப்படும். பணவரவுடன் தூர இடத்து நற்செய்திகள் கிடைக்கும். முயற்சிகள் ஊக்கத்தை கூட கொடுக்கும். சுவாதி பெண்களுக்கு நல்வாரமாக அமையும்.
அதிஷ்ட நாட்கள்: வியாழன், வெள்ளி
அதிஷ்ட நிறம்: மருண்; எண்: 3
அதிஷ்ட திகதிகள்: 10, 12

**விருச்சிகம்:-**
வெற்றிகள்பல வந்துசேரும் உதவிகள் பல கிடைத்தபடி அமையும். பலரின் ஒத்துழைப்புகளுடன் எடுத்த கருமங்கள் வெற்றியைக் கொடுக்கும். பயணங்கள் அனுகூலமாகும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், வியாழன்
அதிஷ்ட நிறம் : பச்சை; எண்: 9
அதிஷ்ட திகதிகள் : 9, 10

**தனுசு:-**
கல்விநிலை தளப்பமாகக் காணப்படும். பணவரவுகள் குறைவாக அமையும். நோய் துன்பச் சேர்க்கை வந்துபோக இடமுண்டு. வெளிஆட்களால் செலவுகள், சிக்கல்கள் வரலாம், மூலப்பெண்கள் கவனமாக இருக்கவும்.
அதிஷ்ட நாட்கள் : செவ்வாய், புதன்
அதிஷ்ட நிறம் : ஒரேஞ்சுவர்ணம்; எண்: 6
அதிஷ்ட திகதிகள் : 9, 11

**மகரம்:-**
மனத்தில் பதற்றமும், எடுத்த கருமவிடயம் தடை தாமதமாகவும் காணப்படும். பணவரவு சுணங்கும். தொழிலில் எதிர்ப்புத் தோன்றலாம். நோய்துன்ப மாற்றமும் காணப்படும். எதிலும் நிதானமாக நடப்பது நன்று.
அதிஷ்ட நாட்கள் : சனி, ஞாயிறு
அதிஷ்ட நிறம் : இளமஞ்சள்; எண்: 3
அதிஷ்ட திகதிகள் : 8, 10

**கும்பம்:-**
பணச்செலவும், உறவினர்களுடன் பிணக்கும் ஏற்படும். கணவன் மனைவி கருத்து வேறுபாடுகள் காணப்படும். புது நோய்தோன்றும், பணச்செலவும் எடுத்தகாரியம் தடை படுவதும் காணப்படும்.
அதிஷ்ட நாட்கள் : திங்கள், சனி
அதிஷ்ட நிறம் : சிவப்பு; எண்: 1
அதிஷ்ட திகதிகள் : 10, 11

**மீனம்:-**
சனிகால முடிவு நெருங்குவது கஷ்டபலன்கள் மறையும். கல்வி, தொழில் பயண வசதிகள் பெருகும், பண பொருள் உதவிகள் வந்து சேரும். உத்திரட்டாதிகாரர் நன்மைகள் அடைவர்.
அதிஷ்ட நாட்கள் : புதன், வெள்ளி
அதிஷ்ட நிறம் : பலவர்ணம்; எண்: 5
அதிஷ்ட திகதிகள் : 12, 10

## நில்-கவனி-முன்னேறு

### முன்னேற்றத்தின் முதற்படி



நம்பிக்கையுடன் செயல்படும்போது ஒருவனிடமிருந்து சக்தி பல மடங்குகளாக பெருகி விடுகிறது. அதனால் நம்பிக்கை மிகுந்தவன் கடினமான வேலைகளைக்கூட விரைவாகவும் சிறப்பாகவும் செய்து முடிக்கிறான். பெரிய பதவிகள், செல்வாக்கு, பெருமை, புகழ், சொத்து, பணம் போன்றவைகள் நம்பிக்கையுடன் செயல்படுபவர்களுக்குத்தான் கிடைக்கும்.

நம்பிக்கை தோல்வியைத் தாங்கிக் கொள்ளும் சக்தியைக் கொடுக்கிறது. சிலர் தாங்கள் சொல்லுவதை தாங்களே நம்பாதவர்களைப் போன்று மெதுவாகத் தட்டுத் தடுமாறி குழப்பத்துடன் பேசி வருகிறார்கள். இவர்கள் பேச்சில் சிறிதுகூட உறுதி இருக்காது.

இப்படிப் பேசும் பழக்கம் கொண்டவர்களுடைய பேச்சை அவர்கள் குழந்தைகள்கூட செவிகொடுத்துக் கேட்க மாட்டார்கள். இதற்கு மாறாக, கம்பீரத்துடன் ஆணித்தரமாக சந்தேகத்திற்குச் சிறிதுகூட இடமின்றி பேசும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொண்டவர்களுக்கு வெற்றி பெறும் வாய்ப்புகள் நிறையக்கிட்டும். வெளியில் நடந்து செல்லும் போது கூனிக் குறுகிக் கொண்டு தரையில் பார்வையைப் பதித்தபடி செல்லுபவனிடம் நம்பிக்கை இருக்காது.

உங்களுடைய உடலை நிமிர்த்தி மற்றவர்களுடைய கண்களைப் பார்த்துக் கொண்டு பேசுவதைப் பழக்கமாக ஏற்படுத்திக் கொள்ளுங்கள். உட்காரும்போதுகூட சரிந்தவாறு அமராமல் உங்கள் முதுகெலும்பை நேர்கோடாக இருக்கும்படி வைத்துக் கொண்டு கம்பீரமாக உட்காருங்கள்.

நீங்கள் பேசும்போது உங்களது குரல் கம்பீரமாக ஒலிக்கட்டும். மற்றவர்களுடைய கைகளைக் குலுக்கும்போது அவர்களுடைய கண்களைப் பார்த்துக் கொண்டு புன்முறுவலுடன் கெட்டியாகக் கை குலுக்குங்கள். அவநம்பிக்கை வெளியிலிருந்து வந்து ஒருவனைத் தொத்திக் கொள்ளுவதில்லை. அதை நம் உள்ளத்தில் நாமாகவே உருவாக்கிக் கொண்டு தோல்வியை நோக்கிச் சரிய ஆரம்பித்து விடுகிறோம்.

'என்னை யாரும் மதிக்கப்போவதில்லை' என்று நினைத்து பார்ப்பவனை யாரும் நிச்சயம் மதிக்கப் போவதில்லை. 'எனக்கு எங்கே வேலை கிடைக்கப் போகிறது?' என்று நினைப்பவருக்குக் கட்டாயம் வேலை கிடைக்காது. 'நான் வியாபாரத்தை ஆரம்பித்து நிறையப் பொருள் சம்பாதிக்கப் போகிறேன்' என்ற நம்பிக்கை நிறைந்த எண்ணம்தான் வியாபாரம் ஆரம்பிக்கும் முயற்சியில் முதல் படியாக அமையும்.

'எனக்குத்திறமை போதாது, என்னால் இந்த காரியத்தைச் செய்ய முடியாது' என்பதைப் போன்று நம்பிக்கையைக் குலைக்கும் எண்ணங்களை நினைத்து வருபவர்களுக்கு வளமான எதிர்காலம் கட்டாயம் கிட்டாது. அதற்கு மாறாக, 'என்னை விட இன்னும் மோசமான சூழ்நிலையில் வாழ்ந்தவர்கள்கூட மாபெரும் காரியங்களைச் செய்து முடித்திருக்கிறார்கள்.

முடியும் என்பதே முன்னேற்றம்தான். இதுதான் முன்னேற்றத்தின் முதற்படியாகும். 'மற்றவர்கள் செய்த காரியங்களை என்னாலும் செய்து காட்டமுடியும்' என்ற நம்பிக்கை ஒருவனை முன்னேற்றப் பாதையில் வீறுநடை போடச் செய்யும். கவர்ச்சியும், கம்பீரமும் நமது நடைவுடைகளில் இருப்பது, மற்றவர்கள் மத்தியில் ஒரு தனி மதிப்பை உண்டாக்கும்.

'ஆடைபாதி, ஆள்பாதி' என்ற பழமொழி கூட இதற்காகத்தான் ஏற்பட்டது.

# ஒவ்வாமையைத் தடுக்க...



இடைவிடாத தும்மல், தோல் தடித்தல், அரித்தல், கண்களில் நீர் வருதல் என்று இவற்றில் ஏதாவது ஒன்றோ அல்லது மொத்தமாகவோ ஏற்படுவது ஒவ்வாமையின் அறிகுறி.

இன்றைய மாசு நிறைந்த சுற்றுச் சூழலில் ஒவ்வாமை அதிகம் ஏற்படும். அதிக மணம் நிறைந்த பூக்கள், பவுடர், சென்ட், தூசு, வாகனப்புகை, சிலவகை உணவுகள், கத்தரிக்காய், தக்காளி போன்றவற்றால் ஒவ்வாமை ஏற்படும்.

சிலருக்கு குறிப்பிட்ட சில பொருட்கள் கூட ஒவ்வாமையை ஏற்படுத்தும். அப்படிப் பட்டவர்கள் ஒவ்வாமை ஏற்படுத்தும் பொருட்களை உணர்ந்து ஒதுக்கி விட வேண்டும்.

சூரிய ஒளி கூடச் சிலருக்கு ஒவ்வாமையை ஏற்படுத்தும். அப்படிப்பட்டவர்கள் வெளியே செல்லும் போது குடை எடுத்துச் செல்லவேண்டும். வெள்ளை அல்லது மென்மையான நிறங்களில் உடல் முழுவதும் போர்த்தப்பட்ட வகையில் உடைகளை அணிவது நல்லது.

உடலில் எதிர்ப்பு சக்தியை அதிகரிக்க சத்தான உணவுவகைகளை சாப்பிட வேண்டும். ஒவ்வாமை தரும் உணவுவகைகளைத் தவிர்க்க வேண்டும்.

மருத்துவர்கள் இது குறித்து ஆலோசனை கூறுவார்கள். யோகாசனம் போன்ற மூச்சுப் பயிற்சிகள், உடற்பயிற்சிகளைச் செய்யலாம்.

இரசாயன முறையில் செய்யப்பட்ட குளிர்பானங்கள், செயற்கை வண்ணங்கள் சேர்த்துத்தயாரிக்கப்பட்ட டின்களில் அடைக்கப்பட்ட உணவுவகைகள், இனிப்புக்கள், அதிகப்படியான வாசனை சேர்க்கப்பட்ட உணவுகள் ஆகியவற்றைத் தவிர்க்க வேண்டும்.

விட்டமின் பி5 ஒவ்வாமையைத் தவிர்க்கும் முக்கியமான உயிர்ச்சத்து ஆகும். விட்டமின் பி5 சத்து அதிகமுள்ள சோயா பீன்ஸ், இளநீர் போன்றவற்றைச் சாப்பிடலாம். கோதுமைப் பண்டங்களிலும் விட்டமின் பி5 சத்து உள்ளது.

வெந்தயக்கீரை, வெந்தயம், பாகற்காய் ஆகியவற்றை அதிக அளவில் உணவில் சேர்த்துக் கொள்ளலாம்.

# செவ்வனே செய்யும் செம்பருத்தி



மருத்துவ குணம் மிக்க பூக்களில் ஒன்று செம்பருத்தி. இதன் விஞ்ஞானப் பெயர் 'ஹைபிஸ்கஸ்'.

செம்பருத்திப் பூ இதயம் தொடர்பான நோய்களைக் கணப்படுத்துகின்றன என முன்னோர்கள் கூறியதை விஞ்ஞானமும் கூட உறுதி செய்திருக்கிறது.

தினமும் காலையில் செம்பருத்திப் பூவை நன்கு கழுவிச் சுத்தம் செய்து பச்சையாகச் சாப்பிட்டால் போதும் வெட்டை நோய், எலும்புருக்கி நோய் விலகுவதோடு இதயத் துடிப்பும் சமன்படும்.

சிறுநீர் எரிச்சல் உள்ளவர்கள் செம்பருத்திப் பூவை அரைத்து 3 தேக்கரண்டி அளவு எடுத்து 200 மில்லி லீட்டர் காய்ச்சிய பசும் பாலில் காலையில் குடித்து வந்தால் குணம் தெரியும்.

செம்பருத்தி இலைகளை நன்கு கழுவி, மைபோல் அரைத்து தலையில் தடவி 1/2 மணி நேரம் ஊறவிட்டுக் குளித்தால் கேசம் புதுப்பொலிவு பெற்றுப் பளபளக்கும்.

பல பெண்களின் பாதங்கள் பித்த வெடிப்புக்களால் பொலிவிழந்து காணப்படும். இவர்களுக்குச் செம்பருத்திப் பூ அருமருந்து.

தினசரி காலை-மாலை வேளைகளில் தேங்காய் எண்ணெயை காலில் வெடிப்புள்ள இடங்களில் தடவிக் கொண்டு 15 நிமிடங்கள் சூடு தாங்கக் கூடிய வெந்நீரில் காலை ஊற வைக்க வேண்டும்.

பிறகு எலுமிச்சம்பழச்சாறு, மருதோன்றி மசியல், செம்பருத்திப் பூ மசியல் ஆகியவற்றைக் கலந்து பாத வெடிப்பில் நன்கு தேய்த்துக் கழுவ, பாத வெடிப்புக்கள் மறைந்து கால்கள் 'பளிச்'சென்றாகிவிடும்.


# பட்டுச் சேலை பரிசுத் திட்டம்

மகளிர் மட்டும் ● மகளிர் மட்டும்



☆ ஒவ்வொரு வாரமும் ஒரு அதிஷ்டசாலி தேர்ந்தெடுக்கப்படுவார். வாரத்தில் ஒருவருக்கு மட்டுமே பட்டுச்சேலை பரிசு வழங்கப்படும்.

☆ கீழேயுள்ள கூப்பனை நிரப்பி தபால் அட்டையில் ஒட்டி அனுப்பினால் போதுமானது.
(பதிவுத் தபால்கள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா)

☆ ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட கூப்பன்களையும் அனுப்பலாம்.

**வாரம் ஒரு பட்டுச் சேலை** HM

பெயர்:....................

முகவரி:....................

....................

தொழில்:....................

கையொப்பம்:....................

**உண்மை – நேர்மை – வெளிப்படைத் தன்மை**

பி.கு:
அதிஷ்டசாலியாக தெரிவு செய்யப்படுகிறவர்கள் தமது புகைப் படங்களை அனுப்பினால் பிரசுரிக்க உதவும்.

**கூப்பனை அனுப்பிவைக்க வேண்டிய இறுதித் திகதி: 13.05.2000**

அனுப்பவேண்டிய முகவரி:- 'வாரம் ஒரு பட்டுச்சேலை', தினமுரசு வாரமலர், த.பெ.இல-1772, கொழும்பு.


# மோனிக்கா என் மோனிக்கா

வழங்குவது 36 புவனா

**மோ**னிக்கா இடமாற்றம் செய்யப் பட்டமைக்கான காரணத்தை தெரிந்து கொண்டதும் ஓரளவு மனத்திருப்தி அடைந்து கொண்டாள். வெள்ளை மாளிகையில் பணிபுரிவதற்கேற்ற ஆற்றலோ திறமையோ தன்னிடமில்லை என்று காரணம் கூறப்பட்டுவிடுமோ என்று தான் அவள் பயந்திருந்தாள். அவளுக்கு கொடுத்த பணியினை செம்மையாக செய்யக்கூடியவள் என்பதனால்தான் பென்டகன் போன்ற நாட்டின் மிக முக்கியமான பகுதிக்கு அவள் வேலை மாற்றம் செய்யப்பட்டுள்ளாள் என்ற கருத்துத் தான் வெள்ளை மாளிகையிலுள்ள ஏனைய பணியாளர்களுக்கு ஏற்பட்டிருக்கும் என்று திருப்தியடைந்தாள்.

தேர்தல் காலம் நெருங்கி வருவதனால் கிளின்ரன் வாஷிங்டனில் தொடர்ந்து இருக்க முடியவில்லை. அமெரிக்காவின் பல பிரதேசங்களுக்கும் அவர் செல்ல வேண்டியிருந்தது. இதனால் மோனிக்காவுடன் கிளின்ரன் தொலைபேசியில் தொடர்பு கொள்வதும் குறைந்திருந்தது. இருப்பினும் வெளியூர்களிலிருந்தாவது தன்னுடன் தொடர்பு கொள்ளுவாரோ என்று எண்ணியவளாக எப்போதும் அவள் தொலைபேசிக்கு அருகிலேயே மணிக்கணக்காக அமர்ந்திருப்பாள். இதனை வீட்டிலுள்ள அவளுடைய' தாயாரும் சித்தியும் பார்த்து பரிதாபப்படுவார்கள்.

வெளியூர்களில் இருந்தோ அல்லது வெளிநாடுகளுக்குச் சென்றோ கிளின்ரன் வாஷிங்டன் திரும்பியதும் அடுத்த நாளாவது நிச்சயமாக அவரிடமிருந்து தொலைபேசி அழைப்பு வரும். "எப்படி இருக்கிறாய்? என்னை நினைத்தாயா- வேதனைப் பட்டாயா?" என்றெல்லாம் பல கேள்விகளை அவளிடம் கேட்பார்.

## கவலைப்படாதே!

"கவலைப்படாதே உன்னை என்றும் மகிழ்ச்சியாக வைத்திருப்பது என் பொறுப்பு" என்று கூறி அவளைத் தேற்றுவார். 'அவர் என் மீது எவ்வளவோ அன்பும் அக்கறையும் கொண்டுள்ளார்' என்று எண்ணி மோனிக்கா பூரித்துப் போவாள்.

"எனது . தாயார் உயிருடன் இருந்திருந்தால் இந்தத் தேர்தல் பிரச்சாரத்தில் என்னுடன் இணைந்து செயற்பட்டிருப்பார்" என்று கூறி மோனிக்காவிடம் கிளின்ரன், அடிக்கடி கூறுவார். அவருடைய தாயார் மோனிக்காவின் தோற்றத்தை உடையவர் என்பதனால். கிளின்ரன் அவளை அதிகமாக நேசிக்கிறார் என்று அவளிடமே அவர் பல தடவை கூறியிருக்கிறார்.

ஒரு நாள் மோனிக்கா தனது தாயாருடன் கடைக்குச் சென்று பொருட்களை வாங்கிக் கொண்டு காரில் வீடு திரும்பிக் கொண்டிருந்தாள். அவர்கள் சென்று கொண்டிருந்த பாதையில் பின்புறமாக கிளின்ரன் தனது தேர்தல் பிரசாரக் குழுவைச் சேர்ந்தவர்களுடன் மோட்டார் பவனியில் வந்து கொண்டிருப்பதை மோனிக்கா கண்டுகொண்டாள். உடனடியாக பாதையின் ஓரத்துக்கு வண்டியைச் செலுத்தி நிறுத்துமாறு மோனிக்கா தனது தாயாரைக்கேட்டுக் கொண்டாள். வண்டி நிறுத்தப்பட்டதும் வண்டியிலிருந்து இறங்கி. ஒரு வசதியான இடத்தில் நின்றுகொண்டாள் தாயாரை வீட்டுக்குச் செல்லுமாறு கேட்டுக் கொண்டாள். தேர்தல் பிரசாரக் குழுவினர் அவ்வழியே வந்தனர். திறந்திருந்த ஒரு மோட்டாரில் கிளின்ரன் நின்ற வண்ணம் வீதியின் இரு மருங்கிலும் மக்கள் திரண்டு நின்றனர்.

## கையசைத்தார்

அங்கோர் இடத்தில் மோனிக்கா நின்றதை கிளின்ரன் பார்த்துவிட்டார். தனது இரு கைகளையும் உயர்த்தி அசைத்து சைகைகாட்டினார். அந்த மக்கள் கூட்டத்தில் தான் நின்றிருந்ததை எப்படியோ கண்டு கை அசைத்தாரே!' என்று எண்ணி மோனிக்கா பெருமைப்பட்டாள்.

அன்றிரவு தான் நினைத்ததைப்போல் கிளின்ரன் மோனிக்காவை தொலைபேசியில் அழைத்தார். அவளுடைய உடல் எடை சற்றுக் குறைந்திருப்பதாக சந்தேகத்துடன் கிளின்ரன் கூறியதைக் கேட்டதும் மோனிக்கா மிகவும் மகிழ்ச்சியடைந்தாள். உடல் எடையையும் தசையையும் குறைப்பதற்கான புதிய சிகிச்சை ஒன்றை அவள் அப்போது மேற்கொண்டிருந்தாள். அந்த மருந்து நல்ல பலன் தந்திருப்பதை அறிந்து அவள் மகிழ்ச்சி பன்மடங்கானது.

கிளின்ரனுடனான இவ்வளவு நெருக்கத்திலும் மோனிக்காவுக்கு ஒரு பெரும் மனத் தாங்கல் இருந்தது. இதனால் அவள் மனம் பேதலித்தவண்ணம் இருந்தது.

தான் கிளின்ரனுடன் ஓரிரவு முழுவதுமாக ஒரே இடத்தில் இருக்கவும் ஒன்றாக அவருடன் ஒரே கட்டிலைப் பகிர்ந்து கொள்ளவுமான சந்தர்ப்பம் கிடைக்க வில்லையே என்ற ஏக்கம் தான் அது. இதனையிட்டு மோனிக்கா பல தடவைகள் கிளின்ரனுடன் விவாதித்திருக்கிறாள். இதற்கு ஏற்றபதிலை கிளின்ரனாலும் அவளுக்குக் கொடுக்க முடியவில்லை.



புளோரிடாவிலிருந்து ஒரு நாள் இரவு கிளின்ரன் மோனிக்காவுடன் தொடர்பு கொண்டார், "உடனடியாக என் கிடோவைப் பார்க்க வேண்டும் போலிருக்கிறதே!" என்று கிளின்ரன் தனது ஏக்கத்தை வெளிப்படுத்தினார். மோனிக்கா பதிலுக்கு, "நான் உடனடியாவே விமானமேறி வரத்தயார். ஆனால் நான் அங்கு வந்தால் எனது நீண்ட நாள் ஏக்கத்தை போக்க ஏற்பாடு செய்வீர்களா?" என்று பச்சையாகவே கேட்டாள்.

இவ்வினாவுக்குப் பதிலளிக்க கிளின்ரனால் முடியவில்லை, "இங்குள்ள சூழ்நிலையில் உன்னைக் கட்டி அணைத்து முத்தம் கொடுப்பதற்குக்கூட ஒரு சந்தர்ப்பம் கிடைக்குமோ என்று சந்தேகப்படுகின்றேன்," என்றார். இந்த பதில் மோனிக்காவை விம்மி விம்மி அழவைத்துவிட்டது.

## ஏமாற்றம்

ஒக்டோபர் மாதத்தில் ஒரு நாள் வெள்ளை மாளிகையில் கிளின்ரன் இருந்தார். அவருடைய அந்தரங்கக் காரிய தரிசியைப் பார்க்கவருவதுபோல் அங்கு வந்தால் இருவரும் முத்தமாவது பரிமாறிக் கொள்ளலாமே, என்று சொன்னார்.

கூறியதுபோல் மோனிக்கா கியூரியின் அலுவலகம் சென்று பேசிக் கொண்டிருந்துவிட்டு, "ஜனாதிபதி இருக்கிறாரா? அவரைச் சந்திக்கலாமா?" என்று கேட்டாள். ஆனால் கியூரி அதற்கு அனுமதிமறுத்துவிட்டார். எவர்லின் லைபர்மான் அப்போது வெள்ளை மாளிகையில் சுற்றித்திரிவதனால் கிளின்ரனிடம் மோனிக்கா செல்வதற்கு வசதி செய்தால் தனக்கும் ஆபத்தாக முடியும் என்று சொல்லி விட்டார்.

மோனிக்காவுக்கு இது பெரும் ஏமாற்றமாகப் போய்விட்டது. கியூரியின் முன்னே நின்று பலமாகச் சத்தமிட்டு அழுதுவிடுவாளோ என்ற நிலையிலிருந்தாள். சோகமாக வெளியேறினாள்.

## ஏக்கத்தைப் போக்க வழி?



அன்றிரவு தொலைபேசியில் கிளின்ரன் தொடர்பு கொண்டால் எவ்வாறு அவருடன் கண்டைபோடுவது என்று ஆயத்தம்பண்ணிக் கொண்டிருந்தாள். ஆனால் தொலைபேசி அழைக்கவேயில்லை. வெந்த புண்ணிலே வேல் பாய்ச்சிய நிலையில் மோனிக்கா வேதனை அடைந்தாள்.

அடுத்தநாள் அதிகாலையில் மோனிக்காவின் பிரத்தியேகத் தொலைபேசி கிணுகிணுத்தது இரவுமுழுவதும் அழுதழுது படுக்கையில் புரண்டவள் இப்பொழுதுதான் கண்ணயர்ந்திருந்தாள். கண்விழித்து தொலைபேசியை எடுத்துகாதில் சொருகினாள். கிளின்ரன் தான் பேசுகிறார் என்ற எண்ணத்தில் தனது எரிச்சலைக் கொட்டித் தீர்க்க ஆயத்தமானாள்.

(வருவாள்)


**இந்த வாரம் யாருக்கு பட்டுச்சேலை?**
**தலவாக்கலை வாசகிக்கு அதிஷ்டம்!**

இவ்வாரம் பட்டுச்சேலை பரிசுபெறும் வாசகி

இவர்தான் — **என்.எம். பிர்தௌஷியா,**
மே/பா என்.எம். நிஸாம் மொஹியதீன்,
இல.18, பழைய மார்க்கட், தலவாக்கலை.

பரிசுபெற்ற வாசகியை முரசின் பல்லாயிரம் வாசக, வாசகியர் சார்பில் வாழ்த்துவோம்.

அடுத்தவாரம் யாருக்கு? ஒருவாரம் பொறுமையாக இருக்கக் கூடாதா?!

இவ்வாரம் பரிசுக்குரியவர் பரிசு பெறும் திகதி பற்றி தபால் மூலம் அறிவிக்கப்படும். தபால் மூலம் அறிவிக்கப்படும் விபரங்களைப் பெற்றபின் எம்முடன் தொடர்பு கொண்டு பரிசினைப் பெறலாம்.

# பாப்பா முரசு



## பாப்பா முரசு சிறுகதை

# முரட்டுக் குதிரை

குதிரை ஒன்றில் வியாபாரி ஒருவர் வியாபார விஷயமாக பக்கத்து ஊருக்கு சென்று கொண்டிருந்தான்.

உச்சி வெயில் மண்டையைப் பிளந்தது. தண்ணீர்த் தாகம் நாக்கை வரட்டியது. குதிரையோ சண்டித்தனம் செய்யும் முரட்டுக்குதிரை. வியாபாரியைத் தவிர வேறு யாருக்கும் அது அடங்காது.

எனவே, குதிரையை பாதுகாப்பாக ஒரு மரத்தில் கட்டி விட்டு அருகில் இருந்த குளக்கரை ஒன்றில் தண்ணீர் குடிக்கச் சென்றான்.



அப்பொழுது இன்னொரு வியாபாரியும் தண்ணீர் குடிப்பதற்காக வந்தான். தன்னுடைய கழுதையை அதே மரத்தில் கட்டினான்.

உடனே குதிரைக்காரன், "அந்த மரத்தில் கழுதையைக் கட்டாதே! என் குதிரை பொல்லாதது உதைக்கும்." என்று குளத்தில் நின்றபடியே கத்தினான்.

கழுதைக்காரனோ காதில் வாங்காமல் அலட்சியப்படுத்தினான்.

"இந்த மரம் உனக்கு மட்டும் தான் சொந்தமா? நான் இதே மரத்தில் தான் கட்டுவேன்," என்றான்.

குதிரைக்காரன் பலமுறை சொல்லியும் கேட்காமல் கழுதையை அதே மரத்தில் கட்டி விட்டு, குளத்தில் இறங்கினான்.

அப்போது, அந்த சண்டிக்குதிரை, கழுதையை ஓங்கி ஓர் உதை விட்டது. உதை தாங்காத கழுதை தடுமாறி கீழே விழுந்தது. குதிரை திரும்பவும் ஓர் உதைவிட கழுதை இறந்தே விட்டது.

"நீ தான் எனக்குக் கழுதை வாங்கித் தர வேண்டும்," என்று அட்டகாசம் செய்தான் கழுதைக்காரன்.

"நான் எவ்வளவோ எச்சரித்தும் நீ தானே திமிராக கட்டினாய். அதற்கு நான் எப்படி பொறுப்பாக முடியும்," என்றான் குதிரைக்காரன்.

இப்படியே சண்டை வலுத்ததும் இருவரும் அக்பரிடம் சென்றனர். அக்பர், பீர்பாலை அழைத்து இந்த வழக்கை விசாரிக்கச் சொன்னார்.

குதிரை வியாபாரியிடம் "இவரது கழுதையை உன் குதிரை கொன்று விட்டது என்று இவர் சொல்வது உண்மையா?" என்று கேட்டான் பீர்பால்.


வியாபாரி மவுனமாக இருந்தான். பீர்பால் கேட்கக் கேட்க பதில் பேசாமல் செய்கையால் ஏதோ சொல்ல முயன்றான்.

"வாய் பேசாதவரா இவர்?" என்று கழுதைக்காரனிடம் கேட்டார் பீர்பால்.

"இல்லை ஐயா, இவன் நல்லா நடிக்கிறான் நம்பாதீங்க. நான் என் கழுதையை மரத்தில் கட்டப் போன போது என் குதிரையின் அருகில் கட்டாதே! அது பொல்லாத குதிரை. உன் கழுதையை உதைக்கும் என்று திரும்பத் திரும்ப கத்திக் கொண்டே இருந்தான். இப்போ என்னடான்னா வாய் பேசாதவன் போல் நடிக்கிறான்," என்றான் கழுதைக்காரன்.

பீர்பால் அர்த்தமுடன் கழுதைக்காரனைப் பார்த்தார்.

"அப்போ நீ மரத்தில் கழுதையைக் கட்டும் போது, தடுத்திருக்கிறார். அதையும் மீறி நீ கட்டியிருக்கிறாய். அப்படியிருக்கும் போது உன் கழுதை இறந்ததற்கு அவர் பொறுப்பில்லை. உன்னுடைய திமிர்த்தனம் தான் காரணம்" என்று கூறி இருவரையும் அனுப்பி வைத்தார் பீர்பால். ■



பறக்கும் 5 பட்டங்களில் குட்டிப்பாப்பா பறக்க விடும் பட்டம் எது என்று கண்டுபிடியுங்கள் பார்க்கலாம்.

## சிறந்த வர்ணத்திற்கு பரிசு தரும் எண்ணம்!



மேலே உள்ள படத்திற்கு வர்ணம் தீட்டி தபாலட்டையில் ஒட்டி அனுப்புங்கள். சிறந்த வர்ணம் ஒன்றுக்கு பரிசு ரூபா 25/= காத்திருக்கிறது. அனுப்பவேண்டிய கடைசித் திகதி **13.05.2000.**

வர்ணம் தீட்டும் போட்டி இல: **342**
தினமுரசு வாரமலர்
த.பெ.இல.1772
கொழும்பு.


### வர்ணம் தீட்டும் போட்டி இல: 340

பரிசுக்குரியவர்:
கு.இலக்கியா,
யூனிட்-05, வாரிக்குட்டியூர்.

பாராட்டுக்குரியவர்கள்:

| | |
|---|---|
| பாதிமா சகீலா இக்பால்,<br>முன்வதுகொடை முஸ்லிம் வித்தியாலயம், தந்துரை. | பா.பிரணவன்,<br>தமிழ் மத்திய மகா வித்தியாலயம், வவுனியா. |
| பி.அஜித்ரா,<br>மட்/வின்சன் மகளிர் தேசிய பாடசாலை, மட்டக்களப்பு. | பர்ஹத் ஜபீனா ஜாபிர்,<br>அல். அஸ்ஹர் மத்திய கல்லூரி, திஹாரிய. |
| என்.தஸ்னா,<br>மட்/அல்.ஹிதாயா மகா வித்தியாலயம், மீராவோடை. | ஆர்.சாமிளா அனூரிகா,<br>புனித மரியாள் கல்லூரி, அவிசாவளை. |
| என்.காண்டீபன்,<br>கார்மேல் பாத்திமா தேசிய பாடசாலை, கல்முனை. | அபூபக்கர் ஜெரூன்னிஸா பேகம்,<br>அல்/.:பறியா முஸ்லிம் மத்திய கல்லூரி, தொட்டவத்தை. |
| த.காயத்ரி,<br>மெதடிஸ்ற் கல்லூரி, கொழும்பு-03. | சாள்ஸ் சீவரட்ணம்,<br>பரி.தோமாவின் கல்லூரி, கல்கிசை. |

## செய்து பாருங்கள்



***தேவையானவை :***

சிறிய கார்ட்போர்ட் பெட்டி( இது ஐஸ்கிறீம் குச்சிகளின் உயரத்தை விடச் சிறியதாக இருக்க வேண்டும்.) ஐஸ்கிறீம் குச்சிகள், பசை, டுவைன் நூல், வார்னிஷ்.

***செய்முறை***

1. பெட்டியைச் சுற்றி ஐஸ்கிறீம் குச்சிகளை பசையின் உதவியால் ஒட்ட வேண்டும்.
2. இக்குச்சிகள் மீது வார்னிஷ் தடவி அப்படியே காயவிடுங்கள்.
3. கலர் டுவைன் நூலால் ஒவ்வொரு குச்சியின் உள்ளே, வெளியே விட்டு அழகாகக் கட்டி பூ வாஸ் போல் பயன்படுத்துங்கள். ●

## இயற்கையின் விளையாட்டு



துருவப் பகுதிகளில் மிக அபாரமான ஒளிவீச்சுக்கள் நடக்கின்றன. இரவு நேரத்தில் வானத்தில் பல வித ஒளியை வீசும் காட்சியை இங்கு காணலாம். இந்த ஒளி விளையாட்டை 'அரோரா போலாரிஸ்' என்று அழைக்கின்றனர்.

சூரியனில் இருந்து வெளிவரும் வெப்பக்கதிர்கள், பூமியின் வாயு மண்டலத்தை அடையும் போது இந்த ஒளிவீச்சு நடக்கிறது. பூமியில் இருந்து 100 முதல் 1000 கிலோ மீட்டர் உயரத்தில் இந்த அபாரக்காட்சி தென்படுகிறது.

சூரியனில் இருந்து விழும் துகள்கள், துருவப்பகுதியின் ஈர்ப்பு சக்தி காரணமாக இழுக்கும்போது, வாயுத் துகள்களுடன் மோதி நெருப்புப் பற்றி இந்தக் காட்சி ஏற்படும்.

இந்தக்காட்சி பல வடிவங்களில் தெரியும். சில நேரங்களில் ஒளித்திரை போலவும், ஒளி மழை போலவும், நெருப்புப்பந்து போலவும் காட்சி அளிக்கும். ●



# திக் திக் தொடர்

# சிகப்பு வணக்கம் 24

**கிரைம் சக்கரவர்த்தி ராஜேஷ்குமார்**

"**ஸார்...** ஆச்சார்யாவுக்கும் என்னோட சிஸ்டருக்கும் இருந்த தொடர்பு இதுவரைக்கும் யாருக்கும் வெளியே தெரியாமே இருந்தது... இனிமேலும் யாருக்கும் தெரியக் கூடாதுங்கிறதுதான் எங்க விருப்பம்..."

"ஆச்சார்யா இங்கே வந்து எந்த ரூம்ல தங்குவார்ன்னு சொன்னீங்க...?"

"மாடியில் முதல் ரூம்...!"

"வாங்க போலாம்..."

எழுந்து மாடிப்படிகளை நோக்கிப் போனார்கள். படிகள் ஏற ஏற விவேக் கேட்டான்.

"ஜ்யோதி, ஏதோ க்ளப்புக்குப் போயிருக்கிறதா சொன்னீங்க... என்ன க்ளப் அது...?"

"லேடீஸ் க்ளப் ஸார்...!"

"போய் நேரமாச்சா...?"

"ஒரு மணி நேரம் இருக்கும் ஸார்...!"

"எப்ப வருவாங்க...?"

"தெரியலை ஸார்..."

"போகும்போது சொல்லிட்டுப் போகலையா?"

"இல்ல ஸார்..."

"க்ளப்புக்கு ஃபோன் இருக்கா...?"

"இருக்கு ஸார்..."

"ஃபோன் பண்ணி உடனே வரச் சொல்லுங்களேன்..."

"அது... வந்து..."

"ஏன் தயங்கறீங்க...?"

"ஒண்ணுமில்ல ஸார்... ஜ்யோதிக்கு ரொம்பவும் பயந்த சுபாவம்... போலீஸ் என்கொய்ரின்னா ரொம்பவும் அப்செட் ஆயிடுவா... சில சமயங்கள்ல நெர்வஸ்னஸ் அதிகமாகி ஒரு ஹிஸ்டீரியா பேஷண்ட் மாதிரி கத்த ஆரம்பிச்சுடுவா..."

"அதுக்காக என்கொய்ரி பண்ணாமே இருக்க முடியுமா...? ப்ளீஸ் கால் ஹர்..."

ஆகாஷ் தயங்கி, பின் தன் பாக்கெட்டில் இருந்த செல்ஃபோனை எடுத்து, சில எண்களைத் தட்டிவிட்டு எதிர் முனையில் பேசிவிட்டு விவேக்கிடம் திரும்பினான்.

"ஸார்.."

"என்ன...?"

"ஜ்யோதி க்ளப்புக்கு வரலையாம்..."

"என்ன மிஸ்டர் ஆகாஷ் இது...? நீங்கதானே ஜ்யோதி க்ளப்புக்குப் போயிருக்கிறதா சென்னீங்க..?"

"சொன்னேன் ஸார்... பட்... அவளுக்குப் போகிற வழியில் வேற ஏதாவது என்கேஜ்மெண்ட் இருந்திருக்கும் போலிருக்கு..."

விவேக் சிரித்தான்.

"ஆகாஷ்...! ஒரு பொய் பேச ஆரம்பிச்சாலே இப்படித்தான்... அடுக்கடுக்கா பொய் சொல்ல வேண்டியிருக்கும்..."

"ஸ... ஸார்...! நீங்க என்ன சொல்றீங்க?"

"உண்மையைச் சொல்லட்டுமா...? ஜ்யோதி இந்த வீட்டை விட்டு வெளியே போகவேயில்லை. இதே வீட்டுக்குள்ளேதான் இருக்காங்க... கூப்பிட்டு விடறீங்களா...?"

"ஸ...ஸார்..."

"கூப்பிடுங்க ஆகாஷ்...! நேரமாகுது... போலீஸை ஏமாத்தறது அவ்வளவு சுலபம் இல்லை...!"

"...."

ஆகாஷ் வியர்த்து வழிந்து கொண்டிருக்க, விவேக் இதழ்கோடியில் ஒரு புன்னகையை உற்பத்தி செய்துகொண்டு அவனுடைய தோளை மெல்லத் தட்டினான்.

"இப்படி திகைச்சுப்போய் நின்னுட்டா எப்படி மிஸ்டர் ஆகாஷ்? உள்ளே இருக்கிற ஜ்யோதியைக் கூப்பிடுங்க..... போலீஸ்காரனுக்கு முகத்துல மட்டும் இல்லை..... முதுகிலேயும் இரண்டு கண்கள் இருக்குங்கிற விஷயம் பல பேர்க்குத் தெரியாது. நான் உங்ககிட்ட பேசிட்டிருக்கும் போதே பின்னாடி இருக்கிற வேலைக்காரனையும் என்பார்வையோட எல்லைக் குள்ளே நிறுத்தி வைச்சிருந்தேன்.... ரெண்டு தடவை அவன் யாருக்கோ ஜாடை காட்டி, ஏதோ ஒரு விஷயத்தை சைகை மூலமா சொன்னான்.

அப்படின்னா இந்த வீட்டுக்குள்ளே உங்க ரெண்டு பேரையும் தவிர, மூணாவதா யாரோ ஒருத்தங்க இருக்காங்கங்கிறதைப் புரிஞ்சிட்டேன். அது ஜ்யோதியாத்தான் இருக்கணும்னு என் மனசுக்குப் பட்டது..."

விவேக் சொல்லிக் கொண்டிருக்கும் போதே பக்கத்து அறையிலிருந்து அந்தப் பெண் வெளிப்பட்டாள். கறுப்புநிறப் பின்னணியில் மஞ்சள் பூக்கள் சிரிக்கும் சல்வார் கம்மீஸ். காதில் பொன் வளையங்கள்.

ஃபோட்டோவில் பார்த்த அதே ஜ்யோதி.

"ஸாரி ஸார்...! இந்தக் கண்ணாமூச்சி விளையாட்டு வேண்டாம்னு நான் அண்ணன் கிட்ட சொன்னேன். அவர் கேட்கலை... 'போலீஸ் விசாரணையை நீ அவாய்ட் பண்ணிடு' ன்னு சொல்லி, இந்த ரூமுக்குள்ளே கண் மறைவா இருக்கச் சொல்லிட்டார்.

கண்ணாடியில் என்னோட உருவம் தெரியறதைப் பார்த்துட்டு வேலைக்காரன் சைகை பண்ணும் போதுதான் நீங்க பார்த்துட்டீங்கன்னு நினைக்கிறேன்....நாங்க உங்ககிட்ட பொய் சொன்னதுக்காக மன்னிப்பு கேட்டுக்கறோம்....!"

விவேக் கேட்டான்:

"போலீஸ் விசாரணையை ஏன் அவாய்ட் பண்ணணும்...?

"ஒரு பயம்தான் ஸார்...."

"என்ன பயம்....?"

"ஸார்... எனக்கும் ஆச்சார்யாவுக்கும் இருந்தது ஒரு இலை மறைவு காய்மறைவான தொடர்பு! அதை வெளிச்சத்துக்கு கொண்டு வந்தா பாதிக்கப் போறது என்னோட வாழ்க்கைதான்..."

"இதையெல்லாம் ஆச்சார்யாகிட்ட உறவு வெச்சுக்கிறதுக்கு முந்தி நீ யோசிச்சுப் பார்த்திருக்கணும்...."

"ஸார்....! ஆச்சார்யாவோட கொலைக்கும் எங்களுக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. ஒரு தீவிரவாத கும்பலோட அக்கிரமமான கோரிக்கைக்கு அவர் அடிபணியாத காரணத்தால கொலை செய்யப்பட்டு இருக்கார். இதுல என்னோட விவகாரத்தை லிங்க் பண்றதால எந்த பிரயோஜனமும் இல்லை...."

"ஸாரி.... ஜ்யோதி... நீ நினைக்கிற மாதிரி அது தீவிரவாதிகள் வேலை கிடையாது. அப்படி ஒரு சதி இருந்தது. ஆனால், அதை உளவுத்துறை போலீஸார் சரியான நேரத்துல கண்டுபிடிச்சு ஆஃப் பண்ணிட்டாங்க.

அந்த தீவிரவாத கோஷ்டி இப்போ ஜெயிலுக்குள்ளே! ஆச்சார்யாவும் சரி; பங்கஜ்ஜும் சரி முழுக்க முழுக்க பர்சனல் விஷயமாகத்தான் கொலை செய்யப்பட்டு இருக்காங்க. கிரிக்கெட் காப்டன் நரேஷையும் கொலை செய்ய முயற்சிகள் நடந்துகிட்டு இருக்கு.... அவர் மூணு தடவை அதிஷ்டவசமா தப்பிச்சுட்டார். ஆனால் கொலையாளி, நரேஷ்க்கு சிகப்பு வணக்கம் வெச்சே தீர்வேன்னு மிரட்டல் கடிதமும் எழுதியிருக்கான்....

அந்தக் கொலையாளியை ஜெயிக்க விட்டுடப் கூடாதுன்னுதான் மும்முரமா களத்துல இறங்கியிருக்கேன். ஆச்சார்யா, பங்கஜ், நரேஷ் இந்த மூணு பேர்க்கும் பொதுவான எதிரி ஒருவன், அவர்களின் வட்டாரத்துக்குள்ளே ஊடுருவியிருக்கிறான். அவன் யார்ங்கிறதைக் கண்டுபிடிக்க நீதான் உதவி பண்ணணும்."

ஜ்யோதி விழிகளை விரித்தாள்.

"இதுல நான் எப்படி ஸார் உதவ முடியும்...?"

"முடியும்..."

"எந்த வகையில் ஸார்....?"

"இப்படி நான் பட்டவர்த்தனமா பேசறதுக்காக ஸாரி கேட்டுக்கறேன். நீ ஆச்சார்யாவுக்கு சின்ன வீடு. பொதுவா பெரிய மனுஷங்க, சில முக்கியமான விஷயங்களை தாலி கட்டின மனைவிகிட்டேகூட சொல்லாமே, சின்ன வீட்ல தான் சொல்லுவாங்க...அதே மாதிரி உன்கிட்டயும் ஆச்சார்யா ஏதாவது சொல்லியிருக்கலாம். கொஞ்சம் ஞாபகப்படுத்திப்பாரு...."



ஜ்யோதி சில விநாடிகள் யோசனையில் ஆழ்ந்துவிட்டு, பிறகு மெதுவாக உதட்டை அசைத்தாள்.

"ஸார்... கிரிக்கெட் போர்டுக்குள் ஏகப்பட்ட பாலிடிக்ஸ் இருக்கிறதாக ஆச்சார்யா என்கிட்ட சொல்லியிருக்கார். அவர் தொடர்ந்து நாலு வருஷமா போர்டு சேர்மனாயிருக்கிறது டைரக்டர்களில் சில பேருக்குப் பிடிக்கலை..."

"யார் அந்த சில பேர்....?"

"அது வந்து..." ஜ்யோதி தயங்க அதுவரைக்கும் பேசாமல் நின்றிருந்த ஆகாஷ் குறுக்கிட்டான்.

"ஜ்யோதி.....! போலீஸ் படியேறி விசாரணைக்குன்னு வந்துட்டாங்க... நீ எதையும் மறைக்காம ஆச்சார்யா உன்கிட்டே என்ன சொன்னாரோ, அதையெல்லாம் சொல்லிடு.... எதையாவ்து மறைக்கப் போய் பின்னாடி பிரச்சனையாயிடப் போவுது...."

ஜ்யோதி தன் தோள்களைக் குலுக்கி ஒரு பெருமூச்சை விட்டபடியே விவேக்கை ஏறிட்டாள்.

"ஸார்... கிரிக்கெட் போர்டில் இருக்கிற டைரக்டர்ஸ், வெளிப்பார்வைக்கு ஆச்சார்யாகிட்ட மரியாதையோடு பழகினாலும், உள்ளுக்குள்ளே அவர்மேல ஏகப்பட்ட காழ்ப்புணர்ச்சி. ஆச்சாார்யாவுக்கு நல்ல செல்வாக்கு அரசியல் தலைவர்களுக்கு மத்தியில் உண்டு. அதனால் அவர்கிட்ட யாரும் மோதலை."

"ஆச்சார்யா மேல அவங்களுக்கு கோபம் சரி; பங்கஜ், நரேஷ் மேல என்ன பகை...?"

"பங்கஜ், நரேஷ் ரெண்டுபேருமே ஆச்சார்யாவுக்குப் பிரியமானவங்க. ஆச்சார்யா எந்த முடிவு எடுத்தாலும் அதை ஆதறிச்சுக் குரல் தர்றது அவங்க வழக்கம். அதனால பங்கஜ், நரேஷ் மேலேயும் டைரக்டர்களுக்கு நீறு பூத்த நெருப்பு மாதிரி பகையுண்டு....."

"அந்த டைரக்டர்கள் யார் யார்ன்னு சொல்லமுடியுமா...?"

ஜ்யோதி மீண்டும் தயங்கிவிட்டு, பின் மெல்லிய குரலில் சொன்னாள்.

"மூணு பேர்களைச் சொன்னார். வைத்தியா, நிகில் குமார், கபாடியா.....இதில் வைத்தியா ரொம்பவும் ஃபோர்ஸ்! ஸார்! இதையெல்லாம் நான் தான் சொன்னேன்னு வெளியே யார்கிட்டேயும் சொல்லிடாதீங்க... அதுக்கப்புறம் ஆச்சார்யாவுக்கு நேர்ந்த கதிதான் எனக்கு வரும்....!

"யூ டோண்ட் வொர்ரி.... இந்தப் பிரச்சினையை நான் எப்படி ஹேண்டில் பண்ணணுமோ.... அப்படி பண்ணிக்கிறேன். கொலையாளி பிடிபடுகிறவரை நீ இந்த மெட்ராஸை விட்டுப் போகக்கூடாது."

"நீங்க சொல்றபடியெல்லாம் நான் கேக்கிறேன் ஸார்.... பட் எனக்கு மட்டும் எந்தப் பிரச்சினையும் வந்துடக் கூடாது."

"வராது...." விவேக் சொல்லிவிட்டு ஆகாஷிடம் திரும்பினான்.

"இது ஃபர்ஸ்ட் என்கொய்ரி. மறுபடியும் ஒரு தடவை நான் இங்கே வரவேண்டியிருக்கும்... விசாரிக்க வேண்டியிருக்கும்...."

"நீங்க எப்ப வேணும்னாலும் வரலாம். மோர்ஸ்ட் வெல்கம் ஸார்...." கைகளைக் குவித்தான் ஆகாஷ்.

(தொடர்ந்து வரும்)

---

**'சிறை', 'தர்மயுத்தம்' போன்ற வெற்றிப்படங்களை இயக்கியவர் ஆர். சி.சக்தி. அவரது சூடும் சுவையும் கலந்த அனுபவங்கள் இங்கு தொடராகின்றன.**

# தர்ம யுத்தம் 34

உறவுப் புரட்சி


செக்கிலே போட்டு ஆட்டுவார்கள்..... கொதிக்கும் எண்ணெய் கொப்பரையில் தூக்கிப் போடுவார்கள்.... ரம்பம் வைத்து உடலை அறுப்பார்கள்.... என்றெல்லாம் நமது முன்னோர்கள் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

அதேபோல் புண்ணியம் என்ற பெயரில் துன்பப்படுகிறவர்களுக்குத் துணையாக நிற்பவர்கள், பசியால் வாடும் ஏழைகளுக்கு உணவளிப்பது, பள்ளிக்கூடம் கட்டுவது, குளம் வெட்டுவது, ஆலயம் நிர்மாணிப்பது இவை எல்லாம் புண்ணிய காரியங்கள் என்றும், இவற்றை செய்பவர்கள் இறந்த பிறகு சொர்க்கத்திற்கு போவார்கள் என்றும், அங்கே அவர்களுக்க சுகபோகமான வாழ்க்கை அமையும் என்றும் சொல்லி வைத்திருக்கிறார்கள்.

இவை எல்லாம் கட்டுக்கதைகள் என்றும், மக்களை முட்டாளாக்குகிற முயற்சியின் உச்சக் கட்டம் என்றும், அயோக்கியர்கள் சிலர் தங்கள் சுயநலத்துக்காக பரப்பிவிட்ட புரட்டுச் செய்திகள் என்றும் பொய்யான செய்திகள் என்றும் மாறுபட்ட சிந்தனையாளர்கள் சிலர் கூறுவதுண்டு.

நமது முன்னோர்களின் மனதில் பிறந்த சமூகக் கவலையின் வெளிப்பாடுதான் பாவமும், புண்ணியமும். அவர்களது நோக்க மெல்லாம் மனித மனங்களில் ஒரு தார்மீக பயணத்தை (moral fear) ஏற்படுத்தவேண்டும் என்பதும், நல்லது செய்பவரை உற்சாகப்படுத்த வேண்டும் என்பதும்தான்.

என்னைப் பொறுத்தவரையில் நான்



புரிந்துகொண்ட வகையில் பாவம் என்பதும், அதற்குரிய தண்டனை என்பதும் மனிதர்கள் தவறு செய்யாமல் தடுக்க கையாளப்பட்ட ஒரு யுக்தி.

புண்ணியமும், புண்ணியத்தின் பலன்களும் மனித மனங்களுக்கு கொடுக்கப்பட்ட மறைமுகமான லஞ்சம். எனவேதான் பழங்காலத்து மனிதர்கள் பலர் பாவத்துக்கு பயந்து தவறு செய்யாமல் இருந்தனர். புண்ணியத்திற்கு ஆசைப்பட்டு சில நல்ல காரியங்களைச் செய்தனர்.

நம்பிக்கைகளின் காரணங்களைத் தேடி ஆராய்வதைவிட அதன் விளைவுகள் நல்லவைகளாக இருந்தால் அதை வரவேற்கலாம்.

சொர்க்கம் என்பது முட்டாள்தனமாகவே இருந்தாலும் அந்த சொர்க்கத்திற்கு ஆசைப்பட்டு ஒருவர் பள்ளிக்கூடம் கட்டினால், பல பேருக்கு உதவியாக வாழ்ந்தால், ஏழை எளியவர்களிடம் இரக்கம் காட்டினார் என்றால் அந்த முட்டாள்தனம் இருந்துவிட்டுப் போகட்டுமே....

நரக லோகம் என்பது கற்பனைச் சொல்லாகவே இருந்தாலும் அதில் கிடைக்கப்போகும் தண்டனைகளுக்காகப் பயந்து ஒருவன் நல்லவனாக வாழ்ந்தால் அந்த அறியாமை வளர்வதில் தவறில்லை என்றே நான் கருதுகிறேன்.

ஏனென்றால் முட்டாள்கள் கட்டும் பள்ளிக்கூடத்திலும் ஆயிரம் அறிவாளிகள் உருவாக வழி உண்டு.

மனிதாபிமானமற்ற அறிவாளிகளைவிட மனித நேயம் உள்ள முட்டாள்கள் இந்த உலகத்திற்கு மிகவும் பயனுள்ளவர்களாக இருப்பார்கள்.

மகாபாரதத்தில் ஒரு சம்பவம்! தர்மர் செய்த யாகத்தைவிட ஒரு ஏழை பிராமணர், பசியால் வாடியவருக்குச் செய்த தானம் மேலானதென்று விளக்குகிறது அந்தக் கதை.

ஏழைகளின் பசி என்ற நெருப்பில்தான் பல சர்வாதிகார சாம்ராஜ்யங்கள் சாம்பலாகிப் போயிருக்கின்றன.

அதனால்தான் வள்ளலார் போன்ற ஆன்மீகப் பெரியவர்களிலிருந்து லெனின் போன்ற பொதுவுடைமைப் புரட்சிவாதிகள் வரை மக்களின் பசிப் பிணியைப் பற்றி தீவிரமாக சிந்தித்தனர்.

ஜார் மன்னனின் அரக்கத்தனமான ஆட்சியில் பட்டினி கிடந்த மக்களைப் பார்த்து வேதனைப்பட்ட நல்ல உள்ளங்களின் வெளிப்பாடுதான் கம்யூனிஸம்.

இந்தியத் திருநாட்டில் கூட எத்தனையோ ஆட்சிகள் ரேஷன் கடைகளால்தான் கவிழ்ந்திருக்கின்றன.

மனித மனங்களில் அன்புணர்ச்சி வற்றிப் போனால், இந்த நாட்டில் எத்தனை ஜீவ நதிகள் பெருக்கெடுத்துப் பாய்ந்தாலும் எந்தப் பலனும் இருக்காது

ஒருவரையொருவர் நேசிக்காத மனிதர்கள் வாழும் ஊரிலே, மாதம் மும்மாரி யல்ல... மாதம் முழுக்க மாரிபொழிந்தாலும் பூமிப் பந்து வறண்டுதான் இருக்கும்.

இந்த உலகிற்குப் பசுமைப் புரட்சியை விட, வெண்மைப் புரட்சியைவிட நமது உள்ளங்களில் உறவுப் புரட்சி பிறக்க வேண்டும்.

காசு, பண ஆசைகளால் கல்லாகிப் போன மனித இதயங்களில் கனிவு பிறக்க வேண்டும். நாமெல்லாம் மனிதர்கள் என்ற தெளிவு பிறக்கவேண்டும்.

என் வீட்டு வாசலில் பசிக்கு சோறு கேட்டு நிற்கும் யாரையும் 'பிச்சைக்காரர்கள்' என்று குறிப்பிடக்கூடாது என்று என் பிள்ளைகளுக்கு சொல்லிக் கொடுத்திருக்கிறேன்.

காரணம், என்னைப் பொறுத்தவரையில் ஏழ்மை என்பது பிறப்பு அல்ல. வாழ்வில் தோன்றி மறைகிறதற்காலிக நிலைமை.

நிலைமைகள் மாறும் பொழுது, ஏழ்மையும் மறைந்து அவர்களும் இந்தச் சமூகத்தில் சராசரி மனிதர்களாக வாழ சந்தர்ப்பம் ஏற்படக் கூடும்.

யாரேனும் வயதானவர்கள் பசி தாங்காமல் உதவி கேட்டு என் வீட்டு வாசலில் நிற்கும் போது எனது மூன்று குழந்தைகளுமே தங்களது அம்மாவிடம் "அம்மா.... யாரோ ஒரு பாட்டி 'பசிக்குது'ன்னு சொல்றாங்க" அல்லது 'யாரோ ஒரு தாத்தா சாப்பாடு கேட்கிறார்" என்றுதான் சொல்வார்கள்.

ஏனென்றால் எனது தாயோ தந்தையோ உயிரோடு இருந்து எனது குழந்தைகளிடம் 'பசிக்குது' என்று சென்னால் அவர்களது தாயிடம் எப்படி உறவு கலந்த உரிமையுடன் 'தாத்தாவுக்குப் பசிக்குதாம்', 'பாட்டிக்குப் பசிக்குதாம்' என்று சொல்வார்களோ, அப்படித்தான் வாசலில் வந்து நிற்கும் ஏழைப் பெரியவர்களிடமும் இரக்கம் காட்ட வேண்டும் என்பது எனது கருத்து.

பணம், காசு கொடுத்து உதவ முடியவில்லை என்றாலும் மற்றவரின் பசிக்கு சோறு போடுகிற நிலைமையிலாவது வைத்திருக்கிற இறைவனுக்கு நன்றி சொல்கிற வாய்ப்பாகத்தான் இது மாதிரியான சந்தர்ப்பங்களை நான் கருதுகிறேன்.

ஒரு நாள் காலை நேரம் பேப்பர் படித்துக் கொண்டிருக்கிறேன். என் மனைவி குளித்துக் கொண்டிருந்தாள். சிறிது நேரத்தில் நானும் வெளியில் புறப்பட வேண்டும் என்பதால் பத்திரிகைச் செய்திகளில் மனம் பதியாமல் மேலோட்டமாக புரட்டிக் கொண்டிருந்தேன்.

வாசலில் என் மூத்த மகள் சாந்தி, யாரையோ "வாங்க... உள்ளே வாங்க..." என்று வற்புறுத்தி அழைக்கும் குரல் கேட்டது. அழைக்கப்பட்ட நபர் யார் என்று எட்டிப் பார்த்தேன்.

அவர் ஆணா, பெண்ணா என்பதுகூட எனக்குத் தெரியவில்லை. ஆனால் திரும்ப, திரும்ப அழைப்பதிலிருந்து அவர்கள் உள்ளே வருவதற்கு மிகவும் தயங்குகிறார்கள் என்பதைப் புரிந்து கொண்டேன்.

ஒரு வழியாக வராண்டாவில் வந்து அமர்ந்துவிட்டதாக யூகித்தேன். ஏனெனில் உள்ளே வந்த எனது மூத்த மகள் அவசர, அவசரமாக தோசை சுட ஆரம்பிப்பது தெரிந்தது.

அறிமுகம் இல்லாத யாரிடமும் எளிதில் பழகாத எனது மகன் செல்வகுமாரும் அக்காவிற்கு உதவியாக சமையலறையில் நடமாடுவதைப் பார்த்ததும் மிகவும் தெரிந்த அல்லது உறவுக்காரர் யாரோ வந் திருக்கக் கூடும் என்று நான் எண்ணினேன்.

என்றாலும், இருந்த இடத்தைவிட்டு நான் நகராமலேயே என்ன நடக்கிறது என்பதைப் பார்த்துக் கொண்டிருநதேன்.

(அனுபவங்கள் தொடரும்)

# ஈழத்தின் இணையற்ற எழுத்துச்சிற்பி....

# எஸ்.டி.சிவநாயகம்

## இரா.பத்மநாதன்



ஈழத் தமிழர் உரிமைப் போராட்டத்தில் ஒரு மைல் கல்லாக அமைந்தது, 1957ம் ஆண்டு இடம் பெற்ற திருமலை யாத்திரை. திருகோணமலையில் நடைபெறுவதற்குத் திட்டமிடப்பட்டிருந்த தமிழரசக் கட்சியின் தேசிய மாநாட்டுக்கு, நாட்டின் நான்கு திக்குகளிலுமிருந்து புறப்பட்டுச் செல்லவிருந்த கட்சித் தொண்டர்கள், பாதயாத்திரையாகவே செல்வதெனத் தீர்மானிக்கப்பட்டது. அவ்வாறு புறப்பட்ட பாத யாத்திரீகர்கள் அணிவகுத்துச் செல்வதற்காகவே இத்தகைய ஆர்ப்பாட்டப் போர்ப் பாட்டை 'தியாகி' என்ற புனைபெயரில் மறைந்திருந்த அமரர் எஸ்.டி.சிவநாயகம் யாத்திருந்தார்.

**'அமுதத் தமிழர் நாட்டிலே**
**தமிழராட்சி நாட்டவே**
**திமுதிமென்று தீரர்காள்**
**திரண்டு வாரீர் ஓட்டமாய்'**

இவ்வாறு அமைந்த ஆர்ப்பாட்டப் போர்ப்பாட்டு, இற்றைக்கு 43 வருடங்களுக்கு முன்னர் ஈழத் தமிழ் இளைஞர்கள் வாயில் ஒலித்தவண்ணமிருந்தது.

அப்போது அவர் 'சுதந்திரன்' வார ஏட்டின் நிர்வாக ஆசிரியராகக் கடமையாற்றினார். அக்காலத்தில் இலங்கை வாழ் தமிழ்ப்பேசும் மக்கள் இல்லங்கள் தோறும் 'சுதந்திரன்' வீற்றிருக்கும்.

ஆணித்தரமான அரசியற்கட்டுரைகள், ஆழமான பொருள் போதிந்த விமர்சனங்கள், கருத்தாழத்துடன் உரிமை வேட்கையை வெளிப்படுத்தும் கவிதைகள், இலக்கியச்சுவை சொட்டும் கதைகள், கட்டுரைகள் ஆகியவற்றுடன் சூடான தகவல்களையும் ஒருங்கிணைத்து விருந்து படைக்கும் வார ஏடாக சுதந்திரன் வெளி வந்து கொண்டிருந்தது.

சுதந்திரனின் அரசியலுக்கு அப்பாற் பட்ட வாசகர்களையும் விழுந்து விழுந்து சிரிக்கவும் சிந்திக்கவும் வைக்கும் அம்சமான 'குயுக்தியார்' பதில்கள் இப்பத்திரிகையின் சிறப்பம்சமாக இருந்தது. குயுக்தியாராக வேடமிட்டு விடையளித்தவர் எஸ்.டி.எஸ். அவர்களே.

தந்தை செல்வாவினால் ஆரம்பிக்கப்பட்ட சுதந்திரன், இலங்கைத் தமிழரசுக் கட்சியின் கொள்கைகளை நாட்டின் பட்டி தொட்டிகளிலும் மூலை முடுக்குகளிலும் எடுத்துச் சென்று பரப்பும் பணியினை செம்மையாகச் செய்துவந்தது. கட்சிக் கொள்கைகள் குறிப்பிட்ட காலத்துக்குள் கனவேகமாகப் பரவி, ஈழத் தமிழ்பேசும் மக்கள் அனைவரையும் ஒன்றிணைக்க உறுதுணை புரிந்தது சுதந்திரனே. அதுவும் எஸ்.டி.எஸ். அவர்களின் பேனா முனையால்தான் அச்சாதனை ஏற்படுத்தப்பட்டது என்பதனை எவரும் மறுக்க முடியாது.

### ஈழத்து எழுத்தாளர்கள்

ஈழத்திருநாட்டிலும் தலைசிறந்த தமிழ் எழுத்தாளர்கள் இருக்கிறார்கள் என்பதை தமிழ் கூறும் நல்லுலகுக்குப் புலப்படுத்தியவர் திரு.சிவநாயகம் அவர்கள்.

அப்போதெல்லாம் தமிழ் நாட்டு எழுத்தாளர்களின் கதைகளையும் கவிதைகளையும் கட்டுரைகளையும் வரவழைத்தே இங்கு வெளியான பத்திரிகைகள் பிரசுரித்து வந்தன. அந்த மாமுலைமாற்றி அமைத்து, இங்குள்ள எழுத்தாளர்களை ஊக்கமளித்து உருவாக்கி உயர்த்த அரும்பாடுபட்டார். எஸ்.டி.எஸ். அவர்கள். ஓர் எழுத்தாளர் பரம்பரையே திரு.சிவநாயகத்தால் உருவாக்கப்பட்டது. பல நூறு கவிஞர்களும் அவரால் வெளி உலகுக்கு அறிமுகப்படுத்தப் பட்டார்கள்.

எஸ்.டி.எஸ். திருகோணமலையில் பிறந்தார். ஆனால் மட்டக்களப்பிலேதான் அவர் தனது வாழ்நாளில் பெரும்பகுதியைச் செலவிட்டார். கூட்டுறவுத் துறை அதிகாரியாகப் பணிபுரியும் காலத்தில் மட்டக்களப்பு கோட்டமுனை- திருமலை வீதியில் பொலிஸ் நிலையத்துக்கு எதிர்ப்புறமாகவிருந்த சர்னலிஸ் டி சில்வா*கட்டிடத்தின் மாடியில் சித்ரா ஸ்டூடியோ என்ற பெயரில் ஒரு புகைப்படப் பிடிப்புக் கலையகத்தை ஆரம்பித்தார். அவருடைய பால்ய நண்பரும் தலைசிறந்த ஓவியருமான எம்.ஏ.ரஸாக் என்பவரையும் கந்தையா என்ற மற்றுமொரு நண்பரையும் இக்கலையகத்தில் இணைத்துக் கொண்டார்.

சித்ரா ஸ்டூடியோ புகைப்படப் பிடிப்பகமாக இருந்தது என்பதைப் பார்க்கிலும், அது ஒரு பகுத்தறிவுப் பாசறையாக இயங்கியது என்றுதான் கூறவேண்டும்.

இங்குதான் 1950ம் ஆண்டு பகுத்தறிவு இயக்கம் ஆரம்பிக்கப்பட்டது. தமிழ் நாட்டில் அக்காலகட்டத்தில் பரவிய திராவிடர் கழகத்தின் செயற்பாடுகளைப் பின்பற்றி இவ்வியக்கம் வளர்ந்தது. முன்னாள் மட்டக்களப்பு பாராளுமன்ற உறுப்பினரும் அமைச்சருமான திரு.செ.இராசதுரை அவர்களும் இதில் இணைந்து கொண்டார்.

தமிழ் நாட்டிலிருந்து, திராவிடர் கழகப் பிரசாரகர்களில் ஒருவரான டோர்பிடோ ஜனார்த்தனம் அவர்களை மட்டக்களப்புக்கு வரவழைத்து, மட்டக்களப்பு மைதானத்தில் ஒரு பொதுக் கூட்டத்தை பகுத்தறிவு இயக்கம் நடத்தியது. இந்து சமய நடைமுறைகளை வெகுவாக ஜனார்த்தனம் விமர்சித்தமையினால் கூட்டம் குழப்பத்தில் முடிந்தது. இக்கூட்டத்துக்கு எஸ்.டி.எஸ். அவர்களே தலைமை தாங்கினார்கள்.

### உதயனின் உதயம்

சித்ரா கலைக்கூடத்திலிருந்த வண்ணமே 'உதயன்' என்ற மாத சஞ்சிகையை எஸ்.டி.எஸ். நடத்தினார். இக்காலத்தில் டாக்டர் என்.எம்.பெரேரா மட்டக்களப்புக்கு வந்து பொதுக் கூட்டங்களில் பேசினார். இப்பேச்சுக்களை விமர்சித்து திரு.சிவநாயகம் தினகரனில் ஒரு கட்டுரை வரைந்தார். அவருடைய எழுத்துநடை தினகரன் நிர்வாகத்துக்குப் பிடிக்கவே, அவரை உடனடியாகக் கொழும்புக்கு அழைத்து, அதன் துணை ஆசிரியராக நியமித்தனர்.

தினகரனில் எஸ்.டி.எஸ். அவர்கள் சுதந்திரமாக இயங்க முடியவில்லை, அப்போது தந்தை செல்வா அவர்களும் வேறு சிலரும் சேர்ந்து சுதந்திரன் பத்திரிகையைத் தொடக்கியிருந்தனர். ஆனால் வாசகர்களிடம் சுதந்திரன் செல்வாக்குப் பெறமுடியவில்லை. எஸ்.டி.எஸ். அவர்களை அழைத்து தந்தை செல்வா சுதந்திரனை ஒப்படைத்தார். திரு. இராசதுரை அவர்களும் சுதந்திரன் ஆசிரியர் குழுவில் இருந்தார். எழுத்தாளர் ரி.ஜே.பாக்கிய நாயகம், மனுவேல் துரைராஜா போன்றோரும் அங்கு பணிபுரிந்தனர். திரு. துரைசாமி, அ.ந.கந்தசாமி, பல்கலை வேந்தன் சில்லையூர் செல்வராஜன், பிரேம்ஜி ஞானசுந்தரம், கே.கே.இரத்தினசிங்கம் ஆகியோரும் சுதந்திரன் மூலம் வளர்ந்தவர்கள்தான்.

பல புதிய இளம் எழுத்தாளர்களை அரவணைத்து அறிவுபுகட்டி வளர்த்ததில் எஸ்.டி.எஸ். ஏனைய முன்னோடி எழுத்தாளர்களில் தலைசிறந்து விளங்கினார். புதுப்புது சிறுகதை எழுத்தாளர்களும் பல புதிய கவிஞர்களும் திரு.சிவநாயகம் அவர்களால் சுதந்திரன் மூலம் வளர்ந்தனர்.

அரசியல் காரணங்களுக்காக சுதந்திரனுக்கு இரு தடவைகள் அரசினால் வாய்ப்பூட்டுபோடப்பட்டது. இதனைத் தொடர்ந்து சுதந்திரன் நிர்வாகத்துக்கும் திரு.சிவநாயகத்துக்கும் ஏற்பட்ட கருத்து வேற்றுமைகளினால் அவர் சுதந்திரனை விட்டு வெளியேறினார்.

### ஊர்காவற்றுறை நவரத்தினம்

ஊர்காவற்றுறை பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த திரு.வி.நவரத்தினம் அவர்களும் எஸ்.டி.எஸ். சும் சிறந்த நண்பர்கள். தமிழரசுக்கட்சியின் முக்கியமான போராட்டங்களில் இருவரும் பின்னணியிலிருந்து வடிவமைத்துக் கொடுத்தனர். அதே காலத்தில் தமிழரசுக்கட்சியின் மூளை என்று இருவரும் கருதப்பட்டார்கள். 1961ம் ஆண்டு இடம் பெற்ற சத்தியாக்கிரக மறியல் போராட்டத்தின் ஓரம்சமாக தபால் முத்திரை வெளியிடப்பட்டமைக்கும் இவ்விருவருமே காரணகர்த்தாக்களாகவிருந்தனர்.

திரு.சிவநாயகம் சுதந்திரனை விட்டு வெளியேறியதைத் தொடர்ந்து திரு.நவரத்தினமும் கட்சியிலிருந்து வெளியேறினார்.

சுதந்திரனை விட்டு விலகிய பின்னர் 'வீரகேசரி' தினசரியில் சில காலம் பணி புரிந்தார். அதன் பின்னர் மெய்கண்டான் நிறுவனத்தினரால் வெளியிடப்பட்ட 'தமிழின்பம்' மாத இலக்கிய சஞ்சிகையின் ஆசிரியராகச் செயலாற்றினார்.

இந்த வேளையில் தான் எம்.டி.குணசேன நிறுவனத்தினர் ஒரு பத்திரிகை நிறு வனத்தினைத் தோற்றுவித்தனர். 'தவச' (சிங்களம்), 'சண்' (ஆங்கிலம்), ஆகிய ஏடுகளுடன் 'ராதா' என்ற தமிழ் வார ஏட்டினையும் தொடங்கினர். 'தினபதி' என்ற தினசரியையும் 'சிந்தாமணி' என்ற வார ஏட்டினையும் வெளியிடும் பொறுப்பினை திரு.சிவநாயகத்திடம் ஒப்படைத்தனர். அத்துடன் அந்நிறு வனத்தின் பங்குதாரர்களில் ஒருவராக வும் சிவநாயகம் அவர்களை பின்னர் இணைத்துக் கொண்டனர். வார வெளியீடான 'சிந்தாமணி'க்கு திரு.இராஜா அரியரத்தினம் என்ற பழம் பெரும் எழுத்தாளரை எஸ்.டி.எஸ். அவர்கள் ஆசிரியராக்கினார். எழுத்துலகில் தனது இணை பிரியாத் தோழரான கே.கே.இரத்தினசிங்கம் அவர்களையும் எஸ்.டி.எஸ். தன்னுடன் இணைத்துக் கொண்டார்.

தினபதியும், சிந்தாமணியும் தமிழ் பேசும் மக்கள் மத்தியில் உன்னதமான வரவேற்பினைப் பெற்றன. சுதந்திரனிலும் வீரகேசரியிலும் புதிய புதிய எழுத்தாளர்களை ஊக்கம் கொடுத்து வளர்த்ததைப் போன்றே இப்பத்திரிகைகளிலும் சிறந்த எழுத்தாளார்கள் வளர களம் அமைத்துக் கொடுத்தார்.

இப்பத்திரிகைகளை வெளியிடும் நிறுவன உரிமையாளர்களின் அஜாக்கிரதையால், பத்திரிகைகள் வெளிவருவது நின்றுவிட்டது.

எஸ்.டி.எஸ். அவர்கள் பல புனை பெயர்களைப் பூண்டு எழுத்தோவியங்களைப் படைப்பார், மக்களுக்கு உணர்ச்சியூட்டும் ஆக்கங்களை 'தியாகி' என்ற பெயர் தாங்கிப் படைப்பார். அரசியல் தகவல்களை கிண்டலாக விமர்சிக்கும் போது 'கியாதி' என்ற பெயரைத் தாக்குவார். 'அபேதன்' என்ற பெயரிலும் எழுதுவார்.

இலங்கை சுதந்திரமடைந்ததன் பின்னர் அப்போது மகாதேசாதிபதியாக விருந்த சோல்பரி பிரபு மட்டக்களப்பு வந்திருந்தார். அவரின் வருகையை விமர்சித்து 'பாடும் மீன்' என்ற பெயரில் எழுதினார். சோல்பரி பிரபு மட்டக்களப்பு வாவியில் மீன்பாடுவதைக்கேட்க ஆசைப் பட்டார். மீன்கள் பாடவில்லை, ஆனால் அவர் 'ஒற்றையாட்சியே இந்நாட்டுக்கு ஏற்றது என்ற முடிவினை எடுத்தமையினால், தமிழ் பிரதேசத்திலுள்ள பாடும் மீன்களும் அவருக்காகப் பாட மறுத்து விட்டன' என்று நகைச்சுவை ததும்ப எழுதினார்.

(இன்னும் வரும்)

---

**தமிழகத்தின் பிரபல நடிகர் ஒருவர் உட்பட சில முக்கிய பிரமுகர்கள் பற்றி கவியரசு கண்ணதாசன் எழுதி பெரும் சர்ச்சை கிளப்பிய தொடர். 55**

# அரங்கம் அந்தரங்கம்

## கவியரசு கண்ணதாசன்



> **இதில் வரும் நிகழ்ச்சிகள் பல கற்பனையே: ஆனால் இதில் காணப்படும் பாத்திரங்கள் யாவும் உண்மையே!**
>
> **அவர்களது பெயர்களைக் கூடக் கொஞ்சம் தான் மாற்றிக் கொடுத்திருக்கிறேன். விவரம் தெரிந்தவர்கள் எந்தப் பாத்திரம், யார் என்பதைப் புரிந்து கொள்வார்கள்.**
>
> **இவர்களைப் பற்றிய ஏராளமான சம்பவங்கள் எனது குறிப்பில் இருக்கின்றன. ஆனால் அவையெல்லாம் ஒரே சம்பவத்தின் பல பதிப்புகளே!**
>
> **நான் எழுதியுள்ள நாவல்களில் உயிரோடு உலாவும் சிலரை முழுக்க முழுக்கப் பாத்திரங்களாக்கி எழுதிய நாவல் இதுதான்.**
>
> **இதில் நானும் ஒரு பாத்திரம். என்னோடு சம்பந்தப்படுத்தப் பட்டு வரும் கமலா, உண்மையில் வாழ்ந்த ஒருத்தி. ஆனால் இவளது உண்மைப் பெயர் வேறு.**
>
> ~கண்ணதாசன்~

பல குடும்பங்களை விபசாரக் குற்றத்திற்குக் கைது செய்த கமலுக்கு இது சரியான தண்டனைதான். என்றாலும், லலிதா விபசாரம் செய்ததாகச் செய்தி வருவது இரண்டு குடும்பத்தின் கவுரவத்திற்கும் பொருந்தாதே!

நான் நளாயினியிடம் விஷயத்தைச் சொன்ன போது அவள் உள்ளுக்குள்ளேயே குமுறி அழுதாள். ஒரு நல்ல குடும்பத்துப் பெண் அப்படித்தானே அழுவாள்.

திடீரென்று அவள் கையெடுத்துக் கும்பிட்டாள். "அவர் இதையெல்லாம் கவனிக்க மாட்டார். நீங்கள் தான் அண்ணா கவனிக்க வேண்டும்!" என்றாள்.

எனக்கு இப்போதெல்லாம் பயணம் செய்வதிலேயே ஒரு அலுப்பு. ஆனாலும் கூட நளாயினியின் வேண்டுகோளைத் தட்டமாட்டாமல் பம்பாய்க்குப் போனேன்.

சொந்த வேலைக்காகப் போனாலும் பிறரது வேலைக்காகப் போனாலும் இரண்டுக்குமே என் கைப்பணம்தான் போகும். இந்தத் தடவை அப்படி இல்லை! கற்பகம் டிக்கெட் எடுத்து அனுப்பி விட்டாள்.

பம்பாய் 'காரவல்' விமானத்தில் நான் ஏறியபோது, கண்ணனைத் தியானித்துக் கொண்டே ஏறினேன்.

விமானத்துக்கு உள்ளே நுழைந்த போதுதான் பார்த்தேன். அந்த விமானப் பணிப் பெண்களிலே ஒருத்தி, சந்திரபுஷ்கரணி.

அவளது பெயரே அழகான பெயர். தாய் கேரளாவைச் சேர்ந்தவள்; தந்தை தமிழர். எனது பரம ரசிகை.

பம்பாய் விவரங்கள் பலவற்றை அவளிடம் இருந்து தெரிந்து கொள்ள முடியும் என்று நான் நம்பினேன்.

விமானம் புறப்பட்டதும் அவள் எனக்குப் பரிமாற ஆரம்பித்தாள்.

இந்திய ஜனநாயகத்தின் படிக்கட்டுகள் மிகவும் விசாலமானவை. இன்ன கால்கள்தான் அதில் ஏற வேண்டும் என்னும் நியதி ஒன்றுமில்லை. பிரிட்டிஷ், அமெரிக்க சம்பிரதாயங்களைவிட நமது சம்பிரதாயங்கள் மிஞ்சி விட்டன.

விபரம் தெரியாதவர்களுக்குப் பரவலான ஒட்டுரிமை-

அதை விவஸ்தை இல்லாதவர்களே பெற்றுக் கொள்கிறார்கள்!

ஒட்டுப் போடுகிறவரை ஒருவரையோ, ஒரு கட்சியையோ தலையில் தூக்கிவைத்துக் கொண்டு ஆடுகிற மக்கள், அவர் பதவிக்கு வந்த சில நாட்களிலேயே அவரைப் பற்றி அவதூறு பேசத் தொடங்குகிறார்கள்.

ஆளுங்கட்சிக்கு எப்போதும் எதிரிகளாக இருப்பதுவே மாணவர்களின் மனோபாவம்.

பிற மக்களும் அப்படித்தான்.

எந்தவொரு அரசியல் கட்சியிலும் நாணயமானவன், நேர்மையானவன், ஒழுங்காக உழைத்தவன் பின்னுக்குத் தள்ளப்படுவதும், சாகசக்காரர்கள் எல்லா வசதிகளையும் அநுபவிப்பதும்தான் நடந்து கொண்டிருக்கின்றன.

யோக்கியனுக்கு நிச்சயமாக வாய்ப்பில்லை என்ற நிலையில் அயோக்கியர்கள் துணிந்து செயல்படுகிறார்கள்.

தேர்ந்தெடுக்கப்பட்டவர்களைக் கூர்ந்து கவனித்தால். நமது தேர்தல் முறையின் வேடிக்கை நமக்குப் புரியும்.

சந்திரசூரியன் எதிர்பார்த்துக் கொண்டிருந்த சட்ட மன்றத் தேர்தலுக்கான நாள் வந்துவிட்டது.

அவர் விட்டதெல்லாம் குரங்கு; பிடித்ததெல்லாம் பிள்ளையார் என்ற நிலைமைதான்.

தலைவர் தங்கசாமியும் உறுப்பினராகி விட்டார்.

விஜயா வேதாசலத்துக்கும் வாய்ப்புக் கிடைத்து விட்டது.

அவள் பட்ட பாட்டுக்கும் விரித்த படுக்கைக்கும் அது கூடக் கிடைக்க வில்லை என்றால் எப்படி?

சில தொகுதிகள் மட்டும் சந்திரசூரியனை கைவிட்டன.

"அந்தத் தொகுதிகளில் எல்லாம் ரசனை உள்ள பெண்கள் இல்லை" என்பது அவரது அபிப்பிராயம்.

"கணவனுக்கு மனைவி கட்டுப்படாத வரை, தான் ஜெயித்துக் கொண்டே இருப்பது உறுதி" என்பது அவரது நம்பிக்கை.

நாடெங்கும் ஒரே பரபரப்பு.

கலை உலகத்தின் மிகப் பழைய முகம், ஆட்சிபீடத்துக்குப் புது முகமாக வந்திருப்பது பற்றியே ஊரெங்கும் பேச்சு.

சந்திரசூரியனது வெற்றிக்கு அவரது கெட்டிக்காரத்தனமும், புகழும் அல்ல காரணம்.

எதிர்க்கட்சிகளின் ஏமாளித்தனமும் மிக முக்கிய காரணம்!

சந்திரசூரியனின் கட்சிதான் ஜெயிக்கப் போகிறது என்று பரவலாகப் பேசப்பட்ட போதே மற்றவர்கள் உஷாராக மறுத்தார்கள்.

போன தேர்தலைக் கணக்கு வைத்து, இந்தத் தேர்தலில் கூடிக் கொள்ளத் தவறினார்கள். அன்றியும், சில கட்சிகளின் தோற்றம் உள்நாட்டுக் கட்சிகளைப் போல் இல்லை. ஆயிரம் காரணங்களை அளந்து கொட்டி என்ன? சந்திரசூரியன் ஜெயித்து விட்டார்!

அவர் பிறந்தபோது தாலாட்டுப் பாடிய அவருடைய தாயார், "பட்டம் பெறுவாய்! பதவிக்கு நீ வருவாய்" என்று பாடியதில்லை. ஆரம்பத்தில் அந்தத் திட்டமும் அவருக்கில்லை.

சந்தர்ப்பங்கள் அவரது கழுத்தைப் பிடித்து இழுத்துக் கொண்டு போயின.

(அந்தரங்கம் வரும்)

# காதலுக்காக காத்திருக்கிறாள்!

'ட்ரிங்... ட்ரிங்... ட்ரிங்...' தபால்காரனின் சைக்கிள் மணிச் சத்தம் கேட்டது. வாசலுக்கு ஓடி வந்த மோனிக்கா தபால்காரன் தந்த கடிதத்தை வாங்கினான். அதே அழகான கையெழுத்து. அழகான செம்மஞ்சள் நிற கடித உறை. இந்தக் கடிதம் இம்மாதம்.முதலாம் திகதியிலிருந்து வரத்தொடங்கிய கடிதங்களில் பன்னிரண்டாவது கடிதமாகும். பெயரை எழுதாமல், ஊரை எழுதாமல் அவளை ஆணித்தரமாக காதலிப்பதாக யாரோ ஒருவன் எழுதிக் கொண்டிருக்கும் கடிதம்.

முதல் கடிதம் வந்தபோது, 'யாரோ ஒரு பைத்தியக்காரன் எழுதியிருக்கிறான்' என எண்ணிக்கொண்டு பேசாமல் இருந்துவிட்டாள். இரண்டு, மூன்று என தொடர்ச்சியாக அன்புச் சொட்டச் சொட்ட பத்துக் கடிதத்திற்கு மேல் வந்தபோது, மோனிக்காவிற்கு யார் இந்த அநாமதேயக் காதலன் என்பதை கண்டு பிடிக்க வேண்டும் என்றிருந்தது. யார் இவன்? எதற்காக இப்படி செய்கிறான்? உண்மையிலேயே என்னைக்காதலிப்பதாக இருந்தால் நேரில் கேட்கலாம். அல்லது கடிதம் மூலம் ஊர், பேர்தனையாவது எழுதி கடிதமாவது போடச் சொல்லலாம். இப்படி எதுவும் செய்யாமல் எப்படி ஏன் இந்த கடித லீலை செய்கிறான்? என்றவாறே கடிதத்தோடு வீட்டினுள் நுழைந்தாள்

**தபால்காரன் தனக்கும் காதல் கடிதம் கொடுத்துக் கொள்ளக் கூடாதா?**

பதினெட்டு வயது மோனிக்கா.

சுமாரான அழகு. சாதாரண தரம் வரை படிப்பு. அம்மா அப்பாவிற்கு ஒரே பெண்பிள்ளை.

அப்பா அரசாங்க வங்கியொன்றின் பியூன். அம்மாவோடு வீட்டில்தான் இருக்கிறாள். இதுவரை காதல் கீதல் என்றும் எதிலும் மாட்டுப்படாதவள். ஒருமுறை சகமாணவன் ஒருவன் கண்ணடித்ததற்கே, செருப்பைக் கழற்றிய வீராங்கனை. இப்படிப் பட்டவளுக்கு இன்றுவரை பன்னிரண்டு கடிதங்கள். யாராக இருக்கும் என்ற பதில் கிடைக்காத கேள்வியோடே அந்த பன்னிரண்டாவது கடிதத்தைப் பிரித்தாள்.

*என் சுவாசக்காற்றே...! என் இதயத்தின் நான்கு அறைகளிலேயும் நீயே இருக்கின்றாய் என்பதனை எனது கடிதங்கள் உனக்குச் சொல்லியிருக்கின்றன. என்றாலும் நீ ஏன் இன்னும் முகம் காட்டாமல் இருக்கின்றாய்? என்று நீ கேட்கும் கேள்வி மட்டும் பிழையானது. ஏனெனில் நான் உன்னைக் காணும் போதெல்லாம்என்னை தினசரி நீயும் காண்கிறாய். ஆனால் என்னை தெரிந்தும் என்காதலின் இதயத்தை கண்டு பிடிக்காமல் நீதான் இருக்கின்றாய். எனக்காக நீ காத்துக் கிடக்கிறாய். வந்ததும் மகிழ்ச்சி அடைகிறாய். அப்படியிருந்தும் என்னைக் காணாமல் இருக்கின்றாய். அன்பே! உன் சம்மதத்திற்கான சாத்தியக் கூறுகள் உன்னில் தெரிகின்றதால் நான் மேலும் தொடர்கின்றேன். உன் பார்வைக்கு தினம் ஊர் சுற்றித் திரிபவனாகத் தெரிந்தாலும் நான் அரசாங்கத் தொழில் செய்கிறேன். அன்பே! அன்பே என் காதல் புனிதம் என்று நீ அறிந்தால், நீ கீழே இருக்கும் விலாசத்திற்கு கடிதம் போடு. கட்டாயம் எனக்குக் கிடைக்கும்.*

*இப்படிக்கு,*
*காதலன்*
*காதலகம்,*
*காதல் தெரு,*
*காதலூர்.*



கட்டாரிலிருந்து மெய்யன் நட்ராஜ்

இதை வாசித்து முடித்த மோனிக்காவிற்குப் பைத்தியமே பிடித்து விடும் போலிருந்தது. என்றாலும் இதில் ஏதோ விசயம் இருப்பது போல் அவளின் இதயம் சொன்னது. போனால் போகட்டும் என்று ஓர் அஞ்சல் அட்டையில் இந்த விலாசத்தை எழுதி 'சம்மதம்' என்பதையும் எழுதி போஸ்ட் செய்தாள். என்ன ஆச்சரியம் அடுத்த இரண்டாவது நாளே அவனிடம் இருந்து 'சம்மதத்திற்கு சந்தோசம்' என்று பதில் வந்துவிட்டது. எப்படி இந்த அஞ்சலட்டை அவனுக்குக் கிடைத்திருக்கும்? இங்கே அருகில்தான் யாரோவென்று அவள் வீடிருக்கும் தெருவில் உள்ளவர்கள் பலரை சந்தேகித்தாள். ஆனால் அவள் சந்தேகித்த மட்டில் அவளை காதலிக்கும் அளவிற்கு யாரும் இருப்பதாகவும் தெரியவில்லை. இது யாராக இருக்கும் என்று இரவு பகலாக அவஸ்தைப் பட்டுக் கொண்டிருந்தாள்.

மறுநாள் காலை எட்டு மணித்தொட்டே தபால்காரனுக்காகத் காத்துக் கொண்டிருந்தாள். வீதியில் போகும் சாதாரண சைக்கிள் மணியோசைக்கும் ஓடி வந்து வீதியை எட்டிப்பார்த்தாள். இன்று அவனுடைய கடிதம் வரும் என்ற நம்பிக்கை அவளுள் உறுதியாக இருந்தது. அவள் எதிர்பார்த்தது போலவே பத்து மணியளவில் வந்த வழமையான அந்த தபால்காரன் தந்துவிட்டுப் போன கடிதத்தை அவசர அவசரமாகப் பிரித்தாள்.

*அன்பே மோனிக்கா! இத்தனை நாட்களாக நீயே என்னைக் கண்டு பிடிப்பாய் என்று எதிர்பார்த்தேன் ஆனால் நீ கண்டு பிடிக்க முடியாமல் தடுமாறுவதை என்னால் உணர முடிகிறது. அதனால் நானே வந்துவிடுகிறேன். ஏனெனில் உன். வருத்தமான முகத்தைக் காண எனக்கும் வருத்தமாக இருக்கிறது! உன்மீது நான் கொண்ட அன்பினால் என்கையாலேயே எழுதி, நானே கொண்டு வந்து உன்கையில் எல்லாக் கடிதங்களையும் கொடுத்துவிட்டுப் போகிறேன். அப்படியிருந்து என்னை நீ கண்டு கொள்ளவில்லையே! ஏன் தபால்காரன் தனக்கும் காதல் கடிதம் கொடுத்துக் கொள்ளக் கூடாதா?*

என்பது மட்டும் வாசித்தவள் வீட்டிலுள்ளிருந்து மறுபடியும் வாசலுக்கு ஓடி வந்தாள். அதற்குள் அவன் அடுத்தத் தெருவிற்குள் நுழைந்து விட்டான். அடுத்தநாள் காலையில் இருந்து வாசலிலேயே காத்துக் கிடந்தாள். தபால்காரனின் வருகைக்காக அது கடிதத்திற்காக அல்ல காதலுக்காக.

# நிலைமாறும் வாழ்க்கை

நள்ளிரவு கடிகார மணியொலி அடித்துக் கொண்டிருந்தது. ஆனாலும் நிமலனின் கண்கள் தூங்கவில்லை. அவனது நினைவுகளெல்லாம் தனது சிறிய குடும்பத்தைச் சுற்றியே மேய்ந்துகொண்டிருந்தன. நோயால் படுத்த படுக்கையிலிருக்கும் அப்பா, ஏ.எல்.பரீட்சை எழுதிவிட்டு வீட்டிலிருக்கும் தங்கை, தாயில்லாத தன் குடும்பத்தில் முழுப் பொறுப்பும் நிமலனைச் சூழ்ந்து கொண்டது.

"என்னடா நிமலா... நீ இன்னும் நித்திர கொள்ளல்லயா? என்ன யோசிக்கிறாயடா?" அவன் மாமா அரிக்கன் லாம்புடன் குடிசைக்குள் புகுந்து கொண்டே கேட்டார்.

அவனுடைய மாமாவின் தேநீர்க் கடையில் தான் நிமலன் வேலை செய்துகொண்டிருக்கிறான். அதனால் இரவில் மாமனாரின் வீட்டில் தான் தங்குவது வழக்கம். பத்தாம் வகுப்பு வரை பாடசாலைக்குப் போனவன், ஒரு நாள்கூட மற்ற மாணவர்களை பாடத்தில் முந்துவதற்கு விட்டதில்லை. ஆனாலும் விதி அவனை முந்திவிட்டது. யாழ் யுத்தத்தில் தனது தாயைப் பறிகொடுத்தான். அதன் தாக்கத்தால் கல்வியில் ஆர்வம் குன்றியது. 'மரத்தால் விழுந்தவனை மாடேறி மிதித்தது போல' அடுத்து தந்தையும் நோய் வாய்ப்பட்டு படுத்த படுக்கையானார். அதனால் படிப்பை முற்றாகக் கைவிட்டான்.



வேலை தேடி அலைந்தான். அப்பொழுது அவனது மாமனார் தன் கடையில் வேலைக்காக அவனைச் சேர்த்துக் கொண்டார். வேறு வழியாக உதவி செய்வதற்கு அவரால் முடியவில்லை ஏனென்றால் அவருக்கும் நான்கு பிள்ளைகள் இருக்கிறார்கள். பணக் கஷ்டம் அவரையும் குடி கொண்டிருந்தது.

அ.கோகுலதீபன்-கல்முனை.

"என்னப் போல நீயும் இடையில படிப்ப விடக் கூடாது... காச எண்ணி கவலப்படாம படிக்கணும்.... அதுக்காகத்தான் நான் வேலைக்குப் போறன்!" என்று தன் தங்கைக்கு அடிக்கடி கூறிக்கொள்வான் நிமலன். ஒன்றை இழந்து தான் மற்றொன்றைப் பெற வேண்டும் என்பது யுத்தத்தால் பாதிக்கப்பட்ட உயிர்களுக்குத் தான் தெரியும். அது நிமலனுக்கும் பொருந்தியிருந்தது.

"என்னடா நிமலா... நான் கேக்கிறன்... ஒண்ணும் பேசாம இருக்கிற.... ஏதாச்சும் உடம்பு சுகமில்லையா....?" அருகில் போய் அவனின் நெற்றியில் கை வைத்தார். மாமாவின் பரிசத்தால் தன் நினைவுகளிலிருந்து திடீரென மீண்டான் நிமலன்.

"உடம்புக்கு ஒண்ணுமில்ல மாமா.... நாளைக்கு தங்கச்சியின்ர ஏ.எல் ரிசல்ட்டு வருதல்லோ....? அத எண்ணித்தான் யோசனையாயிருக்கு..." அவன் பேச்சில் ஒரு எதிர்பார்ப்பு புரிந்தது.

"உன் தங்கச்சி நிச்சயமா டாக்டருக்கு எடுபடுவாள்.... எனக்கு நல்ல நம்பிக்கையிருக்கு... யோசிக்காம நீ படு!" அவனுக்குத் தெம்பூட்டிக் கொண்டு பாயைத் தரையில் விரித்தபடி அரிக்கன் லாம்பின் வெளிச்சத்தைக் குறைத்தார்.

நேரம் நகர்ந்தது. பிள்ளையார் கோவில் மணியோசை கேட்க ஆரம்பித்தது. அதிகாலை ஐந்து மணியாகிவிட்டது என்பது அதன் அறிகுறி. அரைத் தூக்கத்திலிருந்த நிமலன் ஓசை கேட்டு கண் விழித்து போர்வையை விலக்கிக் கொண்டு மெதுவாக எழுந்து முற்றத்தடிக்குப் போனான். வாளியில் இருந்த தண்ணீரால் கண்ணைக் கழுவிக் கொண்டு வேப்பங்குச்சியால் பல் துலக்க எண்ணி மரத்தடிக்குக் கீழ் போனவனை அருகிலிருந்த பற்றைக்குள் இருந்து வெளிப்பட்ட குண்டுகள் சரமாரியாகத் தாக்கியது! "ஐயோ.... அம்மா..." என்ற அலறலோடு கீழே விழுந்தான்.

வெடிச்சத்தத்தில் சட்டென்று எழுந்தோடிய அவன் மாமனார் நிமலனைத் தேடினார். இறுதியாக இரத்த வெள்ளத்தில் வேப்ப மரத்தடியில் சரிந்திருந்தான். "நிமலா உனக்கு என்னடா நடந்தது?" என்று கத்திக் கொண்டு அவனைத் தூக்கும் போது அவன் உயிர் அவனிடம் இருக்கவில்லை. நிமலனின் அடக்கத்திற்குரிய எல்லா ஏற்பாடுகளையும் செய்து விட்டு, வீட்டுக்குச் செய்தி சொல்ல விரைந்தார் அவன் மாமனார்.

இடையில் அவன் தங்கச்சி மூச்சு விட ஓடி வந்தாள் "மாமா.... மாமா..... நான் ஏ.எல். சோதினையில பாஸ் பண்ணிட்டன்.... அண்ணா எங்க மாமா...?" பூரிப்புடன் அவள் கேட்டாள். அவரால் ஒன்றும் பேச முடியவில்லை. அவர் உடல் தீபோல கொதித்தது. அவர் மௌனமானார். "அண்ணன் கடையில தானே... நான் போய்ப் பார்க்கிறன்...." கடைப்பக்கம் ஓடினாள். அவள் சந்தோசம் இன்னும் ஓரிரு நிமிடங்கள் தான் நிலைக்கப் போகின்றது என்பதை அவள் அறிந்திருக்க வாய்ப்பில்லை. அவர்கள் குடும்பத்தில் மீண்டும் ஒன்றை இழந்தார்கள்.... ஒன்றைப் பெற்ற போது....! ■

# 'யாழ்ப்பாணத்தான்!'

வேலைவிட்டு என் இருப்பிடம் நோக்கிவந்த எனக்கு திக் கென்றது. நான் வசிப்பது தலைநகரில் சனநெருக்கமான 'தோட்டம்' என்றழைக்கப் படும் ஓர் ஒழுங்கையில் அமைந்திருந்த சிறு வீட்டில். சுமார் இருபத்திஐந்து வருடங்களாக இங்கு வசித்துவருகின்றேன். ஆயினும் என்பிறப்பிடம் யாழ்ப்பாணம்.

அங்கு வசிக்கும் இரு பெரும்பான்மை இனப் பெண்களுக்கிடையில்-இல்லை அவர்கள் குடும்பங்களுக்கிடையில் கடுமையான வாய்த்தர்க்கங்களும், சண்டையுமாக நிறைந்திருந்தது நான் வசிக்கும் தோட்டம். சண்டையிடுபவர்களை விட அதனை வேடிக்கைப் பார்த்து இன்புறும் பலர்தான் அங்கு அதிகம். தூய்மையான மொழியில் (படுமோசமாக) இருபாலாரும் மிகத்தாராளமாகவே மோதிக் கொண்டனர்.

அங்க வசிக்கும் சிறு பிள்ளைகூட அவ்வார்த்தைகளை மிக அழகாகவும், ஆழமாகவும் மனனம் செய்துகொள்ளும். இது இன்று நேற்று நடப்பவையல்ல, என் சிறுபராயம் தொட்டு நான் தினசரி அவதானிக்கும் ஒரு சாதாரண விடயம்.

என் இருபத்துஐந்து வருடகால வாழ்க்கையில் சுமார் பதினைந்து வருடங்கள் பல இக்கட்டான, அசாதாரணமான சம்பவங்களுக்கு நான் முகம்கொடுத்துள்ளேன். உண்மையில் சொல்லப்போனால் எனக்குள்ளேயே இனம்புரியாத விரக்தி.

மனதினுள் நொந்துகொண்டவனாய் தோட்டத்தின் வாயிலில் காத்திருக்கின்றேன். ஓர் அரைமணி நேரத்திற்குப் பின்னர். அச்சண்டைகள் சற்றுத் தளர்வடைகின்றன. நானும் சற்று விரைவாக தோட்டத்திற்குள் விரைகின்றேன் என் இருப்பிடம் நோக்கி. இடைநடுவில் அங்கு சண்டையிட்டவர்களின் பார்வை என்புறம் திரும்பின. நானோ அவற்றைக் காணாதவனாய் விரைந்து கொண்டிருந்தேன்.

"யாப்பானையா!" (யாழ்ப்பாணத்தான்) மிகுதிவார்த்தைகள் சொல்வதற்கே என் வாய் கூசுகின்றது. என்மேல் சாடத்தொடங்கினர். அவ்வார்த்தைகள் என்னைத் திணறச் செய்தன. மீண்டும் மீண்டும் அவ்வார்த்தைகளைக் கேட்டுக் கேட்டு மனம் மரத்துப் போயிற்று. இருப்பினும் உதிரம் கொதித்தது. நரம்புகள் புடைத்தெழுந்தன, வெகு சிரமப்பட்டு அடக்கிக்கொண்டேன். என்னும் விரைவாக என் வீட்டினையடைகின்றேன். என் ஆத்திரம் இன்னும் பலமடங்குகள் அதிகரித்தது. காரணம் என் வீட்டு ஜன்னல் கண்ணாடிகள் சிதறிக்கிடந்தன. வீட்டினுள்ளும் ஏராளமான கற்கள். இதுகூட எண்ணிலடங்காத முறைகள்தான்.

சண்டையிட்டவர்கள் எவர்களோ, ஆனால் பாதிப்போ தமிழனுக்கு. மிகவும்



சிரமத்தின் மத்தியில் என்னை நானே கட்டுப் படுத்திக்கொண்டு வீட்டினுள் நுழைகின்றேன். என் தலைவெடித்துவிடும் போலிருந்தது. காரணம் இரண்டுதினங்களுக்கு முன்னர்தான் இராணுவச் சுற்றிவளைப்புச் சோதனையில் நான் உட்பட அங்கு வசிக்கும் அனைத்துத் தமிழர்களும் சொல்லொணாத் துயர்களை அனுபவித்து வந்தோம். இன்று இப்படி.

இத்தனைக்கும்நான் ஒரு மாதம்கூட யாழ்ப்பாணத்தில் இருந்திருப்பேனா என்பது சந்தேகம்தான். நான் பிறந்தது மட்டுமே அங்கே தவிர, வளர்ந்தது அனைத்தும் கொழும்பில்தான். அதுவும் இந்தத் தோட்டத்தில்தான்.

'யாழ்ப்பாணத்தான்...' இவ்வார்த்தைதான் எவ்வளவு என்னை நோகடித்துள்ளது? எனக்கே அவ்வாறாயின், அங்கு வாழ்ந்து, வளர்ந்து உயிருக்கே தஞ்சமடையும் வடபகுதி மக்களுக்கு எவ்வாறு இருக்கும்? முழுக்க முழுக்க கொழும்பில் வளர்ந்து, மும்மொழிகளையும் மிகச் சரளமாக பேசக்கூடிய எனக்கே இந்நிலையாயின்?

பிரச்சனைகளால் பாதிக்கப்பட்டு, பட்டினி கிடந்து, வீடின்றி, உடுக்க உடையின்றி சொல்லொணாத் துயர்களை அனுபவித்து, உயிர்காத்துக் கொள்வதற்காக கொழும்பில் தஞ்சமென்று ஒதுங்கும் வடபகுதி தமிழர்களின் நிலை...?! சொல்லவே தேவையில்லை. அவர்கள் அங்கு அடைந்த துன்பங்களைவிட, தஞ்சமென்று ஒதுங்கிய இங்கு திணிக்கப்படும் கொடுமைகள்தான் அதிகம்.

ஏன் இன்று இலங்கையில் முன்னிலையில் உள்ள தொழிலதிபரும் தமிழன்தான், முக்கிய பதவிகளில் இருக்கும் பெரும்பான்மையான மூலைசாளிகளும் தமிழர்கள்தான். அதிலும்

எம்.ரமேஷ்

யாழ்ப்பாணத் தமிழர்தான் அதிகம். இவ்வளவுமெதற்கு இன்னும் வெளிப்படையாகச் சொல்லப்போனால் உலகத்தின் கவனத்தையே தன்பால் கவர்ந்து, உலகத்தையே வியக்கவைத்ததும் இலங்கைத் தமிழன்தான்.

உண்மையில் தமிழன் என்று சொல்வதில் நாம்தான் பெருமைப் பட்டுக்கொள்ள வேண்டுமேதவிர, வேதனைப்படுவதில் அர்த்தமில்லை.

என் மனதிற்குள் இன்னும் ஆயிரமாயிரம் எண்ணங்கள் துளிர்த்தெழுந்தன. சடுதியாக என் வீட்டுக்கதவு தட்டப்படும் சத்தம் என் சிந்தனையை திசைதிப்ப, கதவைத்திறக்கின்றேன். அங்கு காக்கிச் சட்டையணிந்த சில பொலிசார்கள்.

சகோதர மொழியில் அவர்களுக்கு பதில்கொடுக்கின்றேன். ஆயினும் அவற்றைக் கேட்குமளவிற்கு பொறுமை அவர்களுக்கில்லை. கடுமையான குரலில் என் அடையாள அட்டை கேட்கப்படுகின்றது. பார்த்த மறுவினாடியில்.

"யாப்பானையோ...... யமங் யமங் ஜீப்பெக்கட்ட.....!" (யாழ்ப்பாணத்தான்.... நட நட ஜீப்புக்கு...)"

அவ்வார்த்தைகள் மீண்டும் என்னை நோகடிக்கின்றன. பொறுமையிழந்தவனாய் மிகத்துணிவாக, என்னைக் கொண்டுசெல்வதற்கான காரணத்தை வினாவுகின்றேன். மறுநாழிகையில் அப்பொலிசாரால் நான் கடுமையாகத் தாக்கப்படுகின்றேன். என்னுள் தமிழன் என்ற ஆணவம் ஆழமாக, வலுக்கட்டாயமாக பதியப்படுகின்றது. இல்லை இல்லை பதிவிக்கப்படுகின்றது. நானும் முழுமையாக இனவாதத்திற்கு அடிமையாகின்றேன்.

'சிறுகாரணம் கூட இல்லாமல், தெரு நாய்களைப்போல் நினைத்த இடத்தில், நினைத்த நேரத்தில் தமிழனைக் கைதுசெய்து துன்பங்களைக் கொடுக்கும் இவர்களை சமாதானத்தைப்பற்றிக் கதைக்கின்றார்கள். பயங்கரவாதிகளை இவர்கள்தான் உருவாக்கின்றார்கள் என்பதை ஏன் இவர்கள் நினைக்கத் தவறுகின்றனர்'

**இனவாதமும், பயங்கரவாதமும் தானாகத் தோன்றுவதில்லை, தோற்றுவிக்கப்படுகின்றன என்பதே உண்மை..............**

நினைத்தவனாய் அசுரவேகத்தில் கத்துகின்றேன் "ஆமாம் நான் யாழ்ப்பாணத்தான் தான்..."

இப்போது என்னுள் கோபமுமில்லை, வெறுப்புமில்லை. மாறாக 'தமிழன்' என்ற பெருமைதான் இருந்தது. இது நானாக நினைத்தது அல்ல, மற்றவர்களால் நினைவிக்கப்பட்டது.

இனவாதமும், பயங்கரவாதமும் தானாக தோன்றுவதில்லை, தோற்றுவிக்கப்படுகின்றன என்பதே உண்மை. ■

ஆரண்யன் பிடிக்குள் கண்களை மூடிக் கிடந்தாள் காவ்யா. அந்த மது ஏந்தும் மலரை அவன் ஏந்திவிருந்தான். இரு உடல்களும் ஒன்றையொன்று பருகின.

அவளுடலின் போதையில் அவனும், அவனுடலின் போதையில் அவளும் மயக்கமுற்றுக் கிடந்தனர்.

“கவ்யா” என்று அழைத்தான்.

“ம்” என்றாள்.

அந்த ஒற்றை எழுத்தின் ஓசையில் பிரபஞ்சத்தின் இனிமையை எல்லாம் பிழிந்து கொட்டினாள்.

“இறந்தாலும் உயிர் போவதற்கு இடம் ஒன்றிருக்கிறதென்றால், இந்தக்கணமே இறந்துவிட வேண்டும் காவ்யா!”

பல்லொளி அதன் ஊடரும்பிய தேன்மொழி”

“போதும் போதும். பக்கத்தில் இருந்தால் பாடிப் புகழ்வாய். உனக்காக ஒருத்தி காத்துக் கொண்டிருப்பாளே என்று நேரத்துக்கு வந்து சேரமாட்டாய்!”

“பத்து நிமிஷம் தாமதமாய் வந்ததுக்கு என்மேல் பாய்ந்து எகிறாதே!”

“பத்து நிமிஷம் தனியாக ஒரு பெண் இருக்கிறது என்ன கொடுமை என்று உனக்குத் தெரியுமா? பார்க்கிறவனெல்லாம் பல்லிளித்துப் பல்லிளித்துப் போய்க்கொண்டிருக்கிறான்...”

“நீயும் பதிலுக்கு ஒரு இளிப்பு

# உனக்குத் தெரியுமா என் அவஸ்தை?

அவனது பேச்சின் சப்தத்தை மட்டுமே ஒரு ரீங்காரமாய் காதில் வாங்கிய காவ்யா, சிணுங்கியபடி அசைந்தாள்.

“உயிர் இப்போது ஏதோ இனிய பதார்த்தம் ஒன்றினுள் மிதந்து கொண்டிருக்கிறது. இப்போதே அது பிரிந்து சென்றால் நரகமாயினும் அங்கே அது மகிழ்ச்சியாக இருந்துகொள்ளும்....”

“ஏய்!” என்று கண்களைத் திறவாத நிலையிலேயே சிணுங்கினாள், ஆரண்யன் ஏதோ இறப்பைப் பற்றிப் பேசுகிறான் என்று புரிந்து கொண்டு. “என்னையும் அழைத்துப் போ!” என்று கிசு கிசுத்தாள். “மலைமிடைப் பிறவா மணியே! அலைமிடைப் பிறவா அமிழ்தே! யாழிடைப் பிறவா இசையே... நீயின்றி நான் போகுமிடம் நரகம் ஒன்றுதான். வா என் அன்பே! தாரணியில் வானுலகில் சார்ந்திருக்கும் இன்பமெல்லாம் ஒருருவமாய்ச் சமைந்தாய்.... இறுக்கிக் கொள் என்னை! இடையே காற்றுக்கும் இடம் வேண்டாம்....”

“உடல்கள் பிரிந்தாலும் எந்தன் உயிர் துடிக்கும் என் மேனியில் தென்றலும் தீண்ட இடங்கொடாமல் என்னை உன்னால் போர்த்திக் கொள் ஆருயிரே..” என்று அவன் காதுக்குள்சங்கீதம் இசைத்தாள் காவ்யா!

“காவ்யா”

“ம்”

“இதழ்களைத் திறவாமலே இசைக்கும் குயில் நீதான் கண்ணே.... இருந்தாலும் வாய்திறந்து பேச, தேன் சுரக்கும் இதழ்களின் உள்ளே இருந்து இனிமையில் நனைந்து வரும் பாக்கியத்தை நம் தமிழ் பெறட்டும்....”

“ம்.... போதும்... புகழ ஆரம்பித்தால் நீ புலவர்களையும் மிஞ்சி விடுகிறாய்....”

“கள்ளரும்பிய வாயிதழ் மழைக் கார் அரும்பிய பூங்குழல் உள்ளரும்பிய

இளித்தால் இந்தப் பவள முகத்தின் ஒளிவீச்சில் சுருண்டு பந்தாகிவிடுப்பார்கள்....”

“போடா, உனக்கு பகிடியாக இருக்கிறது. ஏன் அவ்வளவு நேரம் தாமதமாய் வந்தாய் சொல்லு?”

“ஒரு பத்து நிமிஷம் முன்பின்னாகிவிடாதா என் பவள மல்லிகையே... இதுக்குப் போய் இத்தனை நேரம் கழித்து எகிறுகிறாயே....”

“பத்து நிமிஷம் என்றால் சும்மாவா? போகிறவர் வருகிறவர் எல்லாம் பார்வையாலேயே எத்தனை கேள்விகள், நான் பட்ட அவமானம் உனக்கெப்படித் தெரியும்?”

“சரி சரி மன்னித்து விடு. நான் தான் வந்துவிட்டேனே!”

“க்கும் ..... உனக்கு நான் என்ன கஷ்டப்பட்டாலும் பரவாயில்லை. உன் வேலைகளையெல்லாம் முடித்த பிறகுதான் என் ஞாபகம் வரும் உனக்கு.....”

“அப்படியில்லையடா, எப்பவும் உன் ஞாபகம்தான் எனக்கு!”

“அப்போ.... ஏன் நேரத்துக்கு வரவில்லை?”

“நீயும்தான் எத்தனை தடவை நேரத்துக்கு வராமல் ஏமாற்றியிருக்கிறாய்.... அதுமாதிரியான கஷ்டம் தான் எனக்கும்... சரி அதை விடேன்...”

“நான் எப்போ ஏமாற்றினேன் உன்னை..... சொல்லு சொல்லு....”

“சரி அதை விடு!”

“இல்லை.... நான் எப்போ ஏமாற்றினேன் சொல்லு!”

“அன்று இரண்டு மணிநேரம் உனக்காகக் காத்திருக்கவில்லையா? வீட்டில் அம்மாவைச் சமாளித்துவிட்டு வரப் பெரும்பாடாகிவிட்டது என்றாயே....”

## இலக்கிய நயம்



“ஓ... அதைச் சொல்கிறாயா? நான் எவ்வளவு கஷ்டங்களுக்கு மத்தியில் உன்னைப் பார்க்க வருகிறேன் என்றுனக்குத் தெரியுந்தானே? அன்று நீ இரண்டு மணி நேரம் என்ன, இரண்டு வாரங்களானாலும் இதே இடத்தில் உனக்காய்க் காத்திருந்திருப்பேன் என்றுதானே சொன்னாய்......”

“ஆமாம் சொன்னேன்..... அதுபோல் நீயும் இருக்கலாம் தானே?”

காவ்யாவுக்குக் கண்களில் நீர் துளிர்த்தது.

“நீ ஆண்பிள்ளை எவ்வளவு நேரமானாலும் தனித்திருக்க முடியும். நான் எப்படி?” பேசமுடியாமல் தலையைக் குனிந்துகொண்டாள்.

“சரி சரி சும்மா ஒரு பேச்சுக்குச் சொன்னேன். மற்றபடி, நீ காத்திருப்பாய் என்று தெரியும். வீட்டில் இருந்து புறப்பட நேரமாகிவிட்டது....”

“நான் தனியே இருப்பேன் என்ற எண்ணம் உனக்கு இருந்திருந்தால், என்ன வேலையாக இருந்தாலும் முடித்து விட்டு நேரத்துக்கே வந்து எனக்காகக் காத்து இருந்திருக்கலாம் தானே?”

“உனக்குப் பத்து நிமிஷம் காத்திருக்க முடியாது. நான் அரைமணி ஒரு மணி முன்னதாகவே வந்து உனக்காக தவமிருக்க வேண்டும், அப்படித்தானே?”

“ஏன் அதனால் உங்கள் ஆண் கௌரவத்துக்கு ஏதும் குறைச்சல் வந்துவிடுமா?”

“போதும் காவ்யா! கௌரவம், அவமானம் என்று பெரிய வார்த்தைகள் பேசாதே. நான் மணித்தியாலக் கணக்கில் உனக்காகக் காத்திருந்து அவஸ்தைப் பட்டிருக்கிறேன். நீயும் அந்த காத்திருப்பு நேரத்தின் கஷ்டங்களை உணர வேண்டாமா?”

“அப்படியானால்... என்னைக் கஷ்டப்படுத்துவதற்குத்தான் தாமதமாய் வந்தாயா?” அழ ஆரம்பித்தாள்.

“இல்லையடா..... சும்மா சொன்னேன்.... எதுக்கு இப்போ அழுகிறாய்?.... இங்கே பார்.....”

“ம்ஹூம்...” கிட்டே நெருங்கினவனைக் கையால் விலக்கினாள். “நான் தாமதமாய் வருவதற்குப் பழி வாங்கத்தான் என்னைக் காக்க வைத்திருக்கிறாய். என் கஷ்டங்கள் உனக்குப் புரியவில்லை. போட்டி போட்டுக்கொண்டு என்னை வதைக்கவும் தயங்காத நினைப்புத்தான் உனக்கு....”

தருவது

### முழடில்யன்

“காவ்யா நான் சொல்வதைக் கேள்....” என்று அருகே சென்றவனை உதறிவிட்டு வேகமாக ஓடினாள் காவ்யா.

**“உள்ளினேன் என்றேன் மற்றென்மறந்தீர்**
**-என்றென்னைப்**
**புல்லாள் புலத்தக் கனள்.”**

(குறள்: 1316)

## சிந்தியா பதில்கள்

**★ எதை எடுத்தாலும் முழுமனத்துடனும், திருப்தியுடனும் செய்யமுடியாமல் உள்ளது. இதை மாற்ற முடியுமா? முடியுமெனின் அறிவுரை?**

கௌரி, ?

எதையும் முழுமனத்துடன் உங்களால் செய்ய முடியவில்லை என்பது தெரிகிறது. உங்கள் முகவரியைக் கூட எழுதாமல் விட்டுத் தான் அதை உணர்த்த வேண்டுமென்றில்லை. அறிவுரை கேட்டிருக்கிறீர்கள். என்ன சொல்லலாம்.... சரி! உங்களுக்குப் பிடித்தமான வேலைகளை, புத்தகங்களை, விளையாட்டுக்களை, உணவு வகைகளைப் பட்டியலிடுங்கள். அவற்றைப் பெற்றுக் கொள்வதிலேயே உங்கள் கவனத்தைக் குவியுங்கள். விருப்பமில்லாதவற்றைச் செய்ய ஏற்படும் நிர்ப்பந்தங்களிலிருந்து விலகிவிடுங்கள். எதையும் ஈடுபாட்டோடு செய்வதில்தான் வெற்றி இருக்கிறது என்பதற்கு நெப்போலியன் நல்ல உதாரணம். எதிரியின் பீரங்கிக் குண்டுகள் அருகில் விழுந்து வெடிக்கிற போதும் சலனமேதுமின்றிச் சாப்பிட்டுக் கொண்டிருக்க முடியுமாம் அவனுக்கு. போர்க் களத்திலேயே குதிரையின் மீது அமர்ந்தபடி சில நிமிடநேரம் தூங்கிவிட்டு திடீரென்று விழித்துக் கொண்டு கட்டளைகள் பிறப்பிப்பானாம். சாப்பாடாயினும், தூக்கமாயினும் ஈடுபாட்டோடு முழுமையாக இறங்கி விட்டால் வேறெதனாலும் பாதிக்கப்படாத நெஞ்சுரம் வாய்த்துவிடும். ஜென் மதத்தைச் சார்ந்த துறவிகள் தேநீர் அருந்துவதைக் கூட பெரிய சடங்காகச் செய்வார்கள். எந்த ஒன்றையும் முழு ஈடுபாட்டோடு செய்கிற போதுதான் அதன் பலனும் முழுமையாகக் கிடைக்கும். உங்களுக்கு விருப்பமான காரியங்களைப் பட்டியலிட்டுத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுங்கள். அடுத்து வருகிற சத்தியகுமாரனின் கேள்வியையும் பாருங்கள்.

**★ சிந்தியா! பொறாமை உள்ளம் கொண்டவர்களைப் பற்றி சிறுகதை ஒன்று கூறுங்கள்?**

ப.சங்கீதா, கொழும்பு-13.

இதோ! ஓர் ஊரிலே பொறாமை உள்ளம் கொண்ட ஓர் அரசனும், பொறாமை உள்ளம் கொண்ட ஒரு ராணியும் இருந்தார்கள். அவர்களுக்கு மூன்று பிள்ளைகள் பிறந்தார்கள். மூவருக்கும் முறையே பொன்னன், சிறானி, மைதிலி என்று பெயரிட்டார்கள். “ஏன் அம்மா, அண்ணாவையும் தங்கச்சியையும் அவர்கள் பெயரின் முதலெழுத்துக்களைச் சொல்லிக் கூப்பிடுகிறீர்கள். என்னை மட்டும் நடு எழுத்தைச் சொல்லிக் கூப்பிடுகிறீர்களே?” என்று தாயிடம் ஒரு நாள் கேட்டாள் இரண்டாவது மகள் சிறானி. அதற்குத் தாய், “நாங்கள் பொறாமை உள்ளம் கொண்டவர்கள் மகளே...” என்றாள்.

சங்கீதா, நீங்கள் சிறுகதை என்று கேட்டிருப்பதால் இத்துடன் முடிக்கிறேன். அதன் முழுக் கதையும் 'பொன்னியின் செல்வன்' அளவுக்கு விரித்தெழுதக் கூடியது.

**★ முன்னோர் எல்லாம் மூடர்களா?**

எஸ்.பாக்கியநாதன், ஹற்றன்.

நம் பெற்றோர்களை முட்டாள்கள் என்றும், நாம் புத்திசாலிகள் என்றும் நினைக்கிறோம். சந்தேகமில்லை. நம்மைவிடப் புத்திக் கூர்மையான நம் பிள்ளைகளும் அப்படித்தான் நினைக்கப் போகிறார்கள்.

**★ ஹரிஹரன் பாடிய முதல் தமிழ்ப் பாடல் எது? எந்தத் திரைப் படத்தில்?**

எஸ்.சுரையா, மாவனல்லை.

“உயிரே உயிரே வந்து என்னோடு கலந்துவிடு....” படம்: பம்பாய்.

**★ நம்நாட்டுத் திரையரங்குகளில் உடனுக்குடன் புதிய படங்கள் வெளியாவதைப் பற்றி?**

கா.கோபி, திருகோணமலை.

கோபிக்கு என்ன கவலை? வீடியோக் கடை ஏதாவது வைத்திருக்கிறீர்களா?

**★ விதியின் விளையாட்டு யாரைப் பாதிக்கும்?**

என்.எல்.முஸம்மில், புதிய காத்தான்குடி.

யாரோடு விளையாடுகிறதோ, அவர்களை.

**★ அலைபாயுதே?**

எம்.எம்.முஸம்மில், குருநாகல்.

என் மனமும்தான்!



‘அலைபாயுதே’ படத்தில் மாதவன்–ஷாலினி

**★ சிந்தியா, எனக்கு ஓவியம் வரைதலில் மிகுந்த நாட்டமுண்டு; திறமையும் உண்டு, பத்திரிகைத் துறையில் ஈடுபடவும் மிக்க விருப்பம், ஆனால் என் தந்தையாரோ எழுதியும் கீறியும் எதுவும் சம்பாதிக்க முடியாது. பேசாமல் தன்னுடன் வந்து வியாபாரத்தைக் கவனிக்கும்படி கூறுகிறார். என்ன செய்வது?**

-பி.சத்தியகுமாரன், கொழும்பு-13.

எவ்வளவுதான் பணம் கிடைத்தாலும் ஒருவருக்கு ஈடுபாடு இல்லாத வேலையை அவரால் தொடர்ந்து செய்ய முடியாது. ஈடுபாட்டோடு இறங்கும் காரியத்திலேதான் வெற்றிகளும் சாத்தியம். உங்கள் தந்தையாருக்கும் சொல்வதற்காக ஒரு குட்டிக் கதை:

சோம்பேறியாக எந்த வேலையுமில்லாமல் திரிந்துகொண்டிருந்த ஒருவனைப் பார்த்து, “எதற்கு வேலை வெட்டியில்லாமல் ஊர்சுற்றித் திரிகிறாய்?” என்று ஒரு மனநல மருத்துவர் கேட்டார்.

“எனக்கு வேலை இல்லை, அதுதான்!” என்றான் அவன். “உனக்கு என்ன வேலை தெரியும்?” என்று கேட்டார் மருத்துவர்.

“பணம் கிடைக்கக்கூடிய வேலை எதுவானாலும் செய்வேன்!” என்றான் அவன்.

“அப்படியில்லைத் தம்பி, உன் திறமை எது என்று தெரிந்து கொண்டாலல்லவோ, அதற்குரிய வேலையைத் தேட முடியும்.”

“என் திறமை எதுக்கு பணம் கிடைக்குமாக இருந்தால் நான் எந்த வேலையும் செய்வேன்...”

சிறிது நேரம் யோசித்த மருத்துவர் அவனைத் தனது தோட்டத்திற்குக் கூட்டிச் சென்றார். தன் தோட்டத்தில் இருந்த ஒரு பெரிய மரத்தைக் காட்டி,

“நீ இதை வெட்டினால், ஒரு மணி நேரத்திற்கு நூறு ரூபா கூலி தருகிறேன், செய்கிறாயா?” என்று கேட்டார்.

அவனும் ஒப்புக் கொண்டு கோடரியை எடுத்தான்.

மனநல மருத்துவர் தடுத்து நிறுத்தினார்.

“ஒரு நிபந்தனை! வெட்டும்போது கோடரியின் கூர் முனை மரத்தின் மேல் படக்கூடாது. கோடரியை மறுபக்கம் திருப்பிப் பிடித்துக் கொண்டுதான் வெட்ட வேண்டும்” என்றார்.

“கோடரியைத் திருப்பிப் பிடித்து வெட்டினால் மரத்தை எப்படிப் பிளக்க முடியும்?” குழப்பத்தோடு கேட்டான் அவன்.

“அதைப் பற்றி உனக்கேன் கவலை? உனக்கு ஒரு மணி நேரத்துக்கு நூறுரூபா தருகிறேன். பேசாமல் வேலையைப் பார்...” என்றார் மருத்துவர்.

அவன் வெட்டத் தொடங்கினான். ஒரு மணி நேரம் ஆனதும் அவனுக்குச் சலித்துப் போனது. மருத்துவர் நூறு ரூபாவைக் கொடுத்துவிட்டு, “மேலும் ஒரு மணிநேரம் வெட்டலாம் நீ!” என்றார். அவன் தயங்கினான். “மணிக்கு ஆயிரம் ரூபா தருகிறேன் செய்” என்றார்.

“சரி” என்று மீண்டும் வெட்ட ஆரம்பித்தான். மரத்தில் ஒரு சிறு பிளவு கூட ஏற்படவில்லை, அவனுக்குப் பயங்கர எரிச்சல். ஆனாலும், ஆயிரம் ரூபா கிடைக்கிறதே என்று பல்லைக் கடித்துக் கொண்டு பின்பக்கக் கோடரியால் ஒரு மணி நேரம் வெட்டிக் கொண்டிருந்தான்.

மருத்துவர், சொன்னபடியே ஆயிரம் ரூபாவைக் கொடுத்துவிட்டு, “இன்னும் ஒரு மணிநேரம் நீ இதுபோல் வேலை செய்தால் பத்தாயிரம் ரூபா தருவேன், செய்” என்றார்.

பத்தாயிரம் ரூபா ஆசையில் மீண்டும் அவன் மரத்தை வெட்டுவதற்கு முனைந்தான். அவனால் முடியவில்லை. சிறிது நேரத்தில் கோடரியை வீசிவிட்டு மருத்துவரிடம் வந்தான்.

“மரத்தை வெட்டும்போது ஒரு சிறு துண்டாவது சிதறவேண்டும். பின்பக்கக் கோடரியால் வெறுமனே மரத்தை அடித்துக் கொண்டிருக்க என்னால் முடியவில்லை. வேண்டுமானால் நீங்கள் தந்த பணத்தைத் திருப்பித் தந்து விடுகிறேன். தயவு செய்து என்னை விட்டு விடுங்கள்” என்று கெஞ்சத் தொடங்கினான்

## ஸ்போர்ட்ஸ்

### தென்னாபிரிக்க அணி முழு ஆதரவு

ஊழல் புகாருக்கு இலக்காகியுள்ள தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் முன்னாள் கப்டன் ஹன்சி குரோன்யோவுக்கு, தென்னாபிரிக்க கிரிக்கெட் அணி முழு ஆதரவு தெரிவித்துள்ளது.

“தவறு செய்வது மனித இயல்பு. ஒரு தவறு செய்து விட்டார் என்பதற்காக குரோன்யோவை ஒதுக்கி வைத்துவிட முடியாது”, எனத் தென்னாபிரிக்க அணியின் புதிய கப்டன் ஷோன் பொலக்கும் மற்றைய வீரர்களும் தெரிவித்துள்ளனர்.

ஊழல் புகார் குறித்து விசாரிக்க அமைக்கப்படும் குழுவுக்குத் தென்னாபிரிக்க அமைச்சரவை முழு ஆதரவு அளித்துள்ளது.



இந்த விவகாரத்தில் நடந்த உண்மை விவரங்களைக் கண்டறியும் பணியை இந்த விசாரணைக்குழு மேற்கொள்ளும் என்று அந்நாட்டின் வெளியுறவுத்துறை துணை அமைச்சர் அஜீஸ் பஹாத் தெரிவித்துள்ளார்.

### ஆசியக்கோப்பைப் போட்டிகள்

மே மாத இறுதியில் நடைபெறவுள்ள ஆசியக்கோப்பை கிரிக்கெட் போட்டியின் முதல் போட்டியில் நடப்பு சாம்பியன் பங்களாதேஷும், இலங்கையும் மோதுகின்றன.

இப்போட்டிகள் பங்களாதேஷின் தலைநகர் டாக்காவில் மே 30ம் திகதி முதல் ஜூன் 8ம் திகதி வரை நடைபெறுகின்றன.

இதில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை பங்களாதேஷ் ஆகிய 4 அணிகள் பங்கேற்கின்றன.

1997ம் ஆண்டில் கடைசியாக நடைபெற்ற ஆசியக் கோப்பைப் போட்டியில் இரண்டாவது இடத்தைப் பெற்ற இந்தியாவும், இலங்கையும் ஜூன் 1ம் திகதி மோதவுள்ளன.

போட்டி நடைபெறும் திகதிகள் மாற்றப்பட்டுள்ளன. அதன்படி முதல் போட்டி மே 30ம் திகதி நடைபெறுகின்றது.

இப்போட்டிக்காக இந்திய அணிக்காக 20 வீரர்கள் தெரிவு செய்யப்பட்டு மே 14ம் திகதி முதல் 23ம் திகதி வரை பயிற்சியளிக்கப் படவுள்ளது. பின்னர் போட்டியில் பங்கெடுக்கும் இந்திய அணி தேர்வு செய்யப்படும்.

ஆசியக் கோப்பைப் போட்டிகள் பற்றிய விவரங்கள் வருமாறு:

| | | |
|---|---|---|
| மே | 30 | இலங்கை-பங்களாதேஷ் |
| ஜூன் | 01 | இலங்கை-இந்தியா |
| ஜூன் | 02 | பாகிஸ்தான்-பங்களாதேஷ் |
| ஜூன் | 03 | இந்தியா-பங்களாதேஷ் |
| ஜூன் | 04 | இலங்கை-பாகிஸ்தான் |
| ஜூன் | 06 | இந்தியா-பாகிஸ்தான் |
| ஜூன் | 08 | இறுதிப்போட்டி |

# மன்னாதி மன்னன்

04

## விக்கிரமாதித்தன் பிறப்பு!

இராஜகுமாரன்

எட்டுநாட்கள் வரை பேச்சு மூச்சற்று தனது திண்ணையில் கிடந்த சந்திரவர்ணனை சிகிச்சையளித்து, தெம்பூட்டி விட்ட அலங்காரவல்லியிடம் எதுவும் கூறாமல் சந்திரவர்ணன் வெளியேறிக் கொண்டிருந்தான். இதனைக் கேள்வியுற்ற அலங்காரவல்லி ஓடோடிவந்து அவனைத் தடுத்தாள்.

"உயிர் போகும் நிலையில் கிடந்த தங்களை இந்த அளவுக்கு உயிரூட்டி விட்ட என்னிடம் சொல்லாமலே புறப்பட்டு விட்டீர்களே! இது நியாயம் தானா?" என்று அலங்காரவல்லி கேட்டாள்.

தன் தவறை உணர்ந்த சந்திரவர்ணன், "மன்னிக்க வேண்டும் தாயே! தாங்கள் செய்த உதவிக்கு என் வாழ்நாள் முழுவதும் நான் கடமைப்பட்டுள்ளேன். இப்பொழுது நான் எனது ஊருக்குச் செல்ல விடை கொடுக்க வேண்டுகின்றேன்!" என்று கைகூப்பி வணங்கினான்.

தாயே என்று தன்னை சந்திரவர்ணன் அழைத்ததைக்கேட்டு அலங்காரவல்லி தீயை மிதித்தவளைப்போல் துடித்தாள்.

"அன்பரே! என்னை வணங்க வேண்டாம். நான்தான் உங்களை வணங்க கடமைப்பட்டுள்ளேன். உணர்வற்று தாங்கள் படுத்திருந்தபோதே தங்களைப் பார்த்ததும் என் மனத்தில் தங்களைக் குடியேற்றி விட்டேன். ஆகவே தாங்கள் என்னை தங்கள் மனைவியாக ஏற்றருள வேண்டும்!" என்று சந்திரவர்ணனின் தாள் தொட்டு வணங்கினாள்.

சந்திரவர்ணன் துணுக்குற்றான். "பெண்ணே! உலகத்தின் கலைகள் யாவற்றையும் கற்றுத் தீர்த்து பிரம்மச்சாரியாகவே வாழ விரும்புபவன் யான். ஆகவே என்னை விடுத்து வேறொரு இளைஞனைக் கைபிடித்து நீ வாழ வேண்டியவள்- ஆகவே என்னை மறந்து விடுவதே உனக்கு நன்மை பயக்கும்!" என்று கூறிய வண்ணம் தனது காலை முன்னெடுத்து வைத்தான்.

ஆனால் அலங்காரவல்லி அவனது காலைக்கட்டிப் பிடித்த வண்ணம் போக வொட்டாமல் எடுத்தாள். இருவருக்குமிடையில் பலத்த வாக்குவாதம் ஏற்பட்டது.

அலங்காரவல்லி அழுதவண்ணம், "அன்பரே! நான் தாசி குலத்தில் பிறந்தவள்தான். இருப்பினும் நான் இன்னும் கன்னியாகவே காலம் கடத்துகிறேன். என்னுடைய உள்ளத்தில் இதுவரை நான் வேறு எவருக்கும் இடம் கொடுக்கவேயில்லை. ஆகவே தாங்கள் என்னை தங்கள் மனைவியாக ஏற்காவிட்டால் தங்கள் காலடியிலேயே என் உயிரை விட்டு விடுவேன்!" என்று அழுது புலம்பினாள்.



இதற்கிடையில் அலங்காரவல்லியின் தோழிகளில் சிலர், அரண்மனைக்குச் சென்று நடந்த சம்பவத்தை மன்னரிடம் கூறிவிட்டனர்.

மன்னர் சுத்தவர்மன் தனது மதியூக மந்திரியை, அலங்காரவல்லியின் இல்லத்துக்கு அனுப்பி சந்திரவர்ணனையும், அலங்காரவல்லியையும் உடன் அரண்மனைக்கு அழைத்து வரும்படி ஆணையிட்டார்.

அவர்கள் வந்ததும் முறைப்படி விசாரணையை ஆரம்பித்தார். சந்திரவர்ணனை நேரடியாகக் கண்டதும் அவனுடைய முகத்தில் அறிவொளி வீசியதை மன்னரால் காண முடிந்தது. பிறப்பால் அவனொரு பிராமணனாகத் தான் இருக்க வேண்டும் என்றும் கண்டு கொண்டார்.

ஆகவே இவர்களுடைய பிணக்கைத் தீர்க்க தன்னால் ஆகாது என்று கருதிய மன்னர் சுத்தவர்மன் தனது அரச குருவை அழைத்து இந்த வழக்கில் நல்ல தீர்ப்பை வழங்கு மாறு கேட்டுக் கொண்டார்.

அரசகுரு இவ்வாறு தனது முடிவைக் கூறினார், "வருணாச்சிரம தர்மத்தின்படி பிராமணனாகப் பிறந்த ஒருவன் பிராமணப் பெண்ணையே மணந்து கொள்ள வேண்டும். வேறு பெண்ணைமணக்க வேண்டி நேர்ந்தால் நான்கு வர்ணங்களில் இருந்தும் ஒவ்வொரு பெண்ணை ஒரே சுப நேரத்தில் திருமணம் முடிக்க வேண்டும்!" என்று கூறினார்.

சந்திரவர்ணனிடம் நிலமையைவிளக்கி "அலங்காரவல்லியின் விருப்பத்தை நீர் நிறைவேற்றியேயாக வேண்டும். ஏனெனில் அவள் தான் எட்டு நாட்கள்வரை மயங்கிக் கிடந்த உம்மை இன்று உயிருடன் நடமாட வைத்திருக்கிறாள். சுருங்கச் சொன்னால், உமக்கு மறுவாழ்வு அளித்தவள் அவள். அவள் பிறப்பால் தாசியேயானாலும் எனக்கு மகளைப் போலாவாள். நீர் அவளை மணந்து கொள்ளும் போது நடைமுறை விதிப்படி பிராமணப் பெண் ஒருத்தியையும் அரச குலத்தைச் சேர்ந்த பெண்ணொருத்தியையும் வைசிய குலப் பெண்ணொருத்தியையும் ஏக காலத்தில் மணந்து கொள்ள வேண்டும்." என்று கூறிய குரு மன்னரிடம் திரும்பி,

"நானும் ஒரு பிராமணன்தான். சந்திரவர்ணனுக்கு எனது மகளை மணமுடித்து வைக்க ஆயத்தமாக இருக்கிறேன், ஏனைய இரு குலப் பெண்களையும் தேர்ந்தெடுத்து மணமுடித்து வைக்க வேண்டிய பொறுப்பு தங்களைச் சார்ந்தது!" என்று கூறி முடித்தார்.

மன்னர் சுத்தவர்மன் குரு கூறியதை ஏற்றுக் கொண்டவராக, தனது மகளையும் சந்திரவர்ணனுக்கு மணமுடித்துவைக்க விருப்பம் தெரிவித்தார்.

அரண்மனையில் அரசப்பணியிலிருந்த சோமநாதன் செட்டி என்பவர் தனது மகளை சந்திரவர்ணனின் மணமகளாக்க விருப்பம் தெரிவித்தார்.

அரண்மனையில் எடுக்கப்பட்ட இந்த முடிவின் பிரகாரம் அடுத்து வந்த சுப முகூர்த்தத்தில் மேற்கூறப்பட்ட நான்கு பெண்களையும் மாங்கல்யம் அணிவித்து சந்திரவர்ணன் தனது மனைவியர் ஆக்கிக் கொண்டார்.

சிலகாலம் தம்பதியினர் அரண்மனையில் தங்கியிருந்தனர், பின்னர் சந்திரவர்ணன் தனக்கு அளிக்கப்பட்ட சீர்வரிசைகளையும் மணப்பெண்களையும் தன்னுடன் அழைத்துக் கொண்டு தனது நாடான நந்தியாபுரம் போய்ச் சேர்ந்தான். அங்கு சேர்ந்து ஒரு வருடத்தில் நான்கு பெண்களும் நான்கு ஆண் குழந்தைகளைப் பெற்று எடுத்தனர்.

முதல் மனைவியான, அரசகுருவின் மகள் கல்யாணிக்குப் பிறந்த குழந்தைக்கு வல்லரிஷி என்று பெயரிட்டனர்.

அரச குமாரியான சித்திரரேகைக்கு பிறந்த மகனே விக்கிரமாதித்தன் என்ற பெயரைப் பெற்றான்.

செட்டி மகள் கோமளாங்கிக்கு பிறந்த மகன் பட்டி என்று பெயர் சூட்டப்பட்டான்.

அலங்காரவல்லி பெற்றெடுத்த மகன் பத்திரகிரி என்று பெயர் பெற்றான்.

நான்கு பிள்ளைகளும் உரிய காலத்தில் முறைப்படி கல்வி, மற்றும் கலைகள் யாவற்றையும் கற்று தேர்ந்தார்கள்.

மன்னன் சுத்தவர்மனுக்கும் வயதாகி விட்டது. அவருக்கு ஆண் வாரிசு கிடையாது. ஆகவே தனது மருமகனாகிய சந்திரவர்ணனை அழைத்து ஆட்சிப் பொறுப்பை ஒப் படைத்தார். சகல கலைகளையும் கற்றுத் தேர்ந்தவனான சந்திரவர்ணன் கன்னியாபுரி நாட்டை செம்மையாக பரிபாலனம் செய்து வந்தார்.

அவருடைய மக்கள் நால்வரும் இளமைப் பருவமடைந்திருந்தனர். ஆனால் எவருக்கும் திருமணம் ஆகவில்லை. தனக்குப் பின் கன்னியாபுரியை ஆளப் போவது யார் என்ற கவலை மன்னர் சந்திரவர்ணனை வாட்டியது.

ஒருநாள் சந்திரவர்ணன் தனது நான்கு புதல்வர்களையும் அழைத்து, தனது நிலையை விளக்கினார்.

அலங்காரவல்லிக்குப் பிறந்த பத்திரகிரியை மிக நெருக்கமாக அணைத்து மன்னர் விம்மி விம்மி அழுதார். இதனைக் கண்ட ஏனைய மூன்று குமாரர்களும் காரணம் தெரியாமல் தவித்தனர்.

மன்னர் பத்திரகிரியைப் பார்த்து, "மகனே! முறைப்படி ஆட்சிபீடமேற வேண்டியவன் நீதான். ஆனால் உனக்குப் பிள்ளைகள் பிறந்தால் எனக்கு முக்தி கிடைக்காது!" என்று விம்மலுடன் கூறினார்.

பத்திரகிரி தந்தையைப் பார்த்து "தந்தையே! தங்களுடைய கவலை எனக்குத் தெரிகிறது. நான் திருமணம் செய்து கொள்ளப் போவதில்லை. எனவே எனக்குக் குழந்தைகள் பிறக்க வழியில்லை. ஆகவே தாங்கள் என் சகோதரர்களில் ஒருவருக்கு முடி சூட்டுங்கள்!" என்று சொன்னார். மன்னர் பத்திரகிரியைப் பார்த்து "மகனே நீ திருமணம் செய்யலாகாது என்று நான் கேட்க மாட்டேன். ஆனால் உனக்கு குழந்தைகள் பிறப்பதுதான் சிக்கலை உருவாக்கும். ஆகவே உனக்கு குழந்தைகள் பிறக்காமல் இருப்பதற்கு நான் கூறும் மந்திரத்தை தினசரி ஓதி வரவேண்டும்!" என்று கூறி மந்திரத்தைக் கற்றுக் கொடுத்தார்.

*(மன்னன் வருவான்...)*

# காபூ.கந்தசாமிக்கு சளப்பி கந்தர் எழுதுவது

**கந்தசாமி அண்ண!**

எண்ட நேரத்தையும் மினக் கெடுத்தி- கந்தசாமி அண்ணைக்கு கடதாசி ஒண்டு எழுதிப் போட்டு பதில் கடதாசி போடுவாரெண்டு காத்துத்துக் கிடந்த நான். ஒரு அசுமாத்தமும் இண்டைக்கு வர இல்ல. ஒவ்வொரு நாளும் காலமில கடப்படியில, எப்ப பியோண் மணி அடிப்பானெண்டு கிடந்தநான். எங்கட கடப்படியால பியோண்ட வைசிக் கோல் விசுக்கெண்டு இலுவா ஒடித்து போகுது.

யாழ்ப்பாணத்துக்கு கடதாசி உங்கட கையில போய்ச் சேர கன காலம் எடுக்குமாம். மலையில இருந்து கடல் கப்பலும் போறதில்லையாம். போனாத் தானாம் எங்கட கடதாசியும் போகுமெண்டு கேள்விப் பட்ட நான்.



இதில கனமாக யோசிக்கிறதுக்கும் ஒண்டுமில்ல. ஏனெண்டா, சண்டையும், சண்ட மாருதமாக நடக்குதாம் எண்டு கண்டு மணியும், நேத்து வருஷம் கிருஷம் எண்டுத்து றவுண்ணுக் குள்ள வந்தாப்ப கதைச்சிப் போட்டான். "நீங்க இந்த மட்டக்களப்பிலதானே அண்ண இருக்கியள். என்ன நீங்க எதோ இங்கிலாந்தில இருக்கிற போல கதைக்கிறியள்?" எண்டு-கொஞ்சம் காரமா கதைச்சிப் போட்டான்.

எல்லாரும் கண்டாச் சொல்லுறாப்பில- வீட்ட வரவேணுமெண்டு நினைச்சிப் போட்டுத்தான், வாழச் சேனையில இருந்து வெளிக்கிட்ட நான் எண்டு சொன்னான்-கண்டுமணி. பறவாயில்ல வா பின்ன போவம் எண்டு கூட்டித்துப் போயித்தான் வீட்ட.

சும்மா இல்ல வருஷம் இலுவா? என்னவும் பாத்தித்து கீத்தித்துத்தான் போக வேணுமெண்டு, ஆக்கினப்படுத்திப் போட்டான்- கண்டுமணி. பின்ன ஒண்டு செய்ய ஏலாம- நம்மட கோணர் பாருக்குள்ள போன நாங்க. வீட்ட போய்ச் சேரக்குள்ள கால் நிலத்தில படாத மாதிரித்தான் போன நாங்க. இல்லாட்டி-என்ன வருஷம் எண்டு உறுக்கிப் போட்டான் நம்மட-கண்டுமணி.

இந்த கடதாசி யாழ்ப்பாணம் போற, வாறதப்பத்தி கதைச்சித்துக் கிடந்த நாங்க ஒரு பொடியன் வெளிநாட்டில இருந்து கிரானுக்குப் போட்ட கடதாசி ஒண்டு- ஈரானுக்குப் போய், சுத்து சுத்தெண்டு சுத்திப் போட்டு பொடியன் ஊட்ட வந்த புறகு தானாம் கிடைச்சிருக்கு எண்டு, அப்ப நாம பறவாயில்ல எண்டு போட்டன்.

இந்த முற வருஷப் புறப்பு நல்ல கலகலப்பு அண்ண. சனத்தோட சனமாக தமிழ்ச் சனம் கனக்க கடையில சாமான் வாங்கித்து- சந்தோஷமாக போனதுகள். யாழ்ப்பாணத்தால அங்க இங்க இருக்கிற சனமெல்லாம், மட்டக்களப்பில சீவிக்கிற சாதி சந்தானத்த கண்ணில வச்சித்துப் போறதுக்கு வந்ததுகள்.


யாழ்ப்பாணத்தில வாழைப்பழம் நல்ல மலிவாமே-எண்டு கதையக் குடுத்தநான். ஓமாம். யாழ்ப்பாணத்துக்கு இப்ப போய்ச் சேர்ந்த நம்மட சனங்களெல்லாம் தோட்டமும், துரவுந்தானாம். வெங்காயமெண்டா இனி இல்லெண்ட விளைச்சலாம். வெங்காயத்த விக்கிறதுக்கு ஏலாம வெட்டிப் புதைக்கிறாங்களாம், எண்டு சொல்லிட்டாங்க.

ஒரு கிலோ வாழைப்பழம்-மூன்று ரூபாய்க்கும் தேவையில்லையாம்-எண்டு கேள்விப்பட்ட நான். மாட்டுக் கொட்டிலுக்குள்ள குல குலையா தொங்குதாம். மனுஷன் திண்டு மிஞ்சிறத மிருக சாதிகளுக்கு போடுற காலம் போய் எல்லாரும் திண்டு மிஞ்சிற காலம் வந்து போட்டுது இலுவா அண்ணா?

அண்ண! எவரு எதச் சொன்னாலும்- ஒரு கதையில நான் அவயள மடக்கிப் போடுவன். யாழ்ப்பாணத்து ஆக்கள் சரியான பிரயாசிகள் அண்ண. எற்பன்வசதிய காட்டிப் போட்டா. கடுமயா உளச்சி, பயன் காட்டிப் போடுவாங்க. யாழ்ப்பாணம் செம்மண் பூமி இலுவா அண்ண?

செம்பாட்டு மண்ணுக்கு பின்னதான் விளைச்சலுக்கு, பழங்களும் இனி இல்லெண்ட இனிப்பு இலுவா? இப்ப எண்டாப்பில இரிக்கி. யாழ்ப்பாணத்தில கறுத்தக் கொழும்பானும், அம்பலவி மாம்பழமும் நம்மட ஊரில விளையிற பழத்தையெண்டாலும், பனங்கள்ளையெண்டாலும்- ஆரிர ஆக்கினையும் இல்லாம தின்னோணும், குடிக்கோணும், அதுக்குத் தானே அண்ண, நாமெல்லாம் பாடுபடுறம். எப்ப எண்டாலும் அப்பிடியான நாளொண்டு வருந்தானே அண்ண?

எங்கட கண்டுமணியிற்ற- நான் சொல்லிப் போட்டன். காதில பூ வைக்கிற ஆக்களெல்லாம்-சாமி ஆகிரமுடியாதெண்டு. டெலி போணும் கதைக்கிதில்லையாம் எண்டு கேள்வி. ஏலுமெண்டா கதைச்சிப் பாப்பன். வீட்ட சொல்லி வையுங்க.



Regd. as a News Paper at the G.P.O.(QD/63/NEWS/2000)




# ஓட்டம்



← இந்தியாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி பில் கிளின்டன் சென்ற சமயம் அவரது பார்வையில் படுவதற்காக இரண்டு கார்களைத் தயாரித்திருந்தார் இந்தியாவின் ஹைதராபாத் நகரைச் சேர்ந்த கார் வடிவமைப்பாளர் காளா யோமினா சுதாகர்.

'அமெரிக்காவில் இல்லாத கார்களா இந்தியாவில்?' என்று கேள்வி எழுப்பலாம். ஆம் இந்தக் கார்கள் அமெரிக்காவில் இல்லைதான்.

38 வயதான சுதாகர் தயாரித்திருந்த ஒரு கார் கப்-சோஸர் வடிவிலும், மற்றக்கார் உணவுப் பொருள் (பர்கர்) வடிவத்திலும் அமைக்கப்பட்டிருந்தது.

ஆனால் கிளின்டன் இந்தியா சென்று, நாடு திரும்புவதற்குள் அந்தக் காரின் தயாரிப்பு வேலைகள் முடிவடையவில்லை. மிக அண்மையில் தான் இதன் வேலைகள் முற்றுப் பெற்றன. ■






↓ அன்றும் இன்றும் உலகில் மக்கள் தொகைகூடிய நாடு சீனாதான். கிறிஸ்துவுக்கு முன் 200ம் ஆண்டில் சீனாவின் மக்கள் தொகை ஒரு கோடி 37 இலட்சமாக இருந்துள்ளது. ஆனால் நவ சீனாவில் மக்கள் தொகையைக் கட்டுப்படுத்த வேண்டிய அவசியம் சில காலத்துக்கு முன்னர்தான் எழுந்தது.

# சவாரி

'நாமிருவர் - நமக்கொருவர்' என்ற குடும்பக் கட்டுப்பாடு கடுமையாகக் கடைப்பிடிக்கப்பட்டு வருவதால் சீனாவின் குழந்தை பிறப்பு விகிதாசாரம் மிகவும் குறைந்து விட்டது.

குழந்தைகள் உற்பத்தி குறைந்தாலும் அந்நாட்டில் சைக்கிள் உற்பத்திதான் கணிசமாக அதிகரித்திருக்கிறது. மக்கள் போக்குவரத்துக்கு பெரும்பாலும் சைக்கிள் சவாரியையே நாட வேண்டிய கட்டாயத்தில் ... ■

# பூனைகளின் இன்னிசைக் கச்சேரி



→ கண்களைக் கவரும் அரங்குகள், உள்ளத்தை வருடும் இசை ஆகியவற்றுடன் கடந்த 19 வருடங்களாக வெற்றிகரமாக நடந்து வரும் 'கட்ஸ்' (CATS) என்ற இசை நிகழ்ச்சி வரும் ஜூன் மாதத்துடன் அமெரிக்காவில் நிறுத்தப் படவுள்ளது.

பிரபல ஆங்கிலக் கவிஞர் 'ஓல்ட் பொஸம்ஸ் புக் ஒஃப் பிரக்டிக்கல் கட்ஸ்' (OLD POSSUM'S BOOK OF PRACTICAL CATS) என்ற கவிதையை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்ட இந்த இன்னிசை நிகழ்ச்சியை நியூயோர்க் நகரில் மட்டும் சுமார் ஒரு கோடிப்பேர் வரை பார்த்து இரசித்திருக்கிறார்கள்.

இலண்டனில் 11.05.1981 தொடங்கப்பட்ட இந்தப் பூனைகளின் இன்னிசைக் கச்சேரி இன்னும் அங்கு வெற்றிகரமாக நடத்தப்பட்டு வருகிறது. ஜூன் மாதத்திற்குப் பின் இதை அமெரிக்காவில் பார்த்து இரசிக்க முடியாதவர்கள் இங்கிலாந்தில் கண்டு களிக்கலாம். ■



← பாகிஸ்தான் கிரிக்கெட் அணியில் இளவயதில் நுழைந்து அதிரடியால் கலக்கியவர் இன்ஸமாம்-உல் ஹக். 1992ம் ஆண்டு பாகிஸ்தான் அணி உலகக் கோப்பையைக் கைப்பற்ற உறுதுணையாய் இருந்தவர்களில் முக்கியமானவர்களில் ஒருவர் இவர்.

ஏனோ சில காலமாக இவரது ஆட்டம் சோபிக்கவில்லை. அதிக எடை காரணமாக விக்கெட்டுக்களுக்கிடையே விரைவாக ஓடி ஓட்டங்களைப் பெற முடியாதவர் என்ற குற்றச்சாட்டு இவர் மேல் உண்டு.

அண்மைக்காலமாக இவரது துடுப்பாட்டத்தில் ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது என்பதை மறுக்க முடியாது. அண்மையில் ஷார்ஜா போட்டிகளில் இந்தியாவுக்கெதிரான ஆட்டத்தில் இவர் ஆட்டமிழக்காமல் குவித்த 121 ஓட்டங்களை எளிதில் மறக்கமுடியாது. இந்த விளாசலில் 9 பவுண்டறிகளும், 5 சிக்ஸர்களும் அடங்கும்.

ஒரு நாள் போட்டியில் 6000 ஓட்டங்களும் டெஸ்ட் போட்டிகளில் 5000 ஓட்டங்களும் குவித்துள்ள இன்ஸமாம், பாகிஸ்தான் அணியில் தற்போது உள்ள அனுபவமுள்ள ஆட்டக்காரர் என்ற கருத்துக்கு மறுகருத்துக் கிடையாது.

# விளாசல்

## 2வது பிறந்தநாள் வாழ்த்து 09.05.2000

### றதீஸ்





இப்பத்திரிகை கொழும்பு-06, வெள்ளவத்தை, ... இலக்கத்தில் உள்ள ... அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்படுகிறது